
E-mail : omsakthieditorial@gmail.com
https://archive.org/search.php?query=omsakthi

பிப்ரவரி 2021
விலை ரூ.15


ஓம் சக்தி

நிறுவனர் :
நா. மகாலிங்கம்



தமிழ்த்தாய்

ஒரே சமயத்தில் 'இரண்டு' அல்ல, 'நான்கு' தேர்தல்கள்!



டாக்டர் நா. மகாலிங்கம்

நமது இந்திய தேசத்தில் நாடாளுமன்றத்திற்கு ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடக்கிறது. ஆட்சிக் கலைப்போ, கவிழ்ப்போ அநேகமாக இல்லை. அதனால் இந்த ஐந்தாண்டுக் கெடு சரியாகப் பின்பற்றப்படுகிறது. இது நாடாளுமன்றத்திற்கு (Parliament).

ஆனால், இந்தியாவிலுள்ள 29 மாநிலங்களிலும் இதேபோல ஐந்தாண்டுக்கு ஒருமுறை தேர்தல் 1952-இல் நடந்தது. 1957-இல் நடந்தது. 1962-லும் நடந்தது. அதற்குப் பிறகு தேர்தல்கள் ஐந்தாண்டுக்கு ஒருமுறை என இல்லாமல், எல்லா மாநிலங்களுக்கும் பலவாறு நடக்கத் தொடங்கிவிட்டது.

இவ்வாறு மாநிலங்களுக்குத் தேர்தல் ஆண்டுதோறும் இரண்டு, மூன்று மாநிலங்களுக்கு நடந்துகொண்டே இருக்கிறது. மாநிலத் தேர்தல் நடக்காத ஆண்டே இல்லை. இது நாடாளுமன்றத் தேர்தல் மூலம் மத்தியில் ஆட்சி அமைத்துள்ள கட்சிக்கு ஒரு விமர்சனமாகிவிடுகிறது.

மாநிலத் தேர்தல்களில் மத்தியக் கூட்டணி ஆட்சியின் கட்சி வெற்றிபெற்றால், அந்த வெற்றி மத்திய ஆட்சிக்கு ஒரு பாராட்டாகவும், பலமாகவும் அமைகிறது. தோற்றுப்போனால், மத்திய ஆட்சிக்கு அதுவே படகில் ஓட்டை விழுந்துவிட்டதாக விமர்சனம் செய்யப்படுகிறது. இதனால் மத்திய ஆட்சி, மக்கள் நலத் திட்டங்களை அமல்படுத்த அச்சப்படுகிறது.

இதையெல்லாம் உணர்ந்த முன்னாள் துணைப் பிரதமர் எல்.கே. அத்வானி அவர்கள், மாநிலங்களுக்கும், மத்தியிலும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்று குரல் கொடுத்தார். இந்தியத் தலைமைத் தேர்தல் முன்னாள் ஆணையர் எஸ்.ஒய். குரோஷி அவர்களும் இதே கருத்தை எதிரொலித்தார். இப்போது பாரதப் பிரதமர் நரேந்திர மோடி அவர்களும் சென்ற ஓராண்டாக இதையே வலியுறுத்தி வருகிறார். இப்போது இதற்கு ஆதரவாக சென்ற ஜனவரி மாதம் முன்னாள் அட்டர்னி ஜெனரல் சோலி சொராப்ஜி, சட்டசபைகளுக்கும், நாடாளுமன்றத் திற்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவது ஒரு நல்ல நடைமுறை என்று இந்தக் கருத்தை வரவேற்றுள்ளார்.

சட்டமன்றங்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் தேர்தல் ஒரே சமயத்தில் மீண்டும் நடத்தப்படுமானால், தற்போது ஆட்சி அமைத்துள்ள கட்சிகளின் ஆட்சி, சில மாநிலங்களில் ஆயுட்காலம் அதிகமாகும். சில மாநிலங்கள் ஆயுட்காலத்தை இழக்க நேரிடும். இந்தக் குறைபாட்டை நிவர்த்தி செய்வதைப் பற்றித்தான் சிந்திக்க வேண்டுமே தவிர, தேர்தல்களை இப்போது போல இருவேறு விதமாகத் தொடர்ந்து நடத்துவது ஜனநாயகமாகாது.

அருட்செல்வர் இரண்டு தேர்தல்கள் என்ன, நகராட்சி மற்றும் பஞ்சாயத்துகளுக்கான மேலும் இரண்டு தேர்தல்களையும் இத்துடன் இணைத்து நான்கு தேர்தல்களையும் ஒரேசமயத்தில் நடத்துவதுதான் நல்ல ஜனநாயகம் என்று 17 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியதை இம்மாதச் 'சுரங்கம்' பகுதியில் வாசகர்களுக்கு வழங்குகிறோம்.

- இ.ஆர்.

நேருஜியின் மறைவுக்குப் பிறகு தேர்தல்கள் 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடப்பதில்லை.

மதம், சாதி, மொழி, சினிமா ஆகிய அனைத்தும் தேர்தலில் இப்போது

இடம்பெறத் தொடங்கிவிட்டன. 5 ஆண்டுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சியானது, இடையிலேயே கலைக்கப்படுகிறது; அல்லது கவிழ்க்கப்படுகிறது. இதனால் மீண்டும் தேர்தல் வருகிறது. 5 ஆண்டுகளுக்கான தேர்தலாகவே அது நடக்கிறது. அதனால் செலவு அதிகரிப்பது மட்டுமல்ல, 5 ஆண்டு என்ற கால வரம்பும் மாநிலத்திற்கு மாநிலம் மாறுகிறது.

இப்படித்தான் கொஞ்சம் கொஞ்சமாக நாடு முழுவதும் மத்திய ஆட்சிக்கான நாடாளுமன்றத் தேர்தல் தனியாகவும், மாநில ஆட்சிக்கான சட்டமன்றத் தேர்தல்கள் தனியாகவும் நடைபெறத் தொடங்கிவிட்டன. இதனால்தான் நம் நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் எங்காவது ஒரு சில மாநிலங்களுக்குத் தேர்தல் நடந்து கொண்டே இருக்கிறது.

டிருக்கின்றன. உண்மையில், இக்கருத்தை எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லை. ஏனெனில், தேர்தல் மூலம் கட்சி – ஆட்சியை மத்தியிலும், மாநிலங்களிலும் உருவாக்கத் திட்டமிட்டபோது, ஒரே சமயத்தில்தான் மத்திய ஆட்சிக்கும், மாநில ஆட்சிகளுக்கும் தேர்தல்கள் நடைபெறும் என அரசியல் சட்டமே எதிர்பார்த்தது.

1952–இல் நடந்த முதல் தேர்தலும் *1957*–இல் நடந்த இரண்டாம் தேர்தலும், *1962*–இல் நடந்த மூன்றாம் தேர்தலும், *1967*–இல் நடந்த நான்காம் தேர்தலும் *5* ஆண்டுகளுக்கு ஒரே முறை சரியாகவே மாநிலங்களுக்கும், நாடாளுமன்றத்திற்கும் சேர்ந்தே நடந்தன.

1969–இல்தான் முதன் முதலாகச் சில மாநிலங்களின் தேர்தல்கள் சட்டசபைக்கு மட்டுமே தனியாக நடைபெற்றன. *1967*–ஆம் ஆண்டு தேர்ந்



இதுவல்லாமல் இடைத்தேர்தல்களும், நகராட்சி மற்றும் பஞ்சாயத்துக்களுக்கான உள்ளாட்சித் தேர்தல்களும் மாநிலங்களில் நடக்கின்றன.

தேர்தல்கள் இப்படிப் பலவாறாக நடைபெறுவதால் மத்திய ஆட்சியில் இடம்பெற்றுள்ள ஆளும் கட்சி, ஒரு வித மான அச்சத்தோடுதான் ஆள வேண்டியதாகிறது. உறுதியாக எந்த நடவடிக்கையையும் எடுக்க முடியாமல் தவிக்கும் நிலை அரசுக்கு ஏற்பட்டு விடுகிறது.

இவற்றை எல்லாம் மனதில் கொண்டு *2003* ஆகஸ்ட் *2*–ஆம் தேதியன்று மும்பையில் பேசிய துணைப்பிரதமர் எல்.கே. அத்வானி, லோக்சபாத் தேர்தலையும், மாநில சட்டசபைகளுக்கான தேர்தல்களையும் ஒரே நேரத்தில் நடத்துவது பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

இக்கருத்தினை வரவேற்றும், எதிர்த்தும் அபிப்பிராயங்கள் வந்து கொண்

தெடுக்கப்பட்ட *5* ஆண்டு மாநில ஆட்சிகளின் காலவரம்பு *1972*–இல்தான் நிறைவு பெற வேண்டும். ஆனால், அரசியல் காரணங்களுக்காக *5* ஆண்டுக் கால வரம்புக்கு முன்பே, சில மாநிலங்கள் தேர்தலை நடத்தின.

1971–இல் நடைபெற்ற பங்களா தேசத்திற்கான போரில் பாகிஸ்தானை வென்ற பிரதமர் இந்திராஜியை அப்போது வீராங்கனையாகப் பார்த்து நாடே பெருமைப்பட்டுக் கொண்டிருந்தது. அதனால், *1972*–இல் நடைபெற்றாக வேண்டிய தேர்தலை ஓராண்டு முன்கூட்டியே *1971*–இல் நடத்திவிடப் பிரதமர் இந்திராஜியே முன்வந்தார்.

இதேபோல் தமிழ்நாட்டில் *1969*–இல் அண்ணா மறைவுக்குப் பிறகு முதல்வராகப் பொறுப்பேற்றிருந்த கலைஞர், *1971*–இல் நடைபெறுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட நாடாளுமன்றத் தேர்

தலில் காங்கிரசோடு கூட்டணி வைத்துத் தமிழ்நாடு மாநில சட்டசபைத் தேர்தலையும் நடத்திட முன்வந்தார்.



அரசியல் சட்டப்படி *1967* தேர்தலில் ஆட்சி அமைத்த தி.மு.க. *1972* வரை ஆட்சி செய்யலாம். ஆனாலும், ஓர் ஆண்டுக்கு முன்பே தேர்தலை நடத்தியது.

இவ்வாறு *5* ஆண்டுக் கால வரம்பானது, *1967*–ஆம் ஆண்டுக்குப் பிறகு தமிழ்நாட்டில் முடிவுக்கு வந்துவிட்டது. சென்ற சுமார் *40* ஆண்டுகளாக மாநிலச் சட்டசபைகளுக்கும், மக்களவைக்கும் தனித் தனியாகவே தேர்தல்கள் நடைபெற்று வருகின்றன. இது அல்லாமல், மாநிலத்தில் மற்றும் மத்தியில் ஆட்சிகள் கவிழ்க்கப்பட்டாலோ, கலைக்கப்பட்டாலோ தேர்தல்களை முன்கூட்டியே நடத்த வேண்டியதாகி விடுகிறது.

“தேர்தலைப் பற்றிய நினைப்பில் சதாகாலமும் உள்ள மத்திய ஆளும் கட்சி, ஒரு நல்ல நிர்வாகத்தை நாட்டுக்குத் தர முடியாமல் தவிக்க நேர்கிறது” என்று துணைப்பிரதமர் தமது மனதுக்குள் இருந்து வந்த கவலையை மும்பையில் வெளிப்படுத்தி விட்டார்.

இதே நிலைதான் பிரதான எதிர்க் கட்சி கட்சி மத்தியில் ஆட்சி அமைத்தாலும் ஏற்படும்.

ஒரே சமயத்தில் மக்களவை (லோக் சபா), சட்டசபைத் தேர்தல்களை நடத்தி விடுவதை வரவேற்கும்போது, இன்னொரு யோசனையையும் அனைத்து அரசியல் கட்சிகளும் பரிசீலிக்க வேண்டும்.

நாடாளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் ஒரே சமயத்தில் தேர்தல் என்றால், ஒரு வாக்காளருக்கு இரண்டு ஓட்டுகள். அதே வாக்குச்சாவடியில் நகராட்சிக்கும், பஞ்சாயத்துக்கும் என மேலும் இரண்டு ஓட்டுக்களை வாக்காளர்களுக்குத் தருவதில் என்ன சிரமம் இருக்க முடியும்? இன்னொரு வகையில் இதுவும் ஒரு சிக்கன நடவடிக்கையாகத் தானே அமையும்!

தேர்தல்களை ஒன்றாக நடத்தினால், அத்தனை அரசியல் கட்சிகளுக்கும் தேர்தல் பணிகளைச் செய்ய ஊழியர்கள் நகரத்திலும், கிராமத்திலும் ஒரு சேரக் கிடைப்பார்கள். அதனால், அரசியல் கட்சிகளே இதனை உற்சாகமாக வரவேற்க வேண்டும்.

துண்டு துக்காணியாகத் தேர்தல்கள் நடந்தால்தான் ராணுவத்தைப் பாதுகாப்புக்கு அனுப்புவது சாத்தியமாகும்.

சட்டம் ஒழுங்குப் பிரச்சனையைச் சமாளிக்கக் காவல் துறை – ராணுவம் மட்டுமே பயன்படுத்த வேண்டுமென்பதில்லை. ஊர்க்காவல்படை என்பதை உருவாக்கி உள்ளோம். அவர்கள் ஏற்கெனவே பல்வேறு பணிகளில் உள்ளவர்கள். ஆர்வத்தின் காரணமாகவும், அதற்கான உடல் தகுதி காரணமாகவும் காவல்துறைக்கு உதவுபவர்களாகத் தாங்களே விரும்பி இப்பணி செய்ய முன்வந்து உள்ளனர். இதனை மேலும் அதிகரிக்கலாம். இதே போலக் கல்லூரிகளிலும் பள்ளிகளிலும் தேசிய மாணவர் படை (என்.சி.சி), சாரணர் இயக்கங்கள் உள்ளன.

இப்போது முக்கியமான பண்டிகை நேரங்களில் சாலைப்போக்குவரத்தை ஒழுங்குபடுத்தவும், ஆலயங்களில் நெரிசலைச் சமாளிக்கவும் இம்மாணவர் படைகளைத்தான் காவல்துறை உபயோகித்து வருகிறது.

இவர்களுக்கு மேலும் உரிய பயிற்சி கொடுத்து அந்தந்தப் பள்ளிகள் உள்ள பகுதிகளில் தேர்தல் நேரத்தில் உருவாகும் சட்டம் ஒழுங்குப் பிரச்சனையைச் சமாளிக்க இவர்களைப் பயன்படுத்தத் திட்டமிடலாம்.

அமெரிக்க மாணவர், கல்லூரியில் படிப்பு முடிந்த பிறகு, ராணுவத்திலும் ஒரு சில ஆண்டுகள் கட்டாயம் பணி செய்ய வேண்டும் என்று ஆக்கி உள்ளனர். அதேபோல நாமும் கல்லூரி மாணவர்களை ஒருசில ஆண்டுகளுக்குக் கட்டாய ராணுவப் பணிபுரிய வேண்டும் என ஆக்கினால், தேர்தல் நேரத்தில் உருவாகும் சட்டப்பிரச்சனையைச் சமாளிப்பதற்கு அவர்களை உபயோகிக்கலாம்.

நமது சட்டசபை, மக்கள் சபை, நகர சபை, பஞ்சாயத்து ஆகிய நான்குக்குமான தேர்தல்களை ஒரே நாளில் அல்லது ஒரு சில நாட்களில் நடத்துவது தான் ஆட்சி செய்வதற்கு நல்லது. ●

மருத்துவம்





கொரோனாவிற்கான எளிய சிகிச்சை முறை

சக்தி குழும நிறுவனங்களின் **தலைவர் டாக்டர் ம. மாணிக்கம்** அவர்கள் கடந்த 16 வருடங்களாகப் புற்று நோய் மற்றும் நீண்டநாள் குணமடையாத நோய்களைத் தடுக்கவும், தீர்க்கவும் ஒரு மருந்தினைக் கண்டுபிடிக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வருபவர்.

அவர், கொரோனா வைரஸ் கிருமியால் உடலில் எதிர்ப்பு சக்தி குறைவதைத் தடுக்க 'மிராக்கிள்' (Mirakle) பானத்தை அறிமுகப்படுத்தினார். இது தமிழக அமைச்சர்கள், அரசு உயர் அதிகாரிகள் மூலம் பணியாளர்களுக்கும், நோயாளிகளுக்கும் ஒரே சமயத்தில் வழங்கப்பட்டன. இதில் நல்ல பலன் கிடைத்ததை அறிய முடிந்தது.

நாங்கள் கஸ்தூர்பா காந்தி சித்த மருத்துவமனையைக் கோவையில் நடத்தி வருகிறோம். தீராதப் பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறோம். நாங்களும் கொரோனா வராது தடுக்கும் மருந்தாக, சித்த மருந்துகளை வழங்கி வருகிறோம். அதனால் நோயிலிருந்து பாதிக்கப்பட்டவர் மீண்டு வருவதையும் கண்டறிந்தோம்.

இந்தச் சூழ்நிலையில், சித்த மருந்துகளுடன் மிராக்கிள் பானத்தையும் (Mirakle Vitamin-C) சேர்த்து வழங்கிய போது, கொரோனாத் தொற்றில் உள்ளவர்கள் மீண்டுவர 14 நாள்கள் ஆகிற நிலையில், இப்பானத்தைத் **தொடர்ச்சியாக** நோயாளிகள் சாப்பிடும்போது, 5 முதல் 7 நாள்களிலேயே அவர்கள் நிவாரணம் பெற்றுத் தொற்றிலிருந்து விடுதலை பெற்றது ஆச்சரியப் படுத்தியது.

இவ்வாறு ஒரு நோயாளிக்கு மட்டுமல்ல; இரு நோயாளிகளுக்கு மட்டுமல்ல, கடந்த 8 மாதங்களில் சுமார் மூவாயிரம் நோயாளிகளுக்கும் மேல் தரப்பட்டு, தமிழகம் முழுவதும் மிராக்கிள் பானம் குடித்தவர்களில் ஒருவர்கூட கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டவர் பக்கவிளைவுகளுக்கு ஆளாகவில்லை என்பதும் எங்களை ஊக்கப்படுத்தியது.

சில நோயாளிகள் மனம் உவந்து தங்கள் அனுபவங்களை நம்மோடு பகிர்ந்து கொண்டதே இதற்குச் சாட்சி.

இதில் ஒருசில வித்தியாசமான நிகழ்வுகளும் இருந்தன. கோவை மாவட்டத்தைச் சேர்ந்த ஒருவர் தங்கள் வீட்டில் அனைவரும் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டு இருப்பதாகவும், அதில் தங்களுடைய மருமகள் நிறைமாதக் கர்ப்பிணியாக



டாக்டர் **பி. சரவணன்,** பி.எஸ்.எம்.எஸ்.

இருப்பதால், அவருக்கும் இந்தத் தொற்று ஏற்படுமா? பிரசவத்தின்போது தொந்தரவு இருக்குமா? என்று கேட்டார்.

அவர்களுக்குச் சித்த மருந்துடன் ‘மிராக்கிள்’ பானத்தையும் சேர்த்துக் குடித்து வருமாறு சொன்னோம். ஒரு வாரத்தில் அப்பெண்மணிக்குப் பிரசவ வலி ஏற்பட்டது. கோவையில் புகழ் பெற்ற மருத்துவமனைக்குக் கொண்டு சென்று சேர்த்தனர்.

அவரைப் பரிசோதனை செய்த போது அவருக்கும் தொற்று இல்லை. பிறந்த குழந்தைக்கும் தொற்று ஏற்பட வில்லை.

குடும்பத்தில் அனைவருக்கும் தொற்று ஏற்பட்டிருந்தும் இந்த இரு வருக்கும் தொற்று ஏற்படவில்லை என்பதற்கு Mirakle-தான் காரணம்.

நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் பகுதியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற ஆசிரியர் ஒருவர், வயது 73. கடந்த செப்டம்பர் மாதம் இவருக்குக் கொரோனாத் தொற்று ஏற்பட்டு, சுமார் 21 நாள்கள் தனியார் மருத்துவமனை யில் சிகிச்சை எடுத்தார். அவரின் நுரை யீரல் பாதிப்பு 60% எனவும், பிராண வாயு (ஆக்ஸிஜன்) குறைந்துபோனதால், 12 லிட்டர் அவருக்கு தேவைப்பட்டது.

மருத்துவர்கள் அவரை வீட்டிற்கு அனுப்பிவிட்டு, வீட்டிலேயே ஆக்ஸி ஜன் உபகரணத்தைப் பொருத்திக் கொள்ளுமாறு கூறிவிட்டனர். வீட்டிற்கு வந்து 4 நாள்கள் ஆகியும் அவரின் உடல்நிலையில் முன்னேற்றம் இல்லை. அவரின் குடும்ப உறுப்பினர்களுக்கு அவர் உயிர் பிழைப்பார் என்ற நம்பிக்கை இல்லை.

அந்தச் சமயத்தில் அவரின் மகன் எங்களைத் தொடர்பு கொண்டார். அப்போது அவரின் ஆக்ஸிஜன் அளவு 89 முதல் 90 விழுக் காடுதான் இருந்தது. சுவாசிக்கவே சிரமப்பட்டார்.




டாக்டர் ம. மாணிக்கம்

நாங்கள் அவருக்கு Mirakle பானத் தைத் தினமும் 3 வேளை குடித்துவரச் சொன்னோம். இரண்டே நாளில் அவரின் ஆக்ஸிஜன் விழுக்காடு 95 முதல் 98–க்கு வந்தது. தற்போது ஆக்ஸிஜன் இல்லாமலேயே சுமார் 5 மணி நேரம் முதல் 8 மணி நேரம் வரை இயற்கையாகவே சுவாசிக்கிறார். இது Mirakle பானத்தினால்தான் சாத்திய மாயிற்று என்பது அவருடைய குடும்பத் தினரின் நம்பிக்கை.

மற்றும் ஒரு நிகழ்வு. நாமக்கல் மாவட்டத்தில் தன்னார்வத் தொண்டு அமைப்பின் தலைவர் சித்த மருத்துவச் சிகிச்சை மேற்கொண்டு இருந்தார். அந்தத் தொண்டு நிறுவனத்தின் சார் பாக இறந்தவர்களை எரிக்கும் மின் மயானம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அதில் பணிபுரியும் ஊழியர்கள் கொரோனாவால் இறந்தோரின் உடல் களை எரித்தும் வருகின்றனர்.

ஒருமுறை அந்த நண்பர் Mirakle பானத்தைக் கேள்விபட்டு, எங்கள் நிறு வனத்தில் பணிபுரியும் ஊழியர்களுக்குக் கொரோனாவால் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது என்றும், அவர்களின் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க இந்தப் பானம் பயன்படுமா? என்று கேட்டார்.

அந்த சமயம் அங்கு வேலைசெய்து கொண்டிருந்த இருவருக்குக் கொரோனா பாசிடிவ் என்று வந்திருந்தது. ஊழியர் கள் அனைவரும் வேலைக்கு வரவே தயங்கினர். நாங்கள் Mirakle பானத்தை யும், சித்த மருந்துகளையும் சேர்த்துக்





கொடுத்தோம். ஊழியர்களில் கிட்டத் தட்ட 20 பேர் Mirakle பானத்தை இரு வேளையும் அருந்தி வந்தனர்.

அத்துடன் நீராவிப்பிடித்தல், வேது வைத்தல் சிகிச்சைகளையும் மேற் கொண்டனர். இதனால் அவர்களில் ஒருவருக்குக்கூட கொரோனாத் தொற்று ஏற்படவில்லை. கொரோனாத் தொற்று ஏற்பட்டிருந்த இருவரும் நலம் பெற்றனர்.

கோவை மாவட்டத்தைச் சேர்ந்த அரசு உயர் அதிகாரி ஒருவருக்குத் திடீ ரெனக் குளிர்காய்ச்சல், இடைவிடாது இருமல். சித்த மருத்துவச் சிகிச்சைக்கு வந்தார். அவருக்குக் கொரோனாப் பரிசோதனை செய்ததில் நுரையீரலில் 18/25 என்ற நிலையில் பாதிப்பு. மிகத் தீவிரமாக இருந்தது.

ஆக்ஸிஜன் செறிவுத்தன்மை 86 விழுக்காடுதான். சுவாசிக்க முடியாமல் மூச்சுத் திணறல், சுவையின்மை மற்றும் நுகரும் தன்மை இல்லை. மருத்துவ மனையில் தங்கிச் சிகிச்சை எடுக்கும் நிலை இருந்தது.

ஆனால் அவரோ சித்த மருத்துவச் சிகிச்சையே எடுத்துக் கொள்கிறேன் என்றும் மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை எடுக்க விருப்பமில்லை என வும் தெரிவித்துவிட்டார்.

அவரை வீட்டிலேயே தனிமையில் இருக்கச் சொல்விட்டு, சித்த மருந்துகள் மற்றும் Mirakle பானத்தை வழங்கி னோம். மருந்து உட்கொள்ளத் தொடங் கிய உடனேயே 6 மணி நேரத்தில் மூச்சுத் திணறல் படிப்படியாகக் குறைந் தது. Mirakle பானம் சாப்பிடுவதால் எளிதாகச் சுவாசிக்க முடிகிறது என்றும் கூறினார்.

சுமார் 7 நாள்களில் அவரின் ஆக்ஸி ஜன் அளவு 97% வந்துவிட்டது. நுரையீரல் கொரோனா பாதிப்பு 1% ஆகிவிட்டது.

சித்த மருத்துவராக நாங்கள் கூறுவது என்னவென்றால், கொரோனா போன்ற வைரஸ் கிருமிகளுக்கு நேரடி மருந்து இன்னும் கண்டுபிடிக்கப்பட வில்லை. இப்போதுதான் கண்டுபிடித்துள்ளனர். நமக்குக் கிடைக்க நாளாகலாம்.

நாம் செய்ய வேண்டியது என்ன வென்றால், கொரோனா நோய்த் தொற்று ஏற்படாமல் நம்மைப் பாது காத்துக்கொள்ள வேண்டும். ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்கு வந்து பரவு வதால் சமூக இடைவெளி மிகவும் அவ சியம். வெளியே செல்லும்போது முகக் கவசம் கட்டாயம். கை, கால்களைச் சோப்பு மற்றும் திரிபலா பொடி போட்டுத் தேய்த்துக் கழுவ வேண்டும்.

வீட்டைச் சுற்றிலும் நொச்சியிலை, வேம்பு, மஞ்சள் இட்டுத் தூபம் (புகை) போடலாம். இதனால் காற்றிலுள்ள கிருமிகள் அழியும். குளிர்சாதனப் பொருள் கள் (ப்ரிட்ஜ், ஏ.சி.) தவிர்க்கவும். உணவு களைச் சத்தானதாகவும் புதிதாகவும் தயாரித்துச் சூடாக உண்ண வேண்டும்.

நடைமுறையில் கடந்த 8 மாதங் களில் கொரோனாத் தொற்று ஏற்பட் டோரின் குடும்பத்தினர் என்று சுமார் மூவாயிரம் பேர்களுக்கு நாங்கள் சித்த மருத்துவச் சிகிச்சை அளித்துள்ளோம். இதில் சித்த மருந்துகள் உண்ணும்போது கூடவே Mirakle Vitamin-C பானத்தையும் சேர்த்து அருந்தும்போது, நோய்வாய்ப் பட்டவர்கள் வெகுவிரைவில் குண மடைந்து வருவதை நேரடியாகப் பார்க்க முடிகிறது.

உண்மையிலேயே Mirakle பானம் அருந்திய நோயாளிகள் தங்களின் சர்க் கரை அளவு, இரத்த அழுத்தம், மூட்டு வலி முதலிய மற்ற உபாதைகளும் குறைந்து வருகின்றன என்று சுட்டிக் காட்டுகின்றனர்.

தற்பொழுது கொரோனா நோய் பாதிப்பு குறைந்து வந்தாலும், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி பெருகுவதற்கு இந்த Mirakle பானம் நல்ல பலனைக் கொடுத் துக் கொண்டு வருகிறது.

சித்த மருந்துகளுடன் Mirakle பானம் சேர்த்துச் சாப்பிடும்போது எற்படுகின்ற மாற்றம், விரைவில் கொரோனாத் தொற்று இந்த மனித சமுதாயத்தை விட்டு அகலும் என்ற நம்பிக்கை, மனநிறைவைத் தருகிறது.

மேலும் விபரங்களுக்கு :

Customer Care: 9159937777. Dr. Saravanan : 9043212789. Bramma Mani : 8220041227.



சொ.சொ.மீ. சுந்தரம்

தீவினை மாற்றும் திருமந்திரம் 16

அந்தக் காலத்தில் நம்முடைய தமிழ்நாட்டு ஆலயங்களில் ஒன்பது கோள்களுக்கும் தனியாகச் சந்நிதி இல்லை. சூரியனும், சந்திரனும் மட்டும் சிவலிங்கத்தைப் பார்த்தபடி நின்றிருப் பார்கள். அதன்பிறகு சந்நிதி வந்தது. ஒன்பது கோள்களுக்கும் ஒவ்வொரு நிறத்தில் ஆடை கட்டினார்கள். ஏன் தெரியுமா? அந்தந்தக் கோள்களுக்கு அவற்றுக்குரிய நிறத்தில் ஆடைகள் கட்டப்பட்டன. இது நம் முன்னோர் களின் வானியல் அறிவுக்கும் அறிவியல் திறனுக்கும் சான்றல்லவா?

சில ஆண்டுகளுக்கு முன்னால் அமெரிக்கா அனுப்பிய செயற்கைக் கோள் ஒன்று பூமியை வலம் வந்தது. தமிழகத்தில் திருநள்ளாறு என்ற பாடல் பெற்ற திருத்தலத்தின் மீது பறந்தபோது ஒரு விந்தை நிகழ்ந்தது. சனீஸ்வரனுக் குரிய திருத்தலமும் சப்தவிடங்கத் தலங்களில் ஒன்றாக இருப்பது மான திருநள்ளாற்றில் உள்ள தர்ப் பாரண்ய சுவாமி திருக்கோயி லுக்கு மேலே அந்தச் செயற்கைக் கோள் பறந்தபோது, சுமார் மூன்று விநாடிகள் அந்தச் செயற்கைக்கோள் செயலற்று நின்று, பின்னர் ஒழுங்காகச் சென்றது. ஏன்?

ஒவ்வொரு விநாடியும் சனிக் கிரகத்திலிருந்து கண்ணுக்குப் புலனாகாத கருநீலக் கதிர்கள் அந்தக் கோயிலின் மேல் விழுகின்றன. இரண் டரை ஆண்டுகளுக்கு ஒருமுறை சனிப் பெயர்ச்சி நடக்கிறது. அப்பொழுது அந்தக் கதிர்கள் மிகவும் அடர்த்தியாக அந்த ஆலயத்தின் மீது விழுகின்றன. இக்கதிர்கள் பாயும் பகுதிக்குள் வரும் போது செயற்கைக் கோள் செயல்பட முடியவில்லை. இந்த அற்புதம் இன்று வரை நிகழ்கிறது.

அறிவியல் அறிஞர்கள் இதை ஆராய்ந்து பார்த்துவிட்டுச் சனீஸ்வர னையும் அவருக்கு ஆற்றல் கொடுத்த நள்ளாற்று நாதரையும் வணங்கிச் சென் றார்கள். எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னால் இதைக் கண்டுபிடித்துச் சனிக் கிரகத்துக்குரிய ஆலயம் இது என்று அறிவித்த நம் முன்னோர்களின் வானி யல் அறிவு அதிசயிக்கத் தக்கதல்லவா?

இந்தப் பெருமக்கள் உடம்புக்கு வெளியில் உள்ள உலகத்தை மட்டுமா ஆராய்ந்தார்கள்? உடம்புக்கு உள்ளே யும் ஆராய்ந்தார்கள். எல்லா அறி வும் பெற்று வாழ வேண்டிய காலத் தில் வாழத் தெரியாமல் இறந்துபோ னால், அந்த அறிவு வீணாகி விடாதா?

கணித மேதை இராமானு ஜம், மகாகவி பாரதியாரும்கூட நண்பகல் எய்தாக் காலை ஞாயிறு போல இளம் வயதி லேயே இறந்துவிட்டது எவ்வளவு பெரிய இழப்பு! மக்கள் நூறாண்டுக்

தொடர்ச்சி : 14–ம் பக்கம்



திருமூலர்

கட்டுரை

23

பழகிப் பார்த்ததில் இவர்கள்...

'ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்' அதிபர் ம. கிருஷ்ணன்



'ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்' அதிபர்
திரு. ம. கிருஷ்ணன்

பள்ளி மாணவனாக இருந்தபோது 'ஸ்வீட்' எனும் சிறுவர் இதழில் எழுதத் தொடங்கினேன். எங்கள் பள்ளி ஓவிய ஆசிரியர் திரு. கே.கே. தண்டபாணி நிகழ்த்திய இதழ் அது. அப்போது நகரமெங்கும் கண்களைக் கவரும் விதமாகச் சுவரொட்டிகள் மின்னின. 'மழலைகள் மாலை விழா' என்ற தலைப்போடு பல பிரமுகர்கள் பங்குபெறும் விழா, மத்திய சிறை மைதானத்தில் ஏற்பாடாகியிருந்தது.

அங்கே நான் ஒரு பார்வையாளன்தான். ஆனால், என்னை நானே மாணவச் செய்தியாளனாக வரித்துக் கொண்டு அந்த விழாவில் கலந்து கொண்டேன். அப்போது மேடையில் தொலைவிலிருந்து திரு. கிருஷ்ணன் அவர்களைப் பார்த்தேன்.



மரபின் மைந்தன் முத்தையா

பின்னாட்களில் கலை, இலக்கியத் தளங்களில் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பை காலம் ஏற்படுத்தித் தரும் என்பது அப்போது எனக்குத் தெரியாது.

தெய்வபக்தி, தொழில்மேல் பக்தி, பெற்றோர்மேல் பக்தி, தன்னை வாழ்விக்கும் சமூகத்திற்கு எதையாவது செய்துகொண்டே இருக்க வேண்டும் என்று உந்தித் தள்ளிக்கொண்டே இருக்கும் நன்றியுணர்வு முதலிய நல்ல குணங்களின் நிலைக்களனாக விளங்குபவர் அவர்.



எழுத்தாளர் பாலகுமாரனுடன்
திரு. ம. கிருஷ்ணன்

திரு. கிருஷ்ணன் எனக்குச் செய்திருக்கிற பல நல்ல விஷயங்களில் ஒன்று பொது நன்மைக்காக எதையாவது மேற்கொண்டால், அது சரியானது என்று தெரிந்தால், முழுமையான ஆதரவைத் தருவார் என்கிற நம்பிக்கை. இதனைப் பல்வேறு காலகட்டங்களில், பல்வேறு நிலைகளில் தன் செயல்பாடுகளால் அவர் உறுதிப்படுத்திக் கொண்டே இருக்கிறார்.

இருபது வருடங்கள் இருக்கும். கோவை சவுரிபாளையம் பகுதியிலிருந்து சில நண்பர்கள் என்னைச் சந்திக்க வந்தனர். ஆதரவற்ற சிறுவர்கள் மத்தியில் பேச அழைத்தனர். அது சித்திரை மாதம்.

கடும் கோடை காலம். அந்தக் குழந்தைகள் காற்றோட்டமில்லாத அறையில் ஐம்பது, அறுபது பேர் படுத்து உறங்குகிறார்கள் என்றும், அதன் காரணமாக அவர்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள் என்றும் அந்த இளைஞர்கள் எனக்குச் சொன் னார்கள்.

உடனே தொலைபேசியில் கிருஷ்ணன் அவர்களை அழைத்தேன். மறுநாளே அந்த அறை யில் மின்விசிறிகள் பொருத்தப்பட்டன. இது போன்ற உதவிகள் எப்போது வேண்டுமானாலும் தயங்காமல் சொல்லுங்கள் என்றார் கிருஷ்ணன்.

ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர் 31–ஆம் தேதி பின்னிரவில் நிறைய கம்பளிகளோடு அவருடைய நிறுவனத்திலிருந்து சில வாகனங்கள் நான்கு திசைகளிலும் புறப்படும். வீதியோரங்களில் குளி ரில் குறுகிப் படுத்து இருப்பவர்கள் மீது சத்தமில் லாமல் அந்தக் கம்பளியைப் போர்த்திவிட்டு அவருடைய ஊழியர்கள் திரும்பிவிடுவார்கள்.

இப்படி எவ்வளவோ பணிகள் வெளியே தெரியாமல் அவரால் நிகழ்ந்துகொண்டே இருக்கின்றன. அவர் கடவுள் பக்தி நிறைந்தவர் என்பதைப் போலவே மனிதபக்தி நிறைந்தவர் என்பதும் உண்மை.

அவருடைய வீடு புதுப்பிக்கப்பட்டு நிகழ்ந்த புதுமனைப் புகுவிழாவில், அவருடைய ஊழியர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வோர் ஆலயத்தில் அர்ச் சனை செய்து நூற்றுக்கணக்கான பிரசாதங்கள் கொண்டு வந்தனர்.

புதுமனைப் புகுவிழாவில் கிடைத்த புனிதம் நிறைந்த பரிசாக அதனை அவர் கொண்டாடினார். ஒரு பேழையில் அத்தனை பிரசாதங்களையும் இட்டுப் பூஜையறையில் பிரதானமான இடத்தில் வைத்தார். அதுபற்றி அவர் அன்று என்னிடம் சொன்னது இன்றும் என் செவிகளில் எதி ரொலிக்கிறது.

''இது ஏன் இவ்வளவு முக்கியம்னா, எவ் வளவோ ஆலயங்களின் ஆசீர்வாதத்தோடு சேர்ந்து இந்தப் பையன்களின் ஆசீர்வாதமும் இதில் கலந்து இருக்கிறது. இது எங்கே கிடைக்கும்'' என்றார்.

அவர் வீட்டில் பூஜையறையே ஒரு கோவில் போல் இருக்கும். மகாபெரியவரின் மலர் பாதுகை



கள் கண்ணாடிப் பேழையில் அலங்கரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருக்கும்.

ஒருமுறை ''உனக்கு என்ன வேண்டும்?'' என்று மகாபெரியவர் கேட்க, ''உங்கள் பாதுகை கள் வேண்டும்'' என்று விண்ணப்பித்து மகா பெரியவர் தன் கைகளை மேலே எடுத்து வைத்து, தானே தொட்டுக் கண்ணில் ஒற்றிக் கொண்டு அருளியவை'' என்று கிருஷ்ணன் சொல்லியிருக் கிறார்.

என் வாழ்வில் ஒரு பெரும் திருப்புமுனை ஈஷா. இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர், ஈஷா என்றால் என்ன? சத்குரு என்றால் யார்? என எதுவுமே தெரியாமல் இருந்த என்னை, வலுக்கட்டாயமாக, வம்படியாக ஈஷாவில் சேர்த்துவிட்டவர் கிருஷ்ணன் தான்.

ஆரம்ப வகுப்புக்கு நான் பதிவு செய்யாமல் விட்டுவிட்டால் என்ன செய்வது என்று அவரே பணம்கட்டிப் பதிவுசெய்து ''நீங்கள் போய் ஆக வேண்டும்'' என்று என்னை அனுப்பி வைத்தார். என் வாழ்வின் போக்கையே அந்த அறிமுகம் மாற்றி வைத்தது.

அதைக்கூட ஒருவர் செய்துவிடக்கூடும். ஆனால் வகுப்பு நடந்த 13 நாட்களும் இரவு 9 மணிக்கு வகுப்பு முடியும் என்றால், ஒன்பதரை மணிக்கு வீட்டுத் தொலைபேசிக்கு அழைப்பார். அப்போதெல்லாம் அலைபேசிகள் இங்கே அறிமுகம் ஆகி இருக்கவில்லை. போன் செய்து குறைந்தது 20 நிமிடங்களாவது பேசி, அந்த வகுப்பை நான் சரியாக உள்வாங்கிக் கொண் டேனா என்பதை உறுதி செய்துகொள்வார்.

பிறகு ''இன்றைய வகுப்பில் என்ன உணர்வு ஏற்பட்டதோ, அதை ஒரு கவிதையாக எழுதி விடுங்கள்'' என்று நினைவூட்டுவார்.

இப்போதுபோல் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அவருடன் நெருங்கிப் பழகி இருக்கவில்லை என்றாலும், அன்றுமுதல் இன்று வரை ஒரேவிதமான சிரத்தையோடும் அக்கறையோடும் தனக்கு அறிமுகமாகும் அனைவருடனும் பழகுவது அவருடைய தனிப் பண்பு.

அவருடைய தந்தையார் மறைந்தபோதும், தாயார் மறைந்தபோதும் பிரத்யேகமாக அவர் செய்த பல அறப்பணிகள் பிறர் அறியாதவை. அதேபோல் தன் மகள்கள் திருமணத்தின்போது, அதே முகூர்த்தத்தில் ஏழைக் குடும்பங்களில் பிறந்த நூற்றுக்கணக்கானப் பெண்களுக்குத் தாலி வாங்கித் தந்து, அந்தத் திருமணங்களும் அதே நேரத்தில் விமரிசையாக நடக்க வழி செய்ததும் பல பேர் அறியாத ஒன்று.

'செய்வன திருந்தச் செய்' என்பது அவரின் அன்றாட வாழ்க்கை முறை. குறிப்பாக கோவையில் நடைபெறும் கலை, இலக்கிய நிகழ்வுகள் நடக்கும் விதத்திலேயே ஒரு மகத்தான மாற்றத்தைக் கொண்டு வந்தவர் அவர்.

வரவேற்புரை, தலைமையுரை, முன்னிலை முதலிய எந்தச் சம்பிரதாயங்களும் இல்லாமல், நேரடியாக ஐந்து நிமிட அறிமுகவுரை. அதன் பின்னர் சிறப்புரை என்று பளிச்சென்று தொடங்கி, எந்த ஆரவாரமும் இல்லாமல் இயல்பாக முகிலில் இருந்து மழைத்துளிகள் உதிர்வதுபோல, நிகழ்வுகள் நடக்கத் தொடங்கிய பிறகுதான் மக்கள் பெருமளவில் வரத் தொடங்கினர்.

ஒரு நிகழ்வுக்கான பொருண்மையை அவரே தேர்வு செய்வார். ஒரு மாதத்தில் முடிந்துவிடாமல், தொடர்ந்து பல மாதங்கள் அதே பொருளில் பலரை உரையாற்றச் செய்வார். அந்த நிகழ்ச்சிக்கான தலைப்பையும் கூட அவரே தேர்வு செய்வார்.

'விட்டு விடுதலை ஆவோம்' எனும் சுய முன்னேற்றத் தொடர் நிகழ்ச்சி, 'எப்படிப் பாடினரோ' எனும் இசை தொடர் நிகழ்ச்சி, 'எப்போ வருவாரோ' எனும் ஆன்மீகத் தொடர் நிகழ்ச்சி, 'நலந்தானா' எனும் மருத்துவத் தொடர் நிகழ்ச்சி, 'முதுமை என்னும் பூங்காற்று' எனும் தலைப்பில் முதியோர்களுக்கான நலவாழ்வு வழிகாட்டுதல் என இப்படி எத்தனையோ உதாரணங்களைச் சொல்லலாம். திறமையாளர்களை உடனுக்குடன் அங்கீகரிக்க வேண்டும் என்னும் எண்ணம் கொண்டவர். சாதித்தவர்களுக்குக் கலையழகு மின்னமின்ன விழாக்களை விமரிசையாய் நடத்துபவர்.

எல்லோரையும் மேடையேற்றுவாரே தவிர, தான் மேடை ஏறுவதை விரும்பமாட்டார். மிகக் கூர்மையாக எதையும் அவதானித்துச் சுவையாகச் சொல்லத் தெரிந்தவர்தான். ஆனால் மேடையில் பேசுவதைப் பெரும்பாலும் தவிர்த்துவிடுவார். அபாரமான நகைச்சுவை உணர்வு கொண்டவர்.

ஒருமுறை அவரிடம் தொலைபேசியில் பேசிக் கொண்டிருந்தேன். தொலைபேசியை வைத்த பிறகு, முக்கியமான விஷயம் ஒன்றைச் சொல்லாமல் விட்டது ஞாபகத்திற்கு வந்தது. மறுபடி அழைத்துப் பேசினேன். வைத்ததும் இன்னொன்று அவருக்குச் சொல்லத் தோன்றியது. உடனே அழைத்து "மீண்டும் முத்தையா" என்றேன். அடுத்த விநாடி அவரிடமிருந்து பதில் வந்தது "மீளாத கிருஷ்ணன்."

நண்பர் ஒருவர் பார்க்க வருவதாகச் சொன்னார். இவரும் இசைவு தந்தார். சற்று நேரத்தில் அந்த நண்பரே அழைத்து "ஒரு விசேஷத்துக்குப் போக வேண்டாம் என்று முடிவு செய்துதான் உங்களைப் பார்க்க வருவதாகச் சொன்னேன். அவர்கள் தொலைபேசியில் அழைத்து மிகவும் வற்புறுத்துகிறார்கள். நான் வந்தால்தான் இலையைப் போடுவேன் என்கிறார்கள். எனவே என்னால் வர இயலாது" என்றார்.

உடனே கிருஷ்ணன் சிரித்துக் கொண்டே சொன்ன பதில் : "அப்படியா! அநேகமாக இலையெடுக்க ஆளில்லை என்று நினைக்கிறேன். உடனே கிளம்பிச் செல்லுங்கள்".

அன்றாடம் தொலைபேசியில் அழைக்கக் கூடிய ஒரு நண்பரை அன்றும் அழைத்தார். அவருக்குப் பதிலாக அவர் மனைவி எடுத்தார். "குளிச்சிட்டு இருக்கார். வந்ததும் கூப்பிடச் சொல்கிறேன்" என்றாள் அந்தப் பெண்.

கிருஷ்ணனின் பதில் : "என்னது, குளிக்கிறாரா? சாரி! ராங் நம்பர்".

நல்ல காரியங்களுக்கு எல்லாம் பின்புலமாக நிற்பதைப் போலவே, தனக்கு உடன்பாடு இல்லாத ஒன்றை நேரடியாக மறுத்துச் சொல்லும் மாண்பு அவரிடம் உண்டு. The art of saying No என்பதை மேலைநாட்டினர் ஒரு பெரும் கலையாகவே பழக முற்படுகிறார்கள். இவரிடம் அதில் திடமான, தீர்க்கமான உறுதியைக் காண முடியும்.

நெருங்கிய நண்பர்கள் என்றாலும்கூட, ஒவ்வாத ஒரு விஷயத்தைப் பேசத் தொடங்கினால் "என்ன சார் திடீர்னு ஜெர்மனி, பிரெஞ்சில் எல்லாம் பேசுறீங்க" என்று நாசூக்காகத் தவிர்த்து விடுவார்.

ஒருமுறை ஓர் அறிஞர், ஒரு நல்ல பணிக்காக இவரிடம் உதவி கேட்க முற்பட்டார். ஆனால் அவர் கேட்ட தொகை மிகமிகப் பெரிது. அந்தத் தொகையைக் கேட்பதற்கு இவரை எப்போது பார்க்க வரலாம் என்று கேட்டுச் சொல்லுமாறு என்னிடம் சொன்னார்.

இதைச் சொன்னபோது கிருஷ்ணன் சொன்ன பதில், "அதற்கென்ன தாராளமாக வாங்கிக்கச் சொல்லுங்க; ஆனால் அவர் தினமும் என் அலுவலகத்தில் வந்து உட்கார்ந்துகொள்ள வேண்டும். மற்ற விஷயங்களுக்காக நன்கொடை கேட்டு வருபவர்கள் எல்லோரிடமும் மொத்த தொகையையும் தான் வாங்கிக் கொண்டதால், அவர்களுக்கு நன்கொடை தர இயலாது என்பதை இவரே சொல்ல வேண்டும். சம்மதமானால் நாளைக்கே காசோலை தந்துவிடலாம்" என்றார் .

பிறவியில் ஓர் அந்தணர். வேத நெறியிலும் சாஸ்திரங்களிலும் ஆழ்ந்த பயிற்சி உடையவர். ஆலயங்களில் தமிழில்தான் வழிபாடு நிகழ்த்த வேண்டும் எனும் கொள்கை கொண்ட ஒருவரின் நிகழ்ச்சிக்கு இவர் பொருளுதவி செய்தார். "இவர் மாற்றுக் கருத்து கொண்டவர் இல்லையா" என்று நண்பர்கள் அவரிடம் கேட்டார்கள்.

கிருஷ்ணன் சொன்ன பதில், "தமிழில் மட்டும் வழிபாடு செய்யுங்கள் என்று சொல்வதால், இவர் எனக்கு மாற்றுக்கருத்துக் கொண்டவர் ஆகிவிட மாட்டார். கடவுளையே வணங்காதீர்கள் என்று சொல்பவர்கள்தான் மாற்றுக் கருத்து உடையவர்கள். இறைவனை வணங்குங்கள் என்று சொல்லுகிற இவருக்கு உதவுவது என் கடமை" என்றார்.

ஆழமான ஆன்மீக அனுபவங்களைப் பெற்றவர். அவற்றை எழுதுவது முறையல்ல. ஒருவரைப் பார்த்தால் சில நிமிடங்களில் மிகத் துல்லியமாக எடைபோட்டு விடுவார். ஆனால் அந்த எடை போடுதல் வழி அவர் உணர்ந்த விஷயங்கள், அந்த மனிதருடன் இயல்பாகப் பழகுவதற்குத் தடையாக இருக்காது.

அருளாளர்கள், ஆழ்ந்த அறிஞர்கள், தலை சிறந்த தொழிலதிபர்கள், சிவாஜி உள்ளிட்ட கலையுலகச் சிகரங்கள் அனைவரும் அவர் இல்லத்தில் வந்து விருந்துண்டு செல்வதுண்டு.

ஒருவர் தாமாக முன்வந்து கிருஷ்ணனிடம் "உங்க ஆத்துக்கு நான் வரேன்" என்று சொல்லி, வந்தும் சென்றார். அவர்தான் டாக்டர் அப்துல் கலாம்.

ஒருமுறை என் நண்பர்கள் மிகவும் கேட்டுக் கொண்டார்கள் என்பதற்காகப் பெரிதும் போராடி பட்டுக்கோட்டையில் ஜேசி இயக்கத்தின் வணிக மாநாடு ஒன்றுக்கு அவரைச் சிறப்பு விருந்தினராக அழைத்துச் சென்றிருந்தேன்.

வணிகத்தை எப்படி அணுக வேண்டும் என்று அவர் தந்த வழிகாட்டுதல்கள், பல்கலைக் கழகங்கள் பாடமாக வைக்கத் தக்கவை. அந்த மேடையில் அவர் சொன்ன ஒரு சம்பவம் பின்னாளில் பெரும்புகழ் பெற்றது.

அவரும் அவருடைய நண்பரும் திருப்பதி சென்று இருந்தார்கள். ஆலயத்துக்குப் போகிற போது, அவருடைய நண்பர் உண்டியலில் போட ஒரு லட்சம் ரூபாய் பணத்தைக் கையில் எடுத்துக் கொண்டு வந்தார். "இந்தப் பணம் தேவஸ்தானத்திற்குத்தான் என்பதைத் தீர்மானம் செய்துவிட்டீர்களா?" என்று கேட்டார் கிருஷ்ணன்.

''ஆமாம்'' என்றதும், அந்தப் பணத்தைக் கையில் வாங்கி, ஐயாயிரம் ரூபாய், பத்தாயிரம் ரூபாய் நுழைவுச் சீட்டுகளை விலைக்கு வாங்கினார். அந்த நண்பரை விட்டே தர்மதரிசன வரிசையில் நிற்பவர்கள் இடம் அந்தச் சீட்டுகளை வினியோகிக்கச் சொன்னார். பிரார்த்தனையும் நிறைவேறியது. மக்களுக்கும் நலன் விளைந்தது.

தயாரிக்கும் உணவு வகைகளில் மட்டுமின்றி, தன் ரசனையிலும் உயர்ந்த தரத்தைக் கொண்டிருக்கும். இவர், தன் நிகழ்ச்சிகள் வழியாக நேரக் கட்டுப்பாடு உள்ளிட்ட ஒழுங்குகளையும், உயர்ந்த ரசனையையும் மக்கள் மத்தியில் விதைப்பதில் வெற்றி பெற்றிருக்கிறார்.

செல்வம் படைத்தவர்கள் ஏராளம். அதனைச் சமூகத்தோடு பகிரத் தெரிந்தவர்கள் குறைவு. அப்படிப் பகிர்ந்தாலும் எல்லோரிடமும் இணக்கமாகப் பழகத் தெரிந்தவர்கள் குறைவு. அந்த வகையிலும் கிருஷ்ணன் அபூர்வமான மனிதர். 'ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம் பேரறிவாளன் திரு' என்று திருவள்ளுவர் இலக்கணத்திற்கு இலக்கியமாய் இவரே விளங்குகிறார்; விளங்குவார்!

●

9-ம் பக்கத் தொடர்ச்சி

காலம் வாழ முடியாதா? என்று சிந்தித்த சித்தர்கள், அதற்கான வழியைக் கண்டுபிடித்து உலகத்துக்கும் அறிவித்தார்கள். அந்தச் சித்தர் கூட்டத்துக்குத் தலைமை தாங்கும் தகுதிபடைத்தவர் நம்பிரான் திருமூலன் என்று போற்றப் பெற்ற திருமூல நாயனார். அவர் கண்டு பிடித்த வழிதான் பிராணாயாமம்.

வெளியில் வந்தால் மீண்டும் உள்ளே போக முடியாத இடம் கருவறை. உள்ளே போனால் வெளியில் வரமுடியாத இடம் கல்லறை. இந்த இரண்டுக்கும் இடைப்பட்டதுதான் நம் உயிர் வாழ்க்கை. ஊஞ்சலில் உட்கார்ந்து மகிழ்ச்சியாக ஆடும் விளையாட்டல்ல வாழ்க்கை. இது புயலுக்கு நடுவில் பாதுகாப்பாகப் படகைச் செலுத்துவது போன்றது. உடம்புக்கு நோய் வந்தால் துன்பம். மனத்தில் கவலை வந்தால் துன்பம். அச்சத்தாலும் துன்பம். ஆசையாலும் துன்பம். இந்தத் துன்பங்களிலிருந்து விடுவிப்பது பிராணாயாமம். துன்பங்களுக்கும் இன்பங்களுக்கும் காரணம் மனம். மனத்தை ஒழுங்குபடுத்துவது பிராணாயாமம்.

பிராணாயாமத்திற்கு மூச்சுப் பயிற்சி என்று பெயர். மூச்சை நன்றாக உள்ளே இழுப்பது பூரகம். உள்ளே வைத்திருப்பது கும்பகம். மெதுவாக வெளியில் விடுவது ரேசகம். இவற்றை எவ்வளவு நேரம் செய்ய வேண்டும் என்பதுதான் முக்கியமானது. 556-வது பாடலில் திருமூலர்,

"ஏறுதல் பூரகம் ஈரெட்டு வாமத்தால்;

ஆறுதல் கும்பகம் அறுபத்து நாலதில்;

ஊறுதல் முப்பத் திரண்டு அதி ரேசகம்

மாறுதல் ஒன்றின்கண் வஞ்சகம் ஆமே"

என்று பிராணாயாமத்துக்கு இலக்கணம் வகுக்கிறார். இதன்படி இடப்பக்க நாசியால் பதினாறு மாத்திரை யளவு நேரம் காற்றை உள்ளே இழுக்க வேண்டும். அதன்பிறகு அறுபத்து நான்கு மாத்திரையளவு உள்ளே நிறுத்த வேண்டும். பின்னர் முப்பத்திரெண்டு மாத்திரையளவு நேரம் வலப்பக்க நாசியால் வெளிவிட வேண்டும். இதில் எந்த ஒன்றில் மாறுபட்டாலும் அது தவறான பலனைத் தரும் என்பது இப்பாடலின் பொருளாகும். இதில் ஒரு மாத்திரை என்பது ஒரு நொடிப் பொழுது.

"தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம் ஒரு / மாத்திரைப் போதும் மனத்தில்வை யாதவர் வண்மைகுலம் / கோத்திரம் கல்வி குணம்குன்றி நாளும் குடில்கள்தொறும் / பாத்திரம் கொண்டு பலிக்குழ லாநிற்பர் பாரெங்குமே" *என்பது அபிராமி அந்தாதி. பிராட்டியை ஒரு மாத்திரைப் போதாவது வணங்க வேண்டும். பிராணாயாமத்தை மாத்திரைப்படி செய்ய வேண்டும்.*

பிராணாயாமத்திற்கு இலக்கணமான இந்தத் திருமந்திரப் பாடலை, ஐம்பதாண்டுகளாக நான் படித்தும் பேசியும் வருகிறேன். ஒருமுறை இதைப் பழகிப் பார்த்தால் என்ன என்ற சிந்தனை வந்தது. காஞ்சிப் பெரியவர் சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் கூறியது நினைவுக்கு வந்தது. "நம் வாழ்க்கையில் எல்லாம் ஒரு கணக்குத்தான். கணக்குத் தப்பினால் உடல், மன நிலையில் பிரச்னை ஏற்படும். சாப்பிடுவது, தூங்குவது, எழுந்திருப்பது எல்லாம் சரியாக நடக்க வேண்டும். இதைப் போல மூச்சு விடுவதிலும் கணக்கு இருக்கிறது. அது மாறினால் சங்கடம் உண்டாகும்.



வியாபாரத்தில் வரவு, செலவுக் கணக்கு என்கிறார்களே – வருமானத்திற்கு அதிகமாகச் செலவழித்தால் நட்டம் வரத்தானே செய்யும். மூச்சை உள்ளே இழுப்பதிலும், வெளியே விடுவதிலும் சீரான தன்மை இருக்க வேண்டும். தூக்கத்தில் கூட மூச்சு சரியாக இருக்க வேண்டும். கோபம், கவலை அதிகமாகும்போது, சுவாசத்தின் போக்குத் தாறுமாறாகிவிடும். கோபம், படபடப்பு இவற்றிலிருந்து விலகி நிற்பது அவசியம்.

சுவாசம் சீராக இருந்தால், நோய்கள்



சனீஸ்வர பகவான் திருக்கோவில் (திருநள்ளாறு)

அணுகாது. பிராணாயாமத்தால் சுவாசத்தைச் சீராக்கலாம். தியானம் செய்யும்போது மூச்சு ஒரே சீராக இருக்கும். படபடப்போ, பரபரப்போ இருக்காது. இதயத் துடிப்பும் சீராக இருக்கும். ஒவ்வொரு நாளும் அதிகாலையில் சிறிது நேரம் மூச்சுப் பயிற்சியில் ஈடுபட்டால், நாள் முழுவதும் புத்துணர்ச்சியுடன் செயல்படலாம்" என்பது பரமாச்சார்யார் திருவாக்கு. இதன்படி கணக்காகப் பிராணாயாமம் செய்வது என்று தீர்மானித்தேன்.

1974–இல் எர்ணாகுளத்தில் முருகன் கோயிலில் சொற்பொழிவு முடித்து, எனக்கென்று ஒதுக்கப்பட்ட தங்கும் விடுதியில் படுத்து உறங்கி, மறுநாள் காலை 4 1/2 மணிக்கு விழித்தேன். கை, கால், முகம் கழுவினேன். மலசலம் கழித்துக் கால்களைக் கழுவித் திருநீறு பூசிக் கொண்டேன். இதற்கு (பஸ்மஸ் நானம்) திருநீற்றுக் குளியல் என்று பெயர். என்னுடைய அறையில் சமக்காளம் விரித்துக் கிழக்கு நோக்கிப் பத்மாசனத்தில் அமர்ந்தேன்.

திருமூலர் கூறியபடி, வலது மூக்கைக் கையால் மூடி இடது மூக்கு வழியாக மூச்சை உள்ளே இழுத்தேன். ஏறத்தாழப் பதினாறு மாத்திரை அளவுக்கு இழுத்துக் கொண்டேன். இப்பொழுது இரண்டு மூக்குத் துவாரங்களையும் மூடிக்கொண்டு மூச்சை உள்ளேயே கும்பிக்கத் தொடங்கினேன். பதினைந்து மாத்திரை அளவுக்கு மேல் மூச்சை உள்ளே வைத்திருக்க முடியவில்லை. மூச்சு முட்டியது. கண்விழிகள் வெளியில் வந்துவிடுவது போல் இருந்தது. மிகவும் பயமாகி விட்டது. ஏதாவது நேர்ந்துவிட்டால், என்ன செய்வது என்று மனம் நினைத்தது.

அனுபவமிக்க குரு மூலம் தான் பிராணாயாமம் பயில வேண்டும். நூல்களை மட்டும் படித்துவிட்டுப் பிராணாயாமம் செய்தால், பல தீய விளைவுகள் உண்டாகும் என்று திருமூலர் கூறியது சரியான சமயத்தில் நினைவுக்கு வந்தது. நான் மூச்சுப் பயிற்சியை அத்தோடு நிறுத்திவிட்டேன். கும்பித்த மூச்சை மெதுவாக வெளியில் விட்டேன். பிராணாயாமம் வேண்டாம். பிராணன் இருந்தால் போதும் என்று தோன்றியது. குருநாதன் இல்லாமல் மூச்சுப் பயிற்சி தொடங்கியது முட்டாள்தனம் என்பது தெரிந்தது. நான் முட்டாள் என்பது இப்பொழுது உறுதியாயிற்று.

அதன்பிறகு மதுரைக்கு வந்தேன். மதுரையில் மேலமாசி வீதியில் பால சுப்பிரமணிய முதலியார் என்ற பெரியவர் எனக்கு மிகவும் வேண்டியவர். என் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டவர். இவருக்கு யோகமும் தெரியும். சோதிடமும் தெரியும்.

ஒருமுறை மதுரை வடக்கு மாசி வீதியிலுள்ள தருமபுர ஆதீன மடத்தில் நான் திங்கட்கிழமைதோறும் திருவாசக வகுப்பு நடத்தியபோது, இந்தப் பெரியவர் வந்து ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் வகுப்பைக் கவனித்தார். வகுப்பு முடிந்தது. என்னிடம் வந்தார், "உங்கள் ஜாதகத்தில் லக்னத்திற்கு 5–ஆம் இடத்தில் கேது இருக்கிறாரா?" என்று கேட்டார். நான் அசந்து போய்விட்டேன். "ஆமாம். அது எப்படி உங்களுக்குத் தெரியும்?" என்றேன்.

"கேது ஞானகாரகன். ஐந்தாம் இடம் பூர்வபுண்ணிய ஸ்தானம். போன ஜன்மங்களில் பெற்ற ஞானம், இப்பொழுது உங்கள் பேச்சில் தெரிகிறது. இது இன்னும் தொடரும். அருட்பெருஞ்சோதியாய் ஆண்டவனைக் கண்ட இராமலிங்க வள்ளலாருக்கு ஐந்தில் கேது. அவர் சித்திரை நட்சத்

திரம்" என்றார். நான், "ஐயா! நானும் சித்திரை நட்சத்திரம்" என்றேன். அது முதல் அவர் எனக்கு நண்பராகவும், நல்ல வழிகாட்டியாகவும் மாறி விட்டார். என் ஜாதகத்தைப் பார்த்தார்.

"ஐயா! நீங்கள் பிறந்தது 7.8.1943 (இதுதான் என்னுடைய உண்மையான பிறந்த நாள். இது எங்கள் பள்ளித் தலைமை ஆசிரியரால் அந்தக் காலத்தில் 3.8.1942 என்று உத்தேசமாகக் குறிப்பிட்டு அதுவே சட்டப்படி என் பிறந்த நாளாகிவிட்டது). சுபானு ஆண்டு, ஆடி மாதம் 22–ஆம் நாள் சனிக்கிழமை நீங்கள் பிறந்திருக்கிறீர்கள். வள்ளல்பெருமான் இதற்குச் சரியாக நூற்றி இருபது ஆண்டுகளுக்கு முன்னால் (1823–ஆம் ஆண்டில்) சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் 21–ஆம் நாள் (5.10.1823–இல்) அவதரித்தார். எனவே உங்களுக்கு வள்ளலார் வழிகாட்டுவார். அவருடைய ஞானத்தில் கோடியில் ஒரு பங்காவது வேண்டும் என்று அவரிடம் பிரார்த்தனை செய்யுங்கள். அவர் கருணை மிக்கவர்" என்றார்.

அன்றுமுதல் செடியாய் இருந்த வள்ளலார் பக்தி மரமாக வளர்ந்தது. திருமந்திரம், திருவாசகம் இரண்டையும் படிக்கும் பேறு கிடைத்தது. என்னை அறியாப் பருவத்து என்னை மணம் புரிந்த பெருமானாக வள்ளலார் மாறினார். இதற்கெல்லாம் காரணமானவர் சிவயோகி பாலசுப்பிரமணிய முதலியார். இவரிடம் நான் பிராணாயாமம் செய்யத் தொடங்கிப் பாதியில்விட்ட அனுபவத்தைக் கூறினேன். "என்னால் 64 மாத்திரை கும்பிக்க முடியவில்லை" என்றேன். அவர் என்னைப் பார்த்துப் பெருஞ்சிரிப்புச் சிரித்தார். "நல்ல வேளை. நிறுத்தினீர்கள். இல்லாவிட்டால் இன்றைக்கு எட்டுநாள் ஆகி இருக்கும்" என்றார். எனக்கு ஒன்றும் புரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருந்தது.

அவர் விளக்கினார். "திருமூலர் கூறியது நிறைவான நிலை. எடுத்த எடுப்பில் 64 மாத்திரையளவு கும்பகம் செய்ய முடியாது – செய்யவும் கூடாது. பூரகம் ஒரு பங்கு என்றால், கும்பகம் நான்கு பங்கு, ரேசகம் இரண்டு பங்கு, இப்படித் தொடங்க வேண்டும். 5 மாத்திரை பூரகம், 20 மாத்திரை கும்பகம், 10 மாத்திரை ரேசகம் என்று வளர்வதற்கே பல மாதங்கள் ஆகும். படிப்படியாக வளர்ந்து 16 மாத்திரை பூரகம், 64 மாத்திரை கும்பகம், 32 மாத்திரை ரேசகம் என்ற நிலையை எட்ட வேண்டும். பிறந்த குழந்தை தவழ்ந்து, நடந்து, அதன் பிறகுதான் ஓட வேண்டும்" என்று விளக்கமாகக் கூறினார். அதற்கடுத்த சில மாதங்களில் அவர் இறைவன் திருவடி அடைந்துவிட்டார்.


நம் உடம்பில் பத்து வகையான வாயுக்கள் உள்ளன. அவை : 1) பிராணன் – மூச்சு வழியாய் இயங்கும் உயிர்வளி. 2) உதானன் – வாய் வழியாய் இயங்கும் எழுவளி, 3) அபானன் – எருவாய் வழியாய் இயங்கும் விழுவளி, 4) சமானன் – உடம்பெங்கும் பரவியுள்ள நிறைவளி, 5) வியாதன் – உணவைச் செரிப்பிக்க உதவும் அறுவளி, 6) நாகன் – வேண்டாப் பொருளை வெளியேற்றும் தும்முவளி, 7) கூர்மன் – கண்களைப் பல திசைகளில் திருப்ப உதவும் நோக்குவளி, 8) கிரிகரன் – கொட்டாவி உண்டாக்கும் சோம்புவளி, 9) தேவதத்தன் – கண்ணிமைத்தல், வாயசைத்தல் இவற்றிற்கு உதவும் நுண்வளி, 10) தனஞ்செயன் – உடலை வேறுபடுத்தும் பருவளி. இறந்தபின் உடலை வீங்க வைப்பதும் இதுவேயாகும்.

இவை பத்தையும் முறையாக இயங்க வைப்பது பிராணாயாமம். இந்தப் பத்தும் முறையாக இயங்கினால் நரை, திரை, மூப்பு வராது. அதனால் வாழ்வு நீடிக்கும். பிராணாயாமத்தில் மூச்சை உள் இழுக்கும்போது, விழிப்போடு ஆழமாக இழுக்க வேண்டும். தொண்டை, மார்பு, விலாப் பக்கங்கள், அடிவயிறு ஆகியவற்றில் நிரம்புமாறு செய்ய வேண்டும். வெளிவிடும்போது மெதுவாகவும், சீராகவும் இப்பகுதிகள் சுருங்குமாறு வெளியேற்ற வேண்டும். இதை

"மேல்கீழ் நடுப்பக்கம் மிக்குறப் பூரித்துப் / பாலாம் இரேசகத் தால்உட் பதிவித்து / மாலாகி உந்தியுட் கும்பித்து வாங்கவே / ஆலால முண்டான் அருள்பெறலாமே" என்று 560–வது பாடலில் குறிப்பிடுகிறார் திருமூலர். நமக்கு வசதியான பிராணாயாமம் ஒன்றுண்டு. அதை யாரும் செய்யலாம். அதை அடுத்த இதழில் சொல்கிறேன்.

●

அட்டைப்படக் கட்டுரை



வங்க மொழியால் வந்த உலகத் தாய்மொழி தினம்

மேற்கு பாகிஸ்தானில் ஆட்சி மொழியாக இருந்த உருது 1948–இல் மொத்த நாட்டுக்குமான ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டது. ஆனால் கிழக்குப் பாகிஸ்தானின் (இப்போதைய வங்கதேசம்) பெரும் பான்மையான மக்களால் வங்க மொழியே பேசப்பட்டது என்பதால், இந்த அறிவிப்பு பலத்த எதிர்ப்பைச் சந்தித்தது. இதையடுத்துப் பெரிய போராட்டம் வெடித்தது.

டாக்கா பல்கலைக்கழக மாணவர்களும், டாக்கா மருத்துவக் கல்லூரி மாணவர்களும் 1952 பிப்ரவரி 21 அன்று நடத்திய போராட்டத்தின் போது காவல்துறை துப்பாக்கிச் சூட்டை நடத்தியது. இதில் பலர் உயிரிழந்தனர். அந்த நாளை நினைவு கூரும் வகையில், வங்கதேசம் ஆண்டு தோறும் ‘தாய்மொழி நாளாக’ இதனைக் கொண்டாடியது.

இந்த நாளை அங்கீகரிக்கும் வகையில், ஐ.நா.–வின் கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ 1999–இல் பிப்ரவரி 21–ஐ ‘தாய்மொழி தின’மாகக் கொண்டாடும் நாளாக இதனை அறிவித்தது. இந்த நாள்தான் சர்வதேசத் தாய்மொழி நாளாக ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகிறது.

பசி வந்தால் அழுகிற குழந்தை தாயின் மார்போடு நெருக்கம் கொள் கிறது. கேட்கத் தொடங்குகிறபோது, தாயின் குரலே குழந்தை அறியும் முதல் மொழி. குழந்தைக்குத் தாயின் மீதுள்ள உரிமையைப் போலவே, மொழியின் மீதும் உரிமை உள்ளது. இந்தியா முதலிய பல்வேறுபட்ட கலாச்சாரம் கொண்ட நாட்டில், மொழி என்பது வெறும் வார்த்தைகள் மட்டுமல்ல; வாழ்வியலும்கூட.

மொழியை அறிதல், மொழி வழியாக அறிதல் ஆகிய இரண்டும் கற்றலுக்கான இரு பகுதிகள். உலகம் முழுவதும் கிட்டத்தட்ட 6000 மொழிகள் பேசப்படுகின்றன. அதில் வெறும் 150 மொழிகளைத்தான் (4%) உலக மக்கள் தொகை (97%) 700 கோடிப் பேரில் 650 கோடிப் பேர் பயன்படுத்துகின்றனர்.

மீதமுள்ள 96 சதவீத மொழிகளை வெறும் 3 சதவீத மக்களே பேசுகின்றனர். இந்த 3 சதவீதத்தில்தான் பெரிதும் கண்டுகொள்ளப்படாத பழங்குடி இன மொழிகள் அடக்கம். இதில் பெரும்பாலானவைக்கு எழுத்துக் கிடையாது.

இந்தியாவில் 780 மொழிகள் பேசப்படுவதாக People Linguistic Survey of India - 2012 அறிக்கை கூறுகிறது. 1961–ஆம் ஆண்டு கணக்கெடுப்பை ஒப்பிடும் போது, 220 மொழிகள் 50 வருடங்களில் அழிவைச் சந்தித்திருக்கின்றன. அதே நேரத்தில் இந்தி பேசுகிற மக்கள் தொகை 14 கோடியிலிருந்து 40 கோடியாக உயர்ந்திருக்கிறது.

மொழி சேகரித்திருக்கிற அறிவு முக்கியமானது. அடுத்த தலைமுறைக்கு அது முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும். கலாச்சார மற்றும் பல்வேறுபட்ட நினைவுகளின் தொகுப்பாக மொழி திகழ்கிறது.

உலகில் கல்வியில் சிறந்து விளங்கும் நாடுகளில் தாய்மொழியே பிரதான கற்றல் மொழியாக உள்ளது. பின்லாந்து, கியூபா, ஜப்பான் எனக் கல்வியில் சிறந்த நாடுகளை எடுத்துக் காட்டாகக் கூறலாம்

மொழி என்பது மனிதர்களின் கல்வி மேம்பாட்டுக்கு உதவும் தகவல் தொடர்புக் கருவி மாத்திரமல்ல, அது பண்பாட்டு அடையாளம். உலகெங்கும் அடையாளம் காணப்பட்டிருக்கும் சுமார் 6000 மொழிகளிலும் 43 சதவிகித மொழிகள் அழியும் நிலையிலுள்ளன. இந்த மொழிகளில் பலவற்றைப் பேசுவோரின் எண்ணிக்கை வெறும் 1000–க்குள்ளேயே இருக்கும். சில நூறு மொழிகள் மாத்திரமே பொதுமக்கள் பயன்பாட்டிலும் கல்வியைப் பயிற்றுவிப்பதிலும் வழக்கிலுள்ளன. அதிலும் 100–க்கும் குறைவான மொழிகளே நமது டிஜிட்டல் உலகில் பயன்படுத்தப்படுகின்றன.

தாய்மொழி ஓர் இனத்துக்கு உரியது. உடம்புக்கு உயிர் இருந்தால்தான் அது இயங்கும். இல்லையேல் அது உயிரற்ற சடலமாகிவிடும். இதே போலத்தான் உயிரோடுள்ள ஒருவன் உயிரோடு மட்டுமல்லாமல், இயங்கிக் கொண்டே இருப்பான். அவனுடைய உறக்கம்கூட இயக்கத்தின் ஒரு பகுதியே தான். அவன் விழித்திருந்தால் எதை யாவது செய்து கொண்டே தான் இருப்பான். அதற்கு அவனுக்குப் பிற ஒருவனின் தொடர்பு தேவைப்படும்.

தொடர்ந்து தொடர்பில் இருக்க அவனுக்கு ஊடகமாக இருப்பது மொழி தான். மொழி இல்லை என்றால், உயிரில்லாத பிரேதத்துக்குச் சமமானவனாக அவன் ஆகிவிடுவான். அதனால் மொழி இல்லையேல் வாழ்க்கை இல்லை. தாய்மொழி இதனால்தான் சிறப்புப் பெறுகிறது.

– ந.நி.

சிக்கந்தர் மலை



வாரியார், திருப்பரங்குன்றத்தில் ஒருமுறை சொற்பொழிவு நிகழ்த்திக் கொண்டிருந்தார். கூட்டத்தில் இருந்த ஒருவர் எழுந்து நின்று, ‘‘சுவாமி! இந்தத் திருப்பரங்குன்றத்தை ‘சிக்கந்தர் மலை’ என்று பெயர் மாற்றம் செய்ய வேண்டும் என்று சிலர் கோரிக்கை விடுத்துள்ளனர். இது குறித்துத் தங்களின் கருத்து என்ன?’’ என்று கேட்டார்.

அதற்கு வாரியார், ‘‘இதில் என்ன தவறு இருக்கிறது. அவர்கள் சிக்கந்தர் மலை என்று பெயர் வைத்தால் வைத்துக்கொள்ளட்டுமே’’ என்றார்.

அனைவரும் ‘‘அது எப்படிப் பொருந்தும்? என்ன சுவாமி தாங்களே இவ்வாறு கூறினால், சமுதாயத்தில் குழப்பம் ஏற்பட்டு சமயச் சண்டையாக இது மாறிவிடாதா?’’ என்று கேட்டனர்.

அதற்கு வாரியார், ‘‘முருகனின் தந்தை பெயர் என்ன? சிவபெருமான். முருகனுக்கு ‘கந்தன்’ எனப் பேருண்டு. இறைவனை ‘‘ன்’’ போட்டு அழைப்பது மரியாதையா இருக்காது, அதனால் கந்தர். முருகனின் தந்தை பெயர் சிவபெருமான். அப்படிப் பார்த்தால் முருகனின் இனிசியல் (சி.கந்தர்) சிக்கந்தர். சிக்கந்தர் வாழும் மலை என்று பொருள் வருமாறு ‘சிக்கந்தர் மலை’ன்னு பேர் வைப்பதில் தவறில்லை’’ என்று கூற, கூட்டத்தினர் மகிழ்ந்தனர்.

யாரும் எதிர்பாராத இந்தப் பதிலால், மக்களைச் சிந்திக்கச் செய்து, இறைவன் ஒருவரே என்ற எண்ணத்தை அவர்களின் உள்ளத்தில் விதைத்தது. வாரியாரின் நகைச்சுவையான பேச்சை மற்ற மதத்தவர்களும் மிகவும் ரசித்தார்கள்.



குமரனின் அருள்பெற்ற குமரகுருபரர்



பதினேழாம் நூற்றாண்டில் ஆன்மிகத்தையும், இலக்கியத்தையும் தமது இரு கண்களாகப் பாவித்து வாழ்ந்த தமிழ்ப் புலவர் குமரகுருபரர். இவர் திருநெல்வேலி மாவட்டம், திருவைகுண்டம் அடுத்து, 'கைலாசபுரம்' என்னும் சிற்றூரில் சைவ – வேளாளர் குடும்பத்தில் பிறந்தார். இவரின் பெற்றோர் சண்முக சிகாமணிக் கவிராயர் – சிவகாம சுந்தரி ஆவர். இவர் ஐந்து வயதுவரை வாய் பேசாமல் இருந்தவர்.

இவருடைய பெற்றோர் திருச்செந்தூருக்குக் குழந்தையை அழைத்துச் சென்று முருகப் பெருமானிடம், "இக்குழந்தை பேசாவிட்டால், இக்கடலில் விழுந்து இறப்போம்" எனக் கூறி விரதம் இருந்தனர்.

நாற்பத்தி ஆறாம் நாள்... மகன் பேசுவானா...? அல்லது நாம் கடலில் விழுந்து இறப்போமா...? என்று முருகனைத் தொழுது நின்றார்கள்.

அப்போது எதிர்பாராத சம்பவம் ஒன்று நடைபெற்றது! ஆலய அர்ச்சகர் மீது ஆவேசம் வந்து, வேலெடுத்துப் பூமாலை ஒன்றைக் குழந்தையின் கழுத்தில் போட்டார். பின்... விபூதியும், தீர்த்தமும் தந்தார். சொக்கலிங்கனார்... முருகன் குழந்தையைக் 'குமர குருபரா' என அழைத்ததோடல்லாமல், நாவில் "சடாக்கர மந்திரம்' பொறித்தார்.

உடனே "பூமேவு செங்கமலப் புத்தேளும் தேறரிய" எனத் தொடங்கும் பாடலைப் பாடினார். இதுவோ பெரிய பெரிய புலவர்களால் எழுதப்படும் கந்தர் வெண்பாவில் வரும் பஃறொடை வெண்பா பாடலாகும்.

ஐந்து வயதே ஆன குமரகுருபரரின் பாடலைக்



வசந்தநாயகன்

கேட்டுப் பெற்றோர் பேருவகை அடைந்தார்கள்.

இளைஞரானப் பின்... தாய், தந்தையின் அனுமதி பெற்றுப் பல திருப்பதிகங்களுக்குச் செல்லத் தொடங்கினார். தமிழின் மீது அசைக்க முடியா ஆவல்கொண்டார் குமரகுருபரர். அருட்சுவை, பொருட் சுவை, தேன்சுவை இனிக்க இனிக்கப் பற்பல நூல்களை யாத்தார்.

குமரகுருபரர் இச்சமுதாய மக் களுக்குப் பற்பல நூல்களை யாத்துள் ளார். அவை திருச்செந்தூர்க் கலி வெண்பா, கயிலைக் கலம்பகம், மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம்பகம், நீதிநெறி விளக் கம், திருவாரூர் நான்மணி மாலை, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், சிதம்பரம் மும்மணிக்கோவை, சிதம் பரச் செய்யுள் கோவை, பண்டார மும்மணிக்கோவை, காசிக் கலம்பகம், சகலகலாவல்லி மாலை, காசித்துண்டி விநாயகர் பதிகம், மீனாட்சியம்மை இரட் டைமணி மாலை என்பனவாகும்.

குறுநில மன்னர்கள் தமிழகம் முழுவதும் ஆண்டார்கள். அவர்கள் ஆட்சியில் பொழுதுபோக்கும், ஆடம்பரமுமே மிஞ்சி நின்றன. புல வர்கள் பலரும் பேரிலக்கியம் படைப் பதை விரும்பவில்லை. அவர்களை மன்னர்களும் சரிவர ஆதரிக்க வில்லை.

திருமலை நாயக்கர் அரசவையில் மதுரைக் கலம்பகத்தையும், மீனாட்சி யம்மைப் பிள்ளைத் தமிழையும் அரங்கேற்றம் செய்தார் குமரகுருபரர். தெலுங்கு மன்னர் திருமலை நாயக் கரைத் தமது பாடலில் புகழவில்லை. மாறாகப் பல்வேறு தமிழ் மன்னர் களையும், சங்கத் தமிழின் நயங்களை யும் புகழ்ந்து பாடி உள்ளார். இதற்குக் காரணம், முருகப் பெருமான் அரு ளால் பெற்ற வலிமையும், துணிவு மாகும்...!

குமரகுருபரரின் தமிழ்ப் பற்றுக்கு அளவே இல்லை. தமிழின் இனிமை யையும், புதுமையும் கலந்து எழுதி யவர். “காசிக் கலம்பகம்” என்ற அற்புத நூலில், தமிழ்மொழிக்கு நாற் பதுக்கும் மேற்பட்ட அடைமொழிகள் கொடுத்துச் சிறப்பித்துள்ளார்.

குமரகுருபரர் பற்பல மடங் களுக்குச் சென்றார். மடாலயங்களில் நல்ல வரவேற்பையும் பெற்றார். அறமும், தர்மமும் நிலைநாட்ட குமர குருபரர் வடநாடு சென்றார். அங்கு ஆட்சிசெய்த மிலேச்ச மன்னனைக் கண்டார்.

அவரது நடையையும், உடையை யும் கண்ட மன்னன் “யார் நீ?” என்றான் கிண்டலாக.



“கடல், நிலவுலகம் ஆகிய அனைத் தையும் ஆட்சி செய்யும் தலைவ னாகிய கடவுளின் அடிமை நான்” என்றார் குமரகுருபரர்.

“கடவுள் உண்டு எனப் போற்று கின்ற அனைவருக்கும் பொது வானவரோ நீ?”

“ஆம்” என்றார் துணிந்து.

“அப்படியென்றால்... என்னோடு அமர்ந்து சாப்பிடுவீர்களா?”

“மன்னனின் விருப்பப்படியே” என்றார்.

மிலேச்ச மன்னன், குமரகுருபரர் புலால் உண்ணமாட்டார் என்பதனை

கடவுளுக்காகப் பாடுகிறார்!

அக்பர் தான்சேனிடம் கேட்டார், “உன் குருவின் பாடல் போல் உன் பாட்டு ஏன் இனிமையாக இல்லை?”

அதற்குத் தான்சேன், “நான் உங்களுக் காகப் பாடுகிறேன். என் குருவோ, கடவுளுக் காகப் பாடுகிறார். அதனால்தான் அது இனி மையாக இருக்கிறது!” என்றார்.

– நெ. இராமன்

அறிந்து வேண்டுமென்றே... மாமிச உணவைப் பரிமாறினான். குமரகுருபரர் தம் மனதிற்குள் முருகனை வேண்டி அமைதியாக உண்ணாமல் இருந்தார்.

“ஏன் சாப்பிடாமல் இருக்கிறீர்கள்...?”

“பன்றிக்கறி எங்கே...?”

“யாம் அதை உண்ணமாட்டோம்.”

“ஏன்...?”

“எமது குருநாதர் உண்ணக் கூடாது” என்று கட்டளையிட்டுள்ளார்!”

“அப்படியா? எனது குருநாதரான சிவனும் மாமிசம், துறவிகள் சாப்பிடக் கூடாது என உத்தரவிட்டுள்ளார்” என்றார் புன்னகையுடன்...!

மன்னன் குமரகுருபரரைப் பரிட்சிக்கும் வகையில், “உண்மையான இறைத் தொண்டராக இருந்தால் தெய்வீகம் உணர்த்தும் அற்புதம் ஒன்றை நீங்கள் இங்கு நிகழ்த்திக் காட்டுங்கள்” என்றான்.


“இன்றைய இரவு உமது தெய்வம் என்னைப் பற்றித் தெரிவிக்கும்” என்றார் குமரகுருபரர். இரவு முழுவதும் முருகனை நினைத்துத் தியானத்தில் ஆழ்ந்தார்.

மன்னனின் கனவில் அவனது இஸ்லாமிய குரு தோன்றி, “உன்னை நாடி வந்திருக்கும் துறவியான குமரகுருபரர் விரும்புகின்ற பொருள்கள், உதவிகள் அனைத்தையும் செய்து கொடுத்து விரைந்து அனுப்புக” என்றார்.

மறுநாள்...

“தங்கள் ஆசைகள் அனைத்தையும் நிறைவேற்றுவேன்” என்றான் மன்னன். “கேளுங்கள், தங்களுக்கு என்ன வேண்டும்?”

“காசியில் அறுபத்தி நான்கு மடங்கள் (காட்) கட்டுவிக்க வேண்டும்; அதற்கு வேண்டிய நிலம், பொன், செல்வம் (பணம்), கட்டுவிக்க ஆட்கள் வேண்டும்” என்றார் குமரகுருபரர். அந்த மன்னன் துறவி கேட்ட அத்தனை உதவிகளும் செய்து கொடுத்தான்!



வடநாட்டுப் புலவர்கள், கவிஞர்கள், பொதுமக்கள் அனைவரும் வியக்கும்படி 64 மடங்கள், சத்திரங்கள் கட்டி முடித்தார். சிலர் குமரகுருபரரின் செயல் கண்டுப் பொறாமையாகக் கேள்வி கேட்டனர்.

“பல உயிர்களை வதைத்து மாமிச உணவு உண்பவர் கொடுக்கும் கைப்பொருள் கொண்டு தருமக் காரியங்கள் செய்தது சரியா?” என்பதே அது!

“மழை மேகம், உப்புநீர்க் கடலில் இருந்துதானே நீர் முகந்து நன்னீர் பொழிகின்றது; நானிலத்தையே வாழ வைக்கின்றது! இந்தக் குமரகுருபரர் மழை மேகம் போன்றவர்” என்றார் கேள்விக் கேட்போரிடம்...!

குமரகுருபரர் தமிழ், இந்தி, சமஸ்கிருதம் முதலிய மொழிகளில் புலமை பெற்றவர். ஆனாலும் வேற்று மொழிகளை வெறுக்கவில்லை.

சைவ சித்தாந்தக் கொள்கைகளைத் தமிழ்நாடு மட்டுமல்லாமல், வடநாடு முழுவதும் பரப்பினார்.

குமரகுருபரர் ஒரு தத்துவஞானி; ஆன்மிகப் பெருந்தகை; கல்விப் பெருங்கடல்; சைவ சித்தாந்தப் பேரொளியாகவும் திகழ்ந்த அவரைப் போற்றிப் புகழ்வோமாக! •

சிறுகதை

சுவர் இருக்கும்வரை...

மா. கமலவேலன்



“போய்யா, பொசகெட்டவனே! ஒரு வருஷமா... ரெண்டு வருஷமா... இருபத்தியேழு வருஷம்... உன்னோட பொய்... பித்தலாட்டமெல்லாம் பார்த்து... கேட்டு சலிச்சுட்டேன்... நாதியற்றவளா... இப்போ நான் நடுத்தெருவுல நிக்கறேன்...” குமுறிக் கொந்தளித்தாள் திலகம். அதிகாலைப் பொழுது. வேடிக்கை பார்க்க அக்கம்பக்கத்தார் கூடிவிட்டனர்.

இடி, மின்னலாய் அலட்டிக் கொண்டிருந்தது ஆகாயம்.

மூன்று கற்களின் துணைகொண்டு முக்கோண வடிவில் தற்காலிக அடுப்பை உருவாக்கினான் ஆரோக்கியம்.

மணிக்கட்டில் ஒரு துளி விழுந்தது. நிமிர்ந்து அண்ணாந்து ஆகாயத்தைப் பார்த்தான்.

“பயப்படாதே, போக்கு மேகம்தான். மழை இப்போதைக்கு வராது. நீ அடுப்பைப் பற்ற வை...”

“சரிங்கண்ணே...”

பழைய போஸ்டர்களை ஒன்றாய்ச் சுருட்டி அடுப்பில் வைத்தான்; தீக்குச்சியை உரசினான். பொசபொசவென்று போஸ்டர் எரியத் தொடங்கியது.

அலுமினியப் பாத்திரத்தில் தயாராய்க் கரைத்து வைத்திருந்த மைதாமாவுக் கரைசலை ஆரோக்கியத்திடம் நீட்டினார் மருதைசாமி.

மைதாமாவுக் கரைசலைக் காம்பு வளைந்த கரண்டி கொண்டு கிண்டத் தொடங்கினான் ஆரோக்கியம்.

“பசை ரொம்பவும் கெட்டியாயிடக் கூடாது. கெட்டியாயிட்டா... பசை கூடுதலாகத் தேவைப்படும். அதுக்குன்னு தண்ணியாயிருந்தால் ஒட்டறதுக்குத் தோது வராது.”

மருதைசாமியின் மிரட்டலான பேச்சின் அச்சத்தில் பொறி கலங்கி நின்றான் ஆரோக்கியம்.

“மரம் மாதிரி நின்னா வேலைக்கு ஆவாது. இந்தா... இந்த மயில் துத்தத்தைப் போட்டு, கரைசலை நல்லாக் கிண்டிவிடு...”

“இது... எதுக்கு அண்ணே...?” பயந்துகொண்டே கேட்டான்.

“டேய்... மைதாமாவுல நாம காய்ச்சற இந்தப் பசையை ரெண்டு மூணு நாளா... வச்சிருந்து ஒட்ட வேண்டிவரும். வீட்டுல எலி தொந்தரவு ஜாஸ்தி. மயில் துத்தம் போட்டுக் கிண்டினால் எலி கிட்ட வராது.” இப்படிப் பேச்சு ஒருபுறம் இருந்தாலும், மருதைசாமியின் கண்கள் களியின் மீதுதான் பதிந்திருந்தன.

“அண்ணே... காய்ச்சினது போதுமா?”

களியைக் கரண்டியில் எடுத்துப் பெருவிரல், ஆள்காட்டி விரல்களுக்கு இடையே வைத்துப் பிதுக்கிப் பதம் பார்த்தார்.

“உம்... போதும். தீயைக் குறைச்சிடு.”

நஞ்சை வயல் சேறுபோல் பசை பளபளத்தது.

“பாத்திரத்தை இறக்கிவை. அடுப்புக் கட்டியை அப்படியே சுவர் ஓரமா... எடுத்து வை. நெருப்பைத் தண்ணீர் ஊற்றி அணைச்சிடு. மிச்ச போஸ்டரைச் சாக்குப் பையில எடுத்துப் போடு...” மளமளவென கட்டளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார் மருதைசாமி.

ஆரோக்கியமும் அவருடைய வேகத்திற்கு

ஈடுகொடுக்கும் வகையில் இயங்கிக் கொண்டிருந்தான்.

பாத்திரத்தில் இருந்த பசையை வாளிக்கு மாற்றினார் மருதைசாமி. பசை வாளியைச் சைக்கிள் ஹாண்டில் பாரில் தொங்கவிட்டார். ஏணியைச் சைக்கிளின் நீளவாக்கில் கயிற்றால் கட்டினார்.

ஆரோக்கியம் பார்த்துக் கொண்டே நின்றான்.

மழைத் தூறல் நெருக்கமாய் விழத் தொடங்கியது.

"அண்ணே... மழை பெருசா வரும்போலத் தெரியுது..."

"வரட்டும். டேய், மழை கொட்டும்; வெயில் கொளுத்தும். பனி ஊசியாய் உடம்பில் குத்தும். மணி ஏழுகூட ஆகலே. பத்து மணி மாதிரி இருட்டிடுச்சு. இந்த ராத்திரி நேர இருட்டுதான்டா நமக்கு வசதி...!"

"நோட்டீஸ் ஒட்டாதே!" அப்படின்னு அறிவிப்பு செய்திருக்கிற சுவர்களிலும் நாம போஸ்டர் ஒட்டியாகணும். இதுக்கு இடையில தெரு நாய் தொந்தரவு வேற... கட்சி போஸ்டர்னா... காவல்துறை கெடுபிடி இருக்கும். டேய் ஆரோக்கியம் உனக்கு ஒண்ணு தெரியுமா? ரத்தம் சிந்தாமல் யுத்தம் இல்லை! என்னடா அப்படிப் பாக்கறே! சுதந்திரப் போராட்டக் காலத்துல போஸ்டர் ஒட்டினதுக்காக... போலீஸ் பூட்ஸ் காலால மிதிபட்டுச் சிறைத் தண்டனை பெற்ற தியாகிகள் நிறையப் பேருடா. சரி... சரி... அப்படியே அந்தப் போஸ்டர் பையை எடுத்துக் காரியர்ல வை..."

இடியின் தொடர் முழக்கம்; மின்னலின் மிரட்டல். மின்சாரம் மின்னலின் முன் மண்டியிட்டது. நகரமே இருளில் மூழ்கியது!

"நல்ல நேரம்டா! நீ கிளம்பு!"

"மேட்டுப்பட்டிப் பகுதியில ஏதோ போஸ்டர் ஒட்டணும்னு சொன்னீங்க..."

"முடியுமா உன்னால. அப்படின்னா ஒண்ணு செய். நம்ம வழக்கமா வைக்கிற மூவேந்தர் புத்தகக் கடையிலே அந்தப் போஸ்டர்கள் இருக்குது. முப்பது போஸ்டர் எடுத்துக்க. மேட்டுப்பட்டி பாவனச்சாவடி பக்கம் உள்ள சுவர்கள்ல ஒட்டிடு. இந்தா... சின்ன வாளியில கொஞ்சம் பசை எடுத்துக்க. நாய்கள் ரொம்ப அலையும்டா. சுதானம்" சொல்லிவிட்டு மருதைசாமி சைக்கிளில் ஏறி அமர்ந்தார்.

ஆரோக்கியம், பேருந்துநிலையம் அருகேயுள்ள புத்தகக்கடை நோக்கி நடந்தான். மழை வலுத்தது; கனத்தது... மூன்று மணிநேரம் மூர்க்கமாய்க் கொட்டித் தீர்த்தது. சாக்கடைகள் நிரம்பி வழிந்து தெருவில் ஆற்றுப்பெருக்காய் ஓடிக் கொண்டிருந்தது.

"வெட்கம்... மானம்... சூடு சொரணை எதுவுமே உனக்குக் கிடையாதா? நீயெல்லாம் ஒரு மனுஷ ஜென்மந்தானா? தூ!" காரித் துப்பினாள் திலகம்.

"யாரைப் பார்த்து என்ன கேள்வி கேட்டே? நான் உன் புருஷன்டி. ராத்திரி பூரா... சொட்டச் சொட்ட மழையில நனைஞ்சு... நூறு போஸ்டர் ஒட்டிட்டு வந்திருக்கேன்."

"தண்ணியைப் போட்டுட்டு எங்கேயாவது மல்லாந்து கிடந்திருப்பே! ஊரே இருட்டுல கிடந்து தவிச்சுது. மழை வேற கொஞ்சம்கூட விடாமப் பெஞ்சுது... நீ போஸ்டர் ஒட்டினே?!"

"நிதானமா... நான் சொல்றதைக் கேளுடி..."

"போய்யா, பொசகெட்டவனே! ஒரு வருஷமா... ரெண்டு வருஷமா... இருபத்தியேழு வருஷம்... உன்னோட பொய்... பித்தலாட்டமெல்லாம் பார்த்து... கேட்டு சலிச்சுட்டேன்... நாதியற்றவளா... இப்போ நான் நடுத்தெருவுல நிக்கறேன்..." குமுறிக் கொந்தளித்தாள் திலகம்.

அதிகாலைப் பொழுது. வேடிக்கை பார்க்க அக்கம்பக்கத்தார் கூடிவிட்டனர்.

"நான் குடிகாரன்தான். என்னடி நான் உனக்குக் குறை வைச்சுட்டேன். என் ரெண்டு கையையும் பார்த்தியாடி... குஷ்டம் பிடிச்சமாதிரி ஆயிட்டுதுடி... கரடுமுரடான சுவரு... கண்ணாடி பதிச்ச சுவரு...ன்னு அவசர அவசரமா... பயந்து பயந்து போஸ்டர் ஒட்டறப்போ... கல்குத்தி... கண்ணாடி கிழிச்சி ரெண்டு கைகளிலும் சதை பிய்ந்து ரத்தம் வந்திருக்குது தெரியுமா? அப்டியெல்லாம் கஷ்டப்பட்டு உழைச்சு... உனக்குக் கஞ்சி ஊத்தியிருக்கிறேன். நம்ம ஒரே பொண்ணு செல்வியையும் ஒருத்தன் கையில பிடிச்சுக் கொடுத்தாச்சு... சும்மா வாய்க்கு வந்தபடியெல்லாம் பேசக் கூடாது..."

"ஆமா... நீ மட்டும்தான் உழைச்சுக் கொட்டினே! நான் வீட்டுல சும்மா உட்கார்ந்து சோலி விளையாடிக்கிட்டு இருந்தேன்... நல்லாத்தான் வருது வாயில... தெருத் தெருவா... அலைஞ்சி... காய்கறி விற்றேன்... சித்தாள் வேலை பார்த்தேன்... பஸ் ஸ்டான்டுல பூக்கட்டி... வியாபாரம் பண்ணினேன். கரணைக் கல்லுகூட... உடைச்சிருக்கேன். இப்போ நாலு வீட்டுல பத்துப் பாத்திரம் தேச்சு... வர்ற காசுல... செல்விக்குத் தேவையானதை அப்பப்போ செய்துக்கிட்டு இருக்கிறேன்..." குரல் உடைந்து அழத் தொடங்கினாள் திலகம்.

"ஒப்பாரி வைக்காதே... தெருவே வேடிக்கை



பார்க்குது... போ... போ.. போயி காப்பித் தண்ணி போடு.'' மருதைசாமி குரலைத் தாழ்த்தினார்.

''காப்பியா? காப்பித்தூள், சர்க்கரை, பால்... எதுவுமே கிடையாது...'' கையை விரித்து நக்கலாய்க் கூறினாள் திலகம்.

''தரித்திரம்... தரித்திரம்...'' விருட்டென்று வீட்டைவிட்டு வெளியேறினார் மருதைசாமி...

அன்றும் அடுத்த நாளும் ஒத்தக்கண் பாலம் அருகேயுள்ள மின்மயானக் கூடத்தில் சென்று படுத்து இரவுப் பொழுதைக் கழித்தார். இரண்டு நாட்கள் சரியாகச் சாப்பிடக் கூடவில்லை. வறட்டு கௌரவம். வீட்டை நோக்கிச் செல்ல கால்கள் மறுத்தன.

மூன்றாம் நாள் காலை...

அச்சக முதலாளி சிவநேசனைக் காணச் சென்றார் மருதைசாமி. ''மின் மயானத்துல விரட்டி

விட்டுட்டாங்களா?'' சிவநேசன் கேலியாகக் கேட்டார்.

வீட்டில் சண்டை என்றால் மருதைசாமி மின்மயானத்தில் தஞ்சம் அடைந்துவிடுவார். இந்த விவரம் சிவநேசனுக்கு மட்டுமல்ல, மருதை சாமியை அறிந்தவர்கள் எல்லோருக்குமே தெரிந்த செய்திதான்!

''முதலாளி... மனசே சரியில்லை.. அதனால ரெண்டு நாளா டவுன் பக்கமே வரலே... செல வுக்குப் பணம் இல்லே... அதுதான் உங்களைப் பார்த்துட்டுப் போகலாம்னு வந்தேன்.

''அப்படியா...? அரைக்கிழவன் ஆனபிறகு கிழவிகிட்டே... என்ன வாக்குவாதம்... சண்டை வேண்டிக் கிடக்குது...''

''முதலாளி... அது எப்படி உங்களுக்கு...''

''ஆரோக்கியம் சொன்னான்...''

''முதலாளி... சத்தியமா... நான் அன்னிக்குக் குடிக்கலே... பெரும் மழை; நிற்கலே... கும்மி ருட்டு. ரோடு எது சாக்கடை எதுன்னு தெரியலே... தெருவெல்லாம் வெள்ளக்காடு. ''எல்க்ட்ரிக் வயர்'' வேற அவுந்து கிடந்தது. எனக்குப் பயம் பிடிச்சுடுச்சு... பக்கத்துல இருந்த புளிய மரத்துல ஏறி, அதோட ஒரு கிளையிலே உட்கார்ந்துட்டேன். விடிய விடிய தூங்கலே... இதுதான் நடந்தது...''

''இதை நீ உன் பெண்டாட்டிகிட்டே சொல்லி யிருக்கலாம் இல்லே...?''

''முதலாளி... அவள் என்னைப் பேசவிட்டால் தானே. கோவத்துல பேயாட்டம் ஆடிட்டாள். தெருவே சுத்தி நின்று வேடிக்கை பார்த்தது...''

''வீட்டுக்கே போகாமல் இருந்துடப் போறியா?''

''உம்... போகணும். காசு இல்லாமல் எப்படிங்க முதலாளி... வீட்டுக்குப் போறது?''

''அதோ... கட்டிங் மெஷின் பக்கத்துல நூறு போஸ்டர் இருக்குது.... தொழிற்சங்கத்துப் போஸ் டர். பார்த்துக் கவனமா ஒட்டணும்... அதுக்கு நீதான் சரியான ஆளு...''

''சரிங்க முதலாளி... இப்பவே போறேன்...''

''பணம் வேணும்னு கேட்டே...''

''வேலையை முடிச்சுட்டு வந்து வாங்கிக் கிறேன்.''

அன்று இரவு ஒன்பது மணி அளவில் பயந்து, பம்மி வீட்டிற்குள் நுழைந்தார் மருதைசாமி.

''வாய்யா... சட்டை வேட்டியெல்லாம் புதுசாயி ருக்குது...!''

''உம்... ஆமா...'' மேற்கொண்டு அவரால் பேச நா எழவில்லை. தன்மானம் தடுத்தது... திரும்பிப் போய்விடலாமா என்றுகூட யோசித்தார்.

''சட்டையைக் கழற்றுய்யா...''

''எதுக்கு...''

''எனக்கு நடந்ததெல்லாம் தெரியும்!''

''என்ன சொல்றே நீ!''

''போலீஸ் அராஜகம் ஒழிக! போராட்டம் வெல்க!'' என்ற போஸ்டரை நீ போலீஸ் ஸ்டேஷன் எதிரே ஒட்டினதும் தெரியும்; அதைப் பார்த்த போலீஸ்காரர் ஒருத்தர் உன்னை ஸ்டேஷனுக்குக் கூட்டிக்கிட்டுப் போய்... துவைச்சு எடுத்ததும் தெரியும்...'' சொல்லிக் கொண்டே மருதைசாமி யின் சட்டையை அவளே கழற்றினாள். அவரை மெதுவாகத் தரையில் உட்கார வைத்தாள். கொதிக்க வைத்த வெந்நீரில் துணியை நனைத்து, அதைப் பந்துபோல் சுருட்டி... காயம்பட்ட இடங் களில் ஒத்தடம் கொடுத்தாள்...

மருதைசாமியால் நம்பவே முடியவில்லை. திலகம் இப்படிக் கனிவாய் மாறுவாள் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை.

''இனிமேல் இந்தப் போஸ்டர் ஒட்டற வேலையை விட்டுடலாம்னு நினைக்கிறேன்...'' விரக்தியில் கூறினார் மருதைசாமி.

''அப்படியெல்லாம் சொல்லாதே. எந்த வேலை யில ஆபத்து இல்லே...! நான்தான் அன்னிக்கு ஆத்திரத்திலே வார்த்தைகளைக் கொட்டிட்டேன். மனசுல வச்சுக்காதய்யா...'' மருதைசாமியின் அகன்ற மார்பைத் தன் கையால் வருடிக் கொண்டே சொன்னாள் திலகம்.

''செய்தி கேள்விப்பட்டு முதலாளி சிவநேதன் ஐயாதான் உடனே ஸ்டேஷனுக்கு வந்து என்னைக் காப்பாற்றினாரு; அவர்தான் புது வேட்டி, சட்டை யும் எடுத்துக் கொடுத்தாரு...'' நாத்தழுதழுக்க முதலாளி செய்த உதவியை நன்றியுடன் மனைவி யிடம் எடுத்துக் கூறினார்.

''அக்கா...''

''வாப்பா ஆரோக்கியம்...''


''அண்ணே... முதலாளி டிபன் வாங்கிக் கொடுத்து அனுப்பிச்சாரு.''

''அப்படியா... உள்ளே வா...''

''திலகம் 'நோட்டீஸ் ஒட்டாதே!'ன்னு சுவர் கள்ல எழுதியிருப்பாங்க... அதையும் மீறி நாங்க ஒட்டறோம்... பலபேர் விட்ட சாபம்தான் இப்படி அடிபட வைச்சிருக்குன்னு நினைக்கிறேன்...''


''சுவர் இருக்கற வரைக்கும் போஸ்டர் ஒட்டத் தான் செய்வாங்க... நீ இல்லேன்னா... இன்னொரு ஆளு ஒட்டப் போறாரு. புலம்பறதை விட்டுட்டு, கையைக் கழுவிட்டு வா... மூணு பேரும் சாப்பிட லாம்.!


கண. குறிஞ்சி



பொன்முடி சி. சுப்பையன்

தியாகம் விளைந்த செம்புலம்





நூலாசிரியர் :
பொன்முடி சி. சுப்பையன்
வெளியீடு : விஜயா பதிப்பகம்
20, ராஜ வீதி, கோவை – 641 001
பக். : 320, விலை ரூ. 250/–
போன் : 0422–2382614

பொன்முடி சி. சுப்பையன் அவர்கள் எழுதிய உள்ளூர் வரலாற்றுப் படைப்புதான் "தியாகம் விளைந்த செம்புலம்" எனும் "உரையிடை இட்ட செய்யுள்" நூலாக வெளிவந்துள்ளது. கோவை மாவட்டம் சூலூர் வட்டத்திலுள்ள கண்ணம்பாளையம் எனும் கிராமத்தின் வரலாறு அதன் சமூகவியல், பண்பாட்டியல், பொருளியல் கூறுகளோடு ஈர்க்கத்தக்க வகையில் படைக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் வரலாறு என்பது ஓர் அறிவுத் துறையாக இன்று அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இங்கிலாந்திலும், பிரான்சிலும் 16–ஆம் நூற்றாண்டில்தான் உள்ளூர் வரலாறுகள் எழுதப்பட்டன. அமெரிக்காவில் இத்தகைய முயற்சி 18–ஆம் நூற்றாண்டில்தான் மேற்கொள்ளப்பட்டது. 19–ஆம் நூற்றாண்டில் உயர் பதவியில் உள்ளவர்கள், ஓய்வுமிக்கவர்கள் இந்த முயற்சியினைத் தொடர்ந்தார்கள். 20–ஆம் நூற்றாண்டில் இது ஒரு பொழுதுபோக்கிற்கான உத்தியாகவும் பயன்படுத்தப்பட்டது.

தமிழகத்தைப் பொறுத்தவரை, சங்ககாலப் புலவர்கள் தத்தம் ஊர்ப் பெயர்களைத் தமது பெயர்களோடு இணைத்தே அடையாளப்படுத்திக் கொண்டதைக் காண முடிகிறது. எடுத்துக்காட்டாக, மாங்குடி மருதனார், புல்லாற்றூர் எயிற்றியனார், துறையூர் ஓடைக்கிழார், குமட்டூர் கண்ணனார், பொருந்தில் இளங்கீரனார், கூடலூர் கிழார். காரிக் கண்ணனார், கருவூர்க் கதப்பிள்ளையார், குறுங்கோழியூர் கிழார், நப்பாலத்தனார் போன்ற புலவர்களைக் குறிப்பிட முடியும்.

உள்ளூர் வரலாறு, வரலாற்றில் மட்டுமல்லாது இலக்கியத்திலும் எதிரொலித்தது. வட்டார வழக்கினை இலக்கியத்தின் ஒரு கூறாக மாற்றி

னார், கொங்குநாட்டைச் சார்ந்த படைப்பாளி ஆர்.சண்முகசுந்தரம் அவர்கள். அவரை அடியொற்றி கரிசல் இலக்கியம் பரிணமித்தது. கி.ரா. அதன் முன்னத்தி ஏராக மிளிர்ந்தார்.

அரசியல் வரலாறு போலவே, சமூக வியல் வரலாறும் முக்கியமானது என்ப தைப் பர்டன் ஸ்டீயின் போன்றவர்கள் வலியுறுத்துகின்றனர். இந்தப் பின்னணி யில் வைத்துக் காணும்பொழுதுதான் "தியாகம் விளைந்த செம்புலம்" நூலின் அருமையை நாம் உணர முடியும்.

வட்டார மொழியும், வட்டார வழக்குகளும் வளர்ந்த அளவுக்கு வட் டார வரலாறுகள் வளரவில்லை. அவ் வகையில் "தமிழ்நாட்டின் முதல் வாழ் வியல் வரலாற்று நூல்" என்பதாகப் புலவர் செந்தலை ந. கவுதமன் அவர் களைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 1995–ஆம் ஆண்டு வெளிவந்த "சூலூர் வரலாறு" எனும் சிறப்புமிகு நூலைக் குறிப்பிட முடியும். அது கொங்கு நாட்டி லுள்ள சூலூர் எனும் ஊரின் உள்ளூர் வரலாறாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பொன்முடி சி. சுப்பையன் அவர் கள் சூலூரிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கண்ணம்பாளையம் எனும் அவரது இரண்டாம் குறுந் தாயகம் (Secondary Motherland) பற்றி எழுதிய இந்நூல், உள்ளூர் வரலாற்றில் தனித்துவமான ஒன்று.

இந்த நூல், நனவோடை (Streem of Conciousness) மொழி நடையில் எழுதப் பட்டுள்ளது. அதாவது நூலாசிரியரே ஒரு பாத்திரமாக வந்து, அவரது நினைவு களையும் / அனுபவங்களையும் நேரடி யாகக் கூறுவது போல் இந்நூல் எழுதப் பட்டு உள்ளது. இது வரலாறும், புனைவும் முயங்கிய ஒரு புதுமையான வெளிப்பாடு.

நனவோடை மொழியில் தமிழில் வெளிவந்த முதல் படைப்பாகத் "தியாகம் விளைந்த செம்புலம்" எனும் இந்த உள்ளூர் வரலாற்று நூல் அமைந் துள்ளது. அவ்வகையில் இது ஒரு முன்னத்தி ஏர் எனக் குறிப்பிடலாம்.

ஆங்கில இலக்கியத்தில் நன வோடை முறையை வில்லியம் ஜேம்ஸ் முதன்முதலாகப் பயன்படுத்தினார். பொன்முடி சி.சுப்பையன் அவர்கள் ஒரு கவிஞராக இருப்பதால், மிக இயல்பாக இப்புது நடையை உள்ளூர் வரலாற்றில் வெற்றிகரமாக அவரால் கையாள முடிந் திருக்கிறது.

உள்ளூர் வரலாறுகள் பெரும் பாலும் அவை உரைநடைநயில் இருப் பது கண்கூடு. ஆனால், பொன்முடி சுப்பையன் அவர்கள் இந்நூலை உரைநடையிலும், பிறகு கவிதையிலும் இணையாகப் படைத்துள்ளார். தமிழ் உள்ளூர் வரலாற்று நூல்களில் இத் தகைய அணுகுமுறை தனித்துவமானது. எனவே இது தமிழுக்குப் புதுவரவு என அட்டியின்றிக் குறிப்பிடலாம்.

இப்புத்தகத்தை எழுதியதன் நோக் கத்தைப் பற்றி நூலாசிரியர் குறிப்பிடும் பொழுது, "இந்த இனிய ஊரில் வாழும் என் இனிய தலைமுறையே! புனிதமான பழம்பெருமை வாய்ந்த தியாகத்தின் தழும்புகள் பெற்ற ஊரில் நீங்கள் பிறந் துள்ளீர்கள்! உங்கள் முன்னோர்கள் தங்கள் கடமைகளைத் தீரத்தோடு நிறைவேற்றிச் சென்றுவிட்டார்கள். ஊர் அளவில் இல்லாமல், இப்பெரிய நாட் டுக்காகவும் அவர்கள் வாழ்ந்துள்ளார் கள். அவர்கள் வாழ்ந்த காலத்தின் சிறு குறிப்பே இந்நூல்" என எழுதுகிறார். இது ஏதோ ஒரு சிற்றூரின் வரலாறாக இல்லாமல், தமிழக வரலாற்றின் ஓர் அங்கமாகவும் பரிமாணம் கொண்டது இதன் மற்றுமொரு சிறப்பாகும்.

பொதுவாக உள்ளூர் வரலாறு களின் உட்கூறுகளாக அமைந்திருக்கும் ஊர் அமைப்பு, கோயில் வழிபாடு, உற்பத்தி முறை, விழாக்கள், சடங்குகள், ஊர்ப்பழக்க வழக்கங்கள் போன்றன அனைத்தும் இந்நூலிலும் இடம் பெற் றுள்ளன. இவை தவிரவும், நூலாசிரியர் சமூக உணர்வு மிக்கவராக இருப்பதால், ஆடம்பரத் திருமண எதிர்ப்பு, பேய் ஓட்டுதல் போன்ற மூடநம்பிக்கை எதிர்ப்பு, மதநல்லிணக்கம் பேணும் நற்பண்பு, தமிழ் வழிபாட்டுக்கு ஆதரவு, தமிழில் பெயர் சூட்டுவதன் சிறப்பு, தமிழ்வழிக் கல்வியின் தேவை போன்ற கருத்துக்களும் ஆங்காங்கே உரத்துப் பதிவாகி உள்ளன.

குறிப்பாக "ஓயாமல் உழைக்கும் பெண்கள்" எனும் தலைப்பில் பயனை எதிர்பாராமல் உழைக்கும் பெண்களின்

மேன்மையை நூலாசிரியர் மிகச் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

அடுத்து, இந்நூலில் 1926–இல் கன்னடப் பார்ப்பனரான சூலூர் சுப்பாராவின் அட்டூழியங்களைத் தாங்க முடியாமல், ஊர் மக்கள் அவனை நள்ளிரவில் படுகொலை செய்யும் நிகழ்வை விவரிக்கும் பகுதி மிகுந்த ஆவலைத் தூண்டும் வண்ணம் படைக்கப்பட்டுள்ளது.

1948–ஆம் ஆண்டில் பொதுவுடைமைக் கட்சியை இராஜாஜி தடை செய்த பொழுது, வீரம் விளைந்த பாசறையாம் கண்ணம்பாளையத்திற்கு வந்து தங்கியிருந்த செங்கொடித் தோழர்களின் தலைமறைவு வாழ்வு குறித்த படப்பிடிப்பு, இப்புத்தகத்தின் மற்றொரு சிறப்பாகும்.

உள்ளூர் வரலாறு எப்படி உலக வரலாறாக மாறுகிறது என்பதற்கு இரண்டு அருமையான எடுத்துக்காட்டுகள் இந்நூலில் பதிவாகி உள்ளன. 1942–இல் இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆங்கிலப் படைக்கு வெடி பொருள் ஏற்றி வந்த சரக்கு இரயிலைச் சிங்காநல்லூரில் கவிழ்த்த நிகழ்வு ஒன்று. அடுத்ததாகச் சூலூர் வானூர்தி நிலையத்தைத் தீ வைத்துச் சாம்பலாக்கியது.

இவ்விரு வரலாற்று நிகழ்வுகள் குறித்துப் புலவர் செந்தலை ந. கவுதமன் அவர்கள், ‘சூலூர் வரலாறு’ நூலில் மிகச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார்.

விமான தள எரிப்புப் போராட்டத்தில் முக்கியப் பங்காற்றியவர் கண்ணம்பாளையத்தின் கர்மவீரர் கே.வி. இராமசாமி அவர்கள்தான். எனவே அவரது தியாக வாழ்வு குறித்து இந்நூல் விரிவாகப் பேசுகிறது. விமான தள எரிப்புப் போராட்டத்தில் பெரும்பாலும் அடிபட்டதும், உதைபட்டதும், சித்ரவதைக்குள்ளானதும் கண்ணம்பாளையத்தில் இருந்தவர்கள்தான்.

சூலூர் விமான தளத் தீ வைப்பால் அரசுக்கு ஏற்பட்ட இழப்பை ஈடுகட்ட ஆங்கிலேய அரசு, கண்ணம்பாளையம் மக்கள் மீது "திமிர் வரி" விதித்துச் சொல்லொணாக் கொடுமைகளுக்கு உள்ளாக்கியது.

இப்போராட்டங்களுக்குத் தலைமை தாங்கிய விடுதலை வீரர் கே.வி.ஆர். அவர்களைப் பிடித்துச் சித்ரவதை செய்ய ஆங்கில அரசு துடிதுடித்தது. அவர் தலைமறைவானார். அவரது தலைக்கு விலை வைக்கப்பட்டது. இருப்பினும் இறுதிவரை ஆங்கிலேய அரசால் அவரைப் பிடிக்க முடியவே இல்லை. 1946–ஆம் ஆண்டு காங்கிரசின் இடைக்கால அமைச்சரவை பிரகாசம் தலைமையில் அமைந்த பிறகுதான், நான்கு ஆண்டுத் தலைமறைவு வாழ்க்கையைத் துறந்து, கே.வி.ஆர்.அவர்கள் வெளியே வந்தார் என்பது குறிப்பிடத் தக்கது.

இத்தகைய உண்மை நிகழ்வுகள் அனைத்தும் மிகுந்த புனைவுத் தன்மையில் இந்நூலில் பதிவு செய்யப்பட்டிருப்பது பொன்முடி சுப்பையன் அவர்களின் படைப்பாக்கத் திறனுக்குச் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும்.

1930–ஆம் ஆண்டில் காந்தியடிகள் வடக்கே தண்டியில் நடத்திய உப்புச் சத்தியாகிரகத்தை அடியொற்றி, கோவை வாலாங்குளத்தில் உப்புக் காய்ச்சும் அறப்போரினைக் கண்ணம்பாளையம் ஊர்ப்பெரியவர் வெங்கட்ராயர் தலைமையில் நடத்திச் சிறை சென்ற பெருமை இவ்வூருக்கு உண்டு.

இத்தகைய பல்வேறு வரலாற்று நிகழ்வுகளுக்கு நிலைக்களனாக விளங்கிய கண்ணம்பாளையத்திற்கு வந்து, தன் வாழ்வின் இறுதியில் இம்மண்ணின் மக்களோடு இரண்டறக் கலந்து வாழ்ந்து மறைந்த புரட்சிக் கவிஞர் புலவர் ஆதி அவர்களைப் பற்றியும், நம் நினைவில் வாழும் தோழர்கள் ஸ்டாலின் சின்னையன், காம்ரேடு கூத்தணன் உள்ளிட்ட எண்ணற்ற தியாகிகளைப் பற்றியும், இன்று மக்கள் தொண்டராக மிளிரும் மௌனசாமி போன்றவர்களைப் பற்றியும் ஆவணமாகப் பதிவுசெய்ய இளம் தலைமுறையினருக்கு இப்பெரு நூல் மிகுந்த உந்து சக்தியாக விளங்குகிறது.

மேலும், இத்தகைய பல்வேறு சிறப்புகளை உள்ளடக்கிய கண்ணம்பாளையம் எனும் தியாகம் விளைந்த செம்புலத்தைக் கொண்டாட வேண்டிய கடமை நம் அனைவருக்கும் உண்டு என்பதையும் இந்நூல் அடர்த்தியாகப் பதிவு செய்திருப்பது வெகுவாகப் பாராட்டத் தக்கதாகும்.

●

கட்டுரை

ஓரம்போகியாரின் உயர்ந்த உள்ளம்



ஐங்குறுநூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. ஐங்குறு நூறு என்னும் சங்க இலக்கிய நூல் திணையொன்றுக்கு நூறு பாட்டுக்களாக ஐந்து திணையாகப் பகுக்கப்பட்டுள்ளன. ஐந்து திணைக்கும் சேர்த்து ஐந்நூறு பாக்களையு டையது. மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற முறையில் பாக்கள் இந்நூலில் தொகுக்கப் பெற்றிருக்கின்றன.

அடிவரையிற் குறைந்த நூறுநூறு பாக்களால் மருதம் முதலிய ஐந்திணை ஒழுக்கங்களைத் தனித்தனியே விளக்குகின்றமையால் ஐங்குறு நூறு என்று பெயர் பெற்றது என்பர் அறிஞர்.

இந்நூலின்கண் மருதத் திணையைப் பாடி யவர் ஓரம்போகியார் என்னும் பெரும்புலவர். இவர் பாடிய மருதத் திணையிலுள்ள பாடல்களாலும், ஏனைய சங்க நூலின்கண் உள்ள பாடல்களாலும் பெரும்புலவர் என்பது தெளிவாகத் தெரிகிறது. திணைகள் பத்துப் பத்தாகத் தொகுக்கப்பட் டுள்ளன.

மருதத் திணையில் முதலாவதாக அமைந் துள்ளது வேட்கைப் பத்து. அடுத்து வேழப் பத்து, கள்வன் பத்து, தோழிக்குரைத்த பத்து, புலவிப் பத்து, தோழிக்கூற்றுப் பத்து, கிழத்திக்கூற்றுப் பத்து, புனலாட்டுப் பத்து, புலவிராப் பத்து, எருமைப் பத்து முதலியன.


திருவள்ளுவரைப் போலவே ஓரம் போகியாரும் தொடக்கத்தில் இல்லறத்தைச் சிறப் பித்துப் பாடியுள்ளார். இல்லறம் செவ்வனே நடை பெறுதற்கும் கற்பொழுக்கம் குன்றாமலிருப் பதற்கும் ''நெல் பல பொலிக'' என்றும் ''பிணி சேணீங்குக'' எனப் பெண் ஒருத்தி பாடியதாகப் புலவர் பாடியுள்ளார்.

இவ்வாறு மொழிந்த ஓரம்போகியார் எனும் புலவர்பிரானது ஈரமுடைய உயர்ந்த உள்ளம் அவர் பாடிய வேட்கைப் பத்தில் தெரிகிறது. 'உயர்ந் தோர் என்றும் உயர்ந்ததையே உன்னுவர்.' 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே' என்னும் பழமொழிதான் இப்புலவரது பாடல்ளைப் படிக்குங் கால் நினைவுக்கு வருகின்றன.

அகப்பொருள் நெறியில் கூறப்படும் களவு, கற்பு என்னும் இருவகை ஒழுக்கத்திலும் ஒழுகிப் போந்த தலைமகன், தான் அவ்வொழுக்கத்தில் பிரிந்திருந்த காலத்தில் தலைமகளும் தோழியும் ஒழுகிய திறத்தைத் தோழியுடன் சொல்லாடி வினவிய வழி, தோழி தலைமகளின் வேட்கைத் திறமும் தன் வேட்கைத் திறமும் கூறுவதாக வரும் பாட்டுக்களின் தொகுதியாதலின் இது 'வேட்கைப் பத்து' எனப் பெயர் பெறுவதாயிற்று.



ப. சோமசுந்தர வேலாயுதம்



'அரசர்க்கு வெற்றி உண்டாகுக!' என்று தொடங்கும் வாழ்த்தோடு வரும் நல்ல வரிகள், ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பெண் ஒருத்தி கூறுவதாக வரும் வரிகள் அன்றைய தமிழ் மக்களின் பண்பட்ட உள்ளத்தை உலகுக்குத் தெரிவிக்கின்றன.

"வாழி ஆதன் வாழி அவினி
நெல்பல பொலிக பொன் பெரிது சிறக்க
விளைக வயலே வருக விரவலர்
பால்பல வூறுக பகடு பல சிறக்க
பகைவர் புல்லார்க பார்ப்பாரோதுக
பசியில்லாகுக பிணி சேணீங்குக
வேந்துபகை தணிக யாண்டு பலநந்துக
அறநனி சிறக்க அல்லது கெடுக
அரசுமுறை செய்க களவில்லாகுக
நன்று பெரிது சிறக்க தீதில்லாகுக
மாரி வாய்க்க வளநனி சிறக்க"

வேட்கைப் பத்தில் இடம்பெற்ற வரிகள் இவை. 'காவற்பொருட்டு அரசன் வாழ்க! விருந்தாற்றுதற்பொருட்டு நெல் மிக்கு விளைக. இரவலர்க்கு ஈதற்பொருட்டுப் பொன் மிகவுண்டாகுக. ஆநிரைகள் பால்வளம் சுரக்க. எருமை பல மிகுக. பகைவர் தம் பெருமிதமிழந்து புல்லரிசிச் சோறு உண்க. பார்ப்பார் மறை ஓதுக. யாரும் பசியால் வருந்தாது உண்டு மகிழ்க. பிணி நெடிது நீங்குக.

'வேந்தனுக்கு எங்கும் பகை இல்லாததாகுக. குடி மக்கள் பல்லாண்டுகள் வாழ்க. அறவினை மிகவோங்குக. அல்லாதாகிய பாவம் முற்றிலும் கெடுக. அரசன் முறையினைச் செய்க. களவு முதலிய குற்றங்கள் நிகழாதொழிக. நன்று மிகவும் பெருகுக. தீது இல்லையாகுக. மழை தப்பாது பொழிக. வளங்கள் மிகவுண்டாகுக' என்ற தலைவியின் வேட்கையைத் தோழி தலைவனுக்குச் சொல்வதாக ஓரம்போகியார் கூறுவது, அன்றே தமிழர்கள் உயர்ந்த சிந்தனையையே தம் சிந்தையில் கொண்டு ஒழுகினர் என்பது அறிந்து வியக்கிறோம்.



தான் வாழ வேண்டும் என்ற சிந்தனை ஓங்கி நிற்கும் இன்றைய நமது சிந்தனையை ஒழித்து, உலகும் உலகிலுள்ள மக்களும் பிணி இல்லாது வாழ வேண்டும் என்ற சிந்தனையை நம்மில் இருத்துவோமாக!

இல்லறத்திலிருந்து நல்லறம் புரிதலுக்கு விருந்தோம்பல் தலையாய அறம். இசை நடுதல் இல்வாழ்வின் பயன். அதனால் நெல்பல பொலிக என்றும் பொன் பெரிது சிறக்க என்றும், அறமும் இன்பமும் எய்துதற்குரிய பொருளாகலின் விளைக வயலே, புகழ் வளர்தலுக்கு ஈகை இன்றிமையாதெனின் வருக இரவலர் என்றும்; பசியும் பிணியும் நல்வாழ்வைச் சீர்குலைப்பனவாதலின் பிணிக்குரிய காரணங்களுள் பசியே முதற் காரணம் எனபதால் 'பசி, பிணி, சேண் நீங்குக' என்றார். அறத்தான் வருவதே இன்பம் என வள்ளுவர் மொழிந்ததற்கு ஏற்ப அறம் நனி சிறக்க என்றெல்லாம் மொழிந்தார்.

இன்றைக்குக் கொரோனா என்னும் கொடிய நோய் உலகை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் அன்றே 'பிணிசேண் நீங்குக" என்று அன்றே உரைத்திருப்பது எத்தனை உயர்ந்த சிந்தனைக்கு உரியவன் தமிழன் என்பதையும் நினைத்துப் பெருமிதம் கொள்ள வைக்கிறது. •

கட்டுரை

மாதர்களுக்குத் தீட்டு, தீட்டல்ல!

கனடா ஏ.சங்கரசுப்பிரமணியன்



திருமூலர் தீண்டாமையைக் கடுமையாகச் சாடுகிறார். 'தீட்டு' என்று ஒன்றுமே கிடையாது என்று சொல்கிறார். நமது சமூகத்தில் தீண்டாமை என்னும் கொடிய பழக்கம் நெடுங்காலமாக இருந்தது. இன்றும் ஒருசில மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது.

ஒரு குறிப்பிட்ட சமூகத்தினரைத் தொட்டால் தீட்டு ஏற்பட்டுவிடும் என்பார்கள். இந்தச் சமூகத்தினரைச் 'சண்டாளர்கள்' என்று குறிப்பிடுவார்கள். மனிதனை மனிதன் தொடுவதினால் தீட்டு ஏற்படுகிறது என்பது அறிவீனம். இதை ஆங்கிலத்தில் 'Untouchability' என்று கூறுவார்கள்.

இதை எதிர்த்து மகாத்மா காந்தி ஒரு பெரிய போராட்டமே நடத்தினார். இந்தக் கொடிய பழக்கத்தை ஆயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னரே எதிர்த்தவர் திருமூலர். இவர் ஒரு பெரிய சமூகச் சீர்திருத்தவாதி, முற்போக்குச் சிந்தனையாளர். அவர் கூறியிருக்கும் இரண்டு பாடல்களைப் பார்ப்போம்.

"ஆசூசம் ஆசூசம் என்பார் அறிவிலார்
ஆசூச மாமிடம் ஆரும் அறிகிலார்
ஆசூச மாமிடம் ஆரும் அறிந்தபின்
ஆசூச மானிடம் ஆரும் ஆசூச மாமே."

ஆசூசம் என்றால் தீட்டு.

'தீட்டு... தீட்டு...' என்று பிறரைத் தீண்டுவதைக்கூடத் தீட்டு என்று பேசுபவர்கள் அறிவில்லாத மூடர்கள். தீட்டு தீட்டு என்று புலம்பும் இவர்கள், தீட்டு உண்டாகும் இடம் எது? என்று தெரியாதவர்கள். தீட்டு உண்டாகும் இடம் எது என்று தெரிந்துகொண்டால், மானிட உடம்பே தீட்டுத்தான் என்பதைப் புரிந்து கொள்வார்கள். தீட்டு தோன்றும் இடம் கருப்பை. இதுவே உயிர்கள் தோன்றும் இடம். எனவே, தீட்டு என்று பார்த்தால், மனித உடம்பே தீட்டுத்தான் என்பது பாடலின் பொருள்.

பெண்களுக்கு மாதந்தோறும் ஏற்படும் மாதவிடாய் என்ற இரத்தக் கசிவு தோன்றுமிடம் அவர்களின் கருப்பை. அதனால்தான் முற்காலத்தில் மாதவிடாய் பெண்களைத் தீட்டு என்று சொல்லி, அவர்களை வீட்டின் ஓர் ஓரமாக வைத்துவிடுவார்கள். அவர்களை மற்றவர்கள் யாரும் தொடக் கூடாது என்பார்கள். தொட்டால் தீட்டு என்பார்கள். அவர்கள் உடனே குளித்துச் சுத்தம் செய்ய வேண்டும்.

அப்படிப்பட்ட மாதவிடாய்

தோன்றும் கருப்பையில் தான் எல்லா மனிதர் களும் தோன்றுகிறார்கள். அதனால்தான் தீட்டு என்று பார்த்தால், எல்லா மனிதர்களும் தீட்டுத்தான் என்கிறார் திருமூலர். ஆகையால், தீட்டு என்று பாகுபடுத்துவது அறிவீனம் என்கிறார் திருமூலர்.

"ஆசூச மில்லை அருநிய
மத்தருக்
காசூச மில்லை அரனை
அர்ச்சிப்பவர்க்
காசூச மில்லையாம் அங்கி
வளர்ப்போர்க்கு
ஆசூச மில்லை அருமறை
ஞானிக்கே"

அறநெறி உணர்ந் தொழுகும் சான்றோர்க்கு, தத்துவம் உணர்ந்த ஞானி களுக்கு, சிவனை வழிபடும் மெய்யடியார்களுக்கு, வேள்வி செய்யும் அந்தணர்களுக்கு, மெய்ஞ்ஞானம் பெற்ற மேதை களுக்கும் ஆகிய இத்துணை பேருக் கும் தீட்டு என்பது இல்லை. இவர்கள் தான் சமூகத்தில் உயர்ந்தவர்கள். உண்மையான அறிவு பெற்றவர்கள். அப்படி மேலானவர்களுக்கே தீட்டு இல்லை என்றால், மற்ற சாதாரண மக்களுக்குத் தீட்டு ஏது? ஆக ஒட்டு மொத்தமாகத் தீட்டு என்பதே இல்லை.

தீண்டாமை பேசுபவர்கள் அறி விலிகள். எந்தக் கோணத்தில் பார்த் தாலும், தீண்டாமை நமது சமூகத் திற்கு ஒரு சாபக்கேடு. நமது நாடு முன்னேற்றம் அடையாமல் பிறருக்கு அடிமையாக நெடுங்காலமாக இருந்து வந்தது.

துருக்கியர்கள், முகமதியர்கள் பின்பு வெள்ளைக்காரர்கள் என்று இவர்கள் எல்லோரும் வந்தார்கள். எளிதாக வென்றார்கள். இப்படி அந் நியர்கள் வந்து நாட்டை வெல்வ தற்குக் காரணம் நம்மிடம் ஒற்றுமை இன்மை. இதற்கு முக்கியக் காரணம் நம்மிடம் இருந்த ஜாதிச் சண்டைகள், ஜாதிக் கொடுமைகள். அதில் தீண்டாமையும் ஒன்று.

இதை வெகு காலத்திற்கு முன்பே திருமூலர் எதிர்த்திருக்கிறார். ஆனால் இப்படிப்பட்ட மகான்களின் எதிர்ப் பையும் மீறி, தீண்டாமை சமீபகாலம் வரை தழைத்து வளர்ந்து வந்திருந்தது. இப்போதுதான் அரசாங்கத்தால் சட்டங்கள் கொண்டுவரப்பட்டுத் தீண்டாமை ஓரளவுக்கு ஒழிக்கப் பட்டிருக்கிறது. சமுதாய வளர்ச்சியும், அறிவு வளர்ச்சியும் அதற்கு மேலும் பல காரணங்கள் ஆகும். – இந்த விளக்கம் 'தர்ம சக்கரம்' டிசம்பர், 2020 இதழில் வெளியாகியுள்ளது. ●

வரப்பெற்றோம்

வடலூர் போற்றி அகவல் : பக். 32, விலை ரூ. 20/– (அருட்பிரகாச வள்ளலார், அவர் உலவிய இடங்கள், அவருட னான அன்பர்கள் பற்றிய 'போற்றி அகவல்' நூல்).

தைப்பூச வடலூர் வள்ளலார் அருளாற்றுப்படை : பக். 44, விலை ரூ. 30/–. (சத்திய தருமச்சாலை, ஞானசபை, சன்மார்க்க சங்கம் இவை மூன்றையும் பற்றிய விரிவான, விளக் கமான அருளாற்றுப்படை நூல்).

வள்ளலார் பார்வையில் கரோனா – உலகமுடக்கம் : பக். 28, விலை 25/–. (கொரோனாத் தொற்றுநோயால் இறந்த ஆருயிர்களுக்கு வள்ளற்பெருமான் வழியில் இரங்கல் தெரி விக்கும் நூல்). மேற்கண்ட மூன்று நூல்களின் ஆசிரியர் : புலவர் அடியன் மணிவாசகன், போன் : 0431–2232505.

எண்ணங்கள் உயரட்டும் : ஆசிரியர் : ஜெயா வெங்கட் ராமன், பக்.112, விலை ரூ. 100/–. செல் : 9900476704. (சமூக அவலங்களைப் படம்பிடித்துக் காட்டும் நாற்பதுக்கும் மேற்பட்ட கவிதைகள் அடங்கிய நூல்).

ஸ்ரீமத் ஸௌராஷ்ட்ர பிரபந்தம் :உரையாசிரியர் : கே.ஆர். கிருஷ்ணமாச்சாரி, பக்.44, விலை ரூ.30/–, செல் : 9790202975. (ஸ்ரீமந் நடனகோபால நாயகி சுவாமிகள் அருளிய 64 பிரபந்தப் பாடல்களில் 27 பாடல்களுக்கான தமிழ் விளக்க உரை நூல்).



சாதிவாரி இடஒதுக்கீடு சாத்தியமா?

சாதிவாரிக் கணக்கெடுப்பு எல்லாச் சாதிகளுக்கும் வேண்டும் என்றும், சாதி ஜனங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப ஒவ்வொரு சாதிக்கும் இத்தனை சதவிகிதம் ஒதுக்க வேண்டும் என்கிற பேச்சு எழுந்துள்ளது. தமிழ்நாட்டிலுள்ள தமிழர்கள் இனத்தாலும், சாதியாலும் தமிழ்ச் சாதியினர்தான். இனத்தால் தமிழர்கள் என்பதைவிட, சாதியால் தமிழர்கள் என்பதுதான் அதிகமாகப் பேசப்படுகிறது.

சாதிகளை முற்பட்ட சாதிகள், பிற்படுத்தப்பட்ட சாதிகள், மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகள், பட்டியல் சாதிகள் என நான்கு வகையாக வகுத்திருக்கிறோம்.

முற்பட்ட சாதிகளாக பிராமணர், திருநெல்வேலி சைவப்பிள்ளைமார், நாட்டுக்கோட்டைச் செட்டியார், கம்மவார் என்று 79 சாதிகள் உள்ளன. இவர்கள் பாரம்பரியமாக நிலபுலன்களோடும், சொத்து பத்துகளோடும் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இவர்களுக்குப் பிறருடைய நிதிஉதவி தேவையில்லை. இதனால் இவர்கள் முற்பட்ட சாதியினர் என வரையறுக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டைப் பொறுத்தளவுக்குப் பிற்படுத்தப்பட்ட சாதிகள் 147–க்கும் அதிகம். இந்தச் சாதிகளில் பிள்ளைமார், கவுண்டர், செட்டியார், படையாச்சி, கள்ளர், மறவர், நாயுடு, சேர்வை, நாடார் எனப் பலரும் உள்ளனர்.

இதேபோலப் பட்டியல் சாதி என்பதில் பள்ளர், பறையர், குடும்பன், வள்ளுவன், காட்டுநாயகன், கொண்டா ரெட்டி, அருந்ததியர் என 75 பிரிவினர் உள்ளனர்.

இவர்கள் அல்லாமல் மலைச்சாதி மக்களாகிய படுகர், தோடர் முதலியோரும் உள்ளனர்.

அரசியல் சாசனத்தை உருவாக்கிய போது, டாக்டர் அம்பேத்கர், முஸ்லீம்களுக்கு ஜின்னா தனிநாடாகப் பாகிஸ்தான் கேட்டதைப் பார்த்து, அதே போலத் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனி நாடாக தலித்ஸ்தான் கோரிக்கையை வைத்தார்.

காந்திஜி அத்தருணத்தில் டாக்டர் அம்பேத்கருடன் கலந்து பேசி, “**தலித் என்பவர்களும் பிற மாநிலங்களிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களும் மதத்தால் ஹிந்துக்கள். ஆனால், முஸ்லீம்கள் மதத்தால் இஸ்லாமியர்கள்.**

ஜின்னா இஸ்லாமிய நாடு கேட்பது வேறு; டாக்டர் பீமாராவ் அம்பேத்கர் தலித்ஸ்தானம் கேட்பது என்பது முற்றிலும் வேறு.

ஹிந்துக்களுக்கிடையில் இந்த வேறுபாடு கூடாது. தாழ்த்தப்பட்டவர்களின் ஒரே கோபம் அவர்கள் மீது தீண்டாமை கடைப்பிடிக்கப்படுகிறது என்பதுதான் (Untouchability). தீண்டாமையை ஹிந்து மதம் ஏற்கவில்லை என்பது எனது கருத்து. தீண்டாமைக்கு எதிராகப் போராடுவேன். அதனால் தாழ்த்தப்பட்ட ஹிந்துக்கள், பிற்படுத்தப்பட்ட ஹிந்துக்களோடு இணைந்துதான் இருக்க வேண்டும்” என்று அம்பேத்கரை சமாதானம் செய்து, அவருடைய

தனி நாடு கோரிக்கையைக் கைவிடச் செய்தார் காந்தி.

ஆனாலும், மதம் ஹிந்துவாக இருந்தாலும், சாதியில் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், தாழ்த்தப்பட்டவர்களுக்கும் மத்தியில் இருந்த வித்தியாசம், இடிக்கப்படாத மதில் சுவராகவே நீடித்தது. அதனால் அரசியல் சட்டத்தை டாக்டர் அம்பேத்கர் உருவாக்கிய போதே, அதன் ஒரு பகுதியாகத் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், மலைவாழ் மக்களுக்கும் 21 % இடஒதுக்கீடு என்ற வாக்குறுதி அரசியல் சட்டத்தில் இடம்பெற்றது.

இந்த இடஒதுக்கீட்டைப் பயன்படுத்தித் தாழ்த்தப்பட்டவர்களும், தலித்துகளும், மலைவாழ் மக்களும் கல்வியிலும் முன்னேற முடியும். வேலைவாய்ப்புகளையும் பெற முடியும். சமூக அந்தஸ்தையும் அடைய முடியும் என்ற நம்பிக்கைத் தரப்பட்டது.

இதேபோல, பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கு அரசியல் சட்டத்தில் இடஒதுக்கீடு 1947 முதல் 1987 வரை தரப்படவில்லை. வி.பி. சிங் பிரதமரான பிறகுதான் பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கு அரசு வேலைவாய்ப்பிலும், கல்வியிலும் 27% இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இத்தருணத்தில், தமிழ்நாட்டில் 1977 முதல் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சி மலர்ந்தது. பிற்படுத்தப்பட்ட சாதியினர் தங்களுக்கு இடஒதுக்கீடு சாதிவாரியாக வேண்டும் என்று கோரிக்கையை வைத்தனர். அப்போது அதைப் பரிசீலித்த முதல்வர் எம்.ஜி.ஆர்., ஒவ்வொரு சாதியினரையும் தங்கள் சாதி சனங்களின் மொத்த எண்ணிக்கையை அரசுக்குத் தரக் கேட்டார்.

தரப்பட்ட அந்தத் தகவலில் உள்ள சாதியின் எண்ணிக்கையைக் கூட்டிப் பார்த்தால், 7 கோடிக்கும் அதிகமாகியது. தமிழ்நாட்டின் மொத்த ஜனத்தொகையே 6 கோடிதான்.

1 கோடிப் பேர் அதிகம் என்றால், சாதித் தலைவர்கள் இதில் பொய்க் கணக்குகளைத் தந்திருக்கிறார்கள் என்பது வெட்ட வெளிச்சமாகியது. அதனால் அம்முயற்சி அப்படியே கைவிடப்பட்டது.

இதற்கு இடையில், எம்.ஜி.ஆர். ஒரு சட்டம் கொண்டு வந்திருந்தார். குடும்பத் தலைவரின் மாத வருமானம் ரூ. 9000 என (வருடம் ரூ. 2 லட்சம்) இருந்தால், அவர்களைப் பிற்பட்ட சாதியிலிருந்து விலக்குவது என்று அச்சட்டம் சொல்லியது. இதை எதிர்த்து பிற்படுத்தப்பட்ட சாதியினர் ஒன்று திரண்டு போராடினர். அப்போராட்டத்தின் தீவிரத்தைக் கண்டு சற்று யோசித்த முதல்வர் எம்.ஜி.ஆர்., பிற்படுத்தப்பட்டவர்களுக்கு அப்போது இருந்த வந்த 30 சதவிகிதத்தை 50 சதவிகிதம் என்று அதிரடியாக உயர்த்தி அறிவித்தார்.

இந்த 50 சதவிகித இடஒதுக்கீட்டுடன் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அரசியல் சாசனப்படி தமிழ்நாட்டில் 19 சதவிகிதத்தைச் சேர்த்தால், 69 சதவிகிதம் இடஒதுக்கீடு தமிழ்நாட்டில் அமலாகியது.

கலைஞர் முதல்வராக இருந்த பொழுதும், சாதிவாரி ஒதுக்கீடு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. குறிப்பாக சீர்மரபினர், படையாச்சிகள், தேவர்கள் முதலிய சாதிகளை மிகவும் பிற்படுத்தப்பட்ட சாதிகளாகக் கணக்கிடப்பட்டன. முதல்வர் கலைஞர், 30 சதவிகிதமாக இருந்த பிற்படுத்தப்பட்டவர்களுக்கான, இடஒதுக்கீட்டைப் பரிசீலித்து, அதில் 20 சதவிகித இடஒதுக்கீட்டை சீர்மரபினர், படையாச்சிகள் போன்ற சொற்ப சாதிகளுக்குப் பிரத்யேகமாக ஒதுக்கினார்.

முதல்வர் எம்.ஜி.ஆர். ஒதுக்கிய 50 சதவிகித இடஒதுக்கீட்டில் டாக்டர் கலைஞர் 20 சதவிகித இடஒதுக்கீட்டை எடுத்துவிட்டதால், பிற்படுத்தப்பட்ட சாதியினருக்கு 30 சதவிகிதம்தான் மிச்சமாகக் கிடைத்தது. 20 சதவிகித இடஒதுக்கீட்டில் சொற்ப எண்ணிக்கை சாதிகள்தான் இருந்தன. மிச்சமுள்ள 30 சதவிகித இடஒதுக்கீட்டில் ஏறக்குறைய 270 சாதிகள் இருக்க நேர்ந்தது. இது ஒரு முரண்பாடான சமன்பாடாகியது.



இத்தருணத்தில் உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொது நல வழக்கில் 69 சதவிகித இட ஒதுக்கீடு தமிழ்நாட்டில் அமலாகி வருவதால், முற்பட்ட சாதியினருக்கு இடஒதுக்கீடு வெகுவாகக் குறைந்துவிட்டது. அதுமட்டுமல்ல, அதிலுள்ள குறைவான இடஒதுக்கீட்டில், பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட சாதி மாணவர்களும் போட்டியிடச் சட்டம் அனுமதித்தது.

இந்தச் சிக்கல்களின் காரணமாக, உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பொதுநல வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பில், எக்காரணம் கொண்டும் சாதிவாரி இடஒதுக்கீடு 50 சதவிகிதத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்றும், மீதமுள்ள 50 சதவிகிதம், தகுதியுள்ள அனைவருக்கும் தரப்பட வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

இதன் காரணமாக, 50 சதவிகிதம் என்பதில் 30 சதவிகிதம் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும், 20 சதவிகிதம் மிகவும் பிற்படுத்தப்பட்டவர்களுக்குமாக என ஆகியது.

தற்போது, வன்னியர்கள் அந்த 20 சதவிகித இடஒதுக்கீட்டிலிருந்து தங்களைத் துண்டித்துக் கொண்டு, தனியாக 20 சதவிகித இடஒதுக்கீடு தரப்பட வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அப்படியென்றால், மிச்சமுள்ள 30 சதவிகிதத்தில் 20 சதவிகிதத்தை வன்னியர்களுக்கு ஒதுக்கினால், மீதம் 10 சதவிகிதம்தான் இருக்கும்.

இந்நிலையில், நாடார் சமூகத்தார் தங்கள் சாதிக்கு 15 சதவிகிதம் இடஒதுக்கீட்டுக் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

இனிமேல் இதேபோல வேறு வேறு சாதியினரும் இடஒதுக்கீடு கோரிக்கை வைத்தால், இடஒதுக்கீடு செய்வதற்கு நிச்சயமாக இடமே இருக்காது. அதனால் அது ஒரு கேலிக் கூத்தாகிவிடும்.

சாதிவாரி இடஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற வன்னியர் சமுதாயத்தினரின் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் தமிழக அரசு ஒரு குழுவை அமைத்திருக்கிறது.

அந்தக் குழு சாதிவாரியாகக் கணக்கெடுத்து இடஒதுக்கீடுகளைச் செய்வது குறித்துப் பரிசீலிக்க உள்ளது. நீதிபதி அறிக்கையைப் பெற்ற பிறகுதான், அரசு தனது முடிவை வெளியிடும். இதைத் தவிர, அரசு வேறு ஒன்றையும் செய்ய முடியாது.

இப்போது நம் முன்புள்ள கேள்வி, இடஒதுக்கீடு என்பதன்மூலம் தனித் தனிச் சாதிகளுக்குக் கல்வித் துறையில் படிப்பதற்கும், அரசுத் துறையில் வேலைக்கும் வாய்ப்புத் தருவது சரியான அணுகுமுறைதானா என்பதுதான். ஏனெனில், ஒவ்வொரு சாதிக்கும் இத்தனை சதவிகிதம் இடஒதுக்கீடு எனத் தரப்படுமானால், அது சமூக நீதிக்குச் சரியானதாக இருக்குமா?

சமூகநீதி என நாம் கொண்டாடுவது வேலைவாய்ப்பில், கல்வியில், எல்லோருக்கும் சமவாய்ப்பை சாதி, மத, இன வேறுபாடின்றித் தர வேண்டும் என்பதுதான். சாதிவாரி இடஒதுக்கீட்டினால் சமூகநீதி நியாயப்படுத்தப்படுமா? அல்லது சமூகநீதிக்கு எதிராகவே இது போய்விடுமா? இந்தக் கேள்விகளுக்கு நாம் பதில் சொல்லக் கடமைப்பட்டுள்ளோம்.

இன்னொரு முக்கிய அம்சத்தையும் இத்தருணத்தில் கவனத்தில் கொள்ள வேண்டும். தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப்பட்ட இடஒதுக்கீட்டைப் பயன்படுத்தி ஒரு குறிப்பிட்ட தாழ்த்தப்பட்ட குடும்பங்கள் மட்டுமே தொடர்ந்து ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். முதலிய பதவிகளைப் பெறுகிறார்கள். அது வரவேற்கத்தக்கததுதான். தாழ்த்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட நிலையிலிருந்த அந்தச் சமூகம், இடஒதுக்கீடு காரணமாக அரசின் உயர்பதவியைப் பெற்று, சமூகத்தில்

அதிகாரத்தை அமல்படுத்துவதைப் பார்ப்பதற்கே கௌரவமாகவும், கம்பீரமாகவும் இருக்கிறது.

இந்த இடஒதுக்கீட்டின் பலனைத் தாழ்த்தப்பட்ட சாதியின் சில குடும்பங்கள் மட்டுமே உபயோகப்படுத்தி, பயன் பெற்று வருகிறார்கள். அவர்கள், அதிகார ரீதியில் உயர்வானப் பதவிக்கு வந்துவிட்டவர்கள். அவர்கள் மட்டுமல்ல, அவர்கள் குடும்பச் சந்ததிகள் வருவதற்கும் வழி காட்டியிருக்கிறார்கள்.

இப்போது நீதிமன்றம் அவர்களைப் பார்த்துக் கேட்கிற கேள்வி, தாழ்த்தப்பட்ட சாதியினர் இடஒதுக்கீட்டால், உயர்த்தப்பட்டவர் ஆகிவிட்ட நிலையில், "உங்கள் சாதியைச் சார்ந்த மற்றவர்களும் உயர்வதற்கு நீங்கள் இடஒதுக்கீட்டிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்" என்பதுதான். அத்தகைய வசதியானவர்களை கிரீமிலேயர் (Creamy Layer) என வகைப்படுத்தினர்.

இடஒதுக்கீட்டின் மூலமாக அரசுப் பதவிகளையும், கல்வியில் மருத்துவம், பொறியியல், விவசாயம் ஆகியவற்றில் ஒதுக்கீட்டு இடங்களைப் பெறுவது, எந்த வகையிலும் தவறல்ல. ஆனால், தருவதற்கான அத்தனை இடங்களும் அத்தனை சாதிகளுக்கும் இல்லை. இதனை அரசு யாரிடம் சென்று முறையிட முடியும்?

இடஒதுக்கீட்டுக் கோரிக்கையை வலியுறுத்துகிற தருணமும் முக்கியமானது. இன்னும் சட்டமன்றத் தேர்தலுக்குச் சில மாதங்களே உள்ள நிலையில், மாநில அரசை நெருக்கடிக்கு உள்ளாக்கி "தங்கள் சாதியின் ஆதரவு ஆளும்கட்சிக்கு அவசியம் வேண்டுமானால், எங்கள் கோரிக்கையான இடஒதுக்கீட்டுக்கு சம்மதியுங்கள்" என்பதாக உள்ளது.

இத்தருணத்தைக் கவனத்தில் கொண்டே தமிழக அரசு, ஓய்வுபெற்ற நீதிபதி தலைமையில் ஒரு குழுவை அமைத்துள்ளது.

நவீனக் காலத்தில் கல்வி வசதிகள் அதிகமாகியுள்ள நிலையில், மாணவ – மாணவிகள் சேர்ந்து படிக்கும் சூழ்நிலையில் ஒன்றாகப் படித்தவர்கள், நன்றாகப் படித்தவர்கள், ஒழுங்கானவர்கள், படித்து முடித்து நல்ல பதவிகளுக்கும் சென்றவர்கள், ஒருவரை ஒருவர் விரும்பித் திருமணம் செய்து கொள்வார்களேயானால், அவர்கள் சாதியைக் கடப்பவர்கள் ஆகிறார்கள். சாதியைக் கடக்கும் அத்தகையவர்கள், சாதியை மறுப்பவர்கள். சாதியை மறந்தவர்கள். அவர்கள் எந்தச் சாதியில் இடஒதுக்கீடு கேட்க முடியும்? இந்தப் போக்கு எல்லாச் சாதிக்கு மத்தியிலும் ஏற்பட்டு விட்டது.

இதில் கௌரவமாக நடந்து கொள்ளக் கூடிய நாகரிகமுள்ளவர்கள், சம்பாதிக்கிற சக்தியுள்ளவர்களாக உருவான பிறகு, தாய் தந்தையின் பூர்வீகச் சொத்துப் பத்துகளைப் பற்றிக் கவலைப்படாமல், செம்புலப் பெயல்நீர் போல அன்புடை நெஞ்சங்களாகி ஒன்றிய வாழ்க்கை வாழ்வார்களானால், சாதி இடஒதுக்கீடுக்கான அவசியம் சரிந்து போகாதா?

கல்வியால், பணியால், ஒழுக்கத்தால், பண்பாட்டால் தானாகவே சமூக நீதி உருவாகி வருகிற தருணம். குழந்தைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர், அந்தக் குழந்தையின் சாதிக்காரர் அல்ல, அந்தப் பணியைத் தருகிற அரசு, அந்த மாணவனுடைய சாதி அரசு அல்ல. வேலை தருகிற நிறுவனம் சாதி நிறுவனம் அல்ல. பேருந்தில், ரயிலில், விமானத்தில் நாம் சாதியை மறந்து பயணம் செல்கிறோம்.

மதத்தின் சார்பாகச் செய்யப்பட்ட இடஒதுக்கீடுகளுக்கு உச்சநீதிமன்றம் மரண அடி கொடுத்திருக்கிறது. இப்போது சாதிக்குத் தரப்பட்டிருக்கிற இடஒதுக்கீட்டிற்கும் உச்சநீதிமன்றம் இதே போலத் தீர்ப்பை வழங்குமா? ஏனெனில் சட்டத்திற்கு முன்பு நாம் அனைவரும் சமம்.

ஏற்றத்தாழ்வு இல்லை. எல்லோரும் ஓர் நிலை, எல்லோரும் ஓர் விலை, எல்லோரும் இந்நாட்டு மன்னர், அதுதான் உன்னதமான நிலை.

வாசகர்களாகிய நீங்கள், சாதிவாரி இடஒதுக்கீடு சரியானதுதானா? சமூக நீதிக்கானதுதானா? என்பது பற்றி என்ன நினைக்கிறீர்களோ, அதை எழுதுங்கள் பிப்ரவரி 15–க்குள்.

– **பி.சி.**

இந்த இருவரும் ஏன் மகான்கள் தெரியுமா?



ஏசுநாதர்

ஒரு வறண்ட ரொட்டியைத் தனது உணவுக்காக ஒருவர் வைத்திருந்தார். வேறு உணவு இல்லை. அவருக்குத் தெரியாமல் அங்கே அலைந்து கொண்டிருந்த ஒரு நாய், அந்த வறண்ட ரொட்டியைக் கவ்விக்கொண்டு ஓடத் தொடங்கியது.

அந்த நாயை விடாமல் துரத்திச் சென்ற ரொட்டிக்காரர், கடைசியாக நாயைப் பிடித்து விடுகிறார். பிடித்ததோடு அல்லாமல், அந்த நாய் வாயில் கவ்வியிருந்த ரொட்டியையும் பிடுங்கி விடுகிறார்.

அவர் எப்பேர்ப்பட்ட கஞ்சனாக இருப்பார் என்றுதானே நினைக்கிறீர்கள்?

நாய் வாயிலிருந்த ரொட்டியைப் பிடுங்கியவர் என்ன செய்தார் தெரியுமா? அந்த ரொட்டியின் மேல் நெய்தடவி, அந்த ரொட்டியை அந்த நாய்க்கே ஊட்டிவிட்டார். நம்மால் முடியுமா? முடியாது. அப்படியென்றால், இது யாரால் முடிந்தது.

இதைச் செய்தவர் வேறு எவரும் இல்லை. **மகான் ஏசுநாதர்** தான்.

குதிரை, வண்டியில் பூட்டப்பட்டிருக்கிறது. வண்டியை ஓட்டுகிறான். குதிரை மெதுவாக நகர்கிறது. அது வேகமாக ஓடுவதற்குத் தன் கையிலுள்ள சாட்டையால் குதிரையைச் சுளீர் சுளீர் என்று அடிக்கிறான். குதிரை பாய்ந்து ஓடுகிறது. மேலும் அடி விழுகிறது. குதிரையோ காற்றைப்போல் ஓடுகிறது.



ராமகிருஷ்ண பரமஹம்சர்

குதிரையின் மீது விழுந்த ஒவ்வொரு சாட்டை அடியையும் பார்த்த ஒருவர் மயங்கி விழுகிறார். மறுபடியும் குதிரைக்குச் சாட்டையடி விழுகிறது. எழுந்தவரோ, மறுபடியும் மயங்கி விழுகிறார். அடி வாங்கிய குதிரை மயங்கி விழவில்லை. வேகமாகத் தான் ஓடுகிறது. அடியே வாங்காத இந்த மனிதர், அடிபட்டவரைப் போல மயங்கி விழுகிறார். நம்மால் முடியுமா? முடியாது.

இப்படி மயங்கிவிழுந்தவர் யார் தெரியுமா? ராமகிருஷ்ணன்.


இந்த ராமகிருஷ்ணன் நாம் தெருவில் சந்திக்கிற ராமகிருஷ்ணன் அல்ல. **பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர்!**

புத்தக மதிப்புரை

ஒலிக்கும் சிலம்பு

ஆசிரியர் : மரியா சிவானந்தம், வெளியீடு : கோதை பதிப்பகம், 70 தென்கடைக்குறிச்சி நங்கவரம், திருச்சி – 639110, செல் : 9080870936, பக்.: 216, விலை ரூ. 200/–.

இந்நூலில் சிலம்பின் முக்கியமான பாடல் வரிகளை ஆங்காங்கே அள்ளித் தெளித்து, அவற்றுக்கான பொருளையும் தெளிவாக விளக்கி யுள்ள நூலாசிரியர் திருமதி மரியா சிவானந்தம், நம்மை சிலப்பதிகாரக் காலத்துக்கே அழைத்துச் செல்கிறார். அக்கால மக்கள் வாழ்வு, நாகரிகம், செல்வச் செழிப்பு, வீரம், விருந் தோம்பல் பண்பு முதலிய அனைத்தை யும் நம் கண்முன்னே கொண்டு வரு கின்றார் நூலாசிரியர். 'சிலம்புச் செல்வர்' ம.பொ.சி அவர்களின் பேத்தி திருமதி பரமேசுவரி அவர்கள் அணிந்துரை வழங்கியுள்ளது, இந் நூலுக்கு மேலும் சிறப்பு சேர்க்கிறது.





வெற்றியே வா...

ஆசிரியர் : 'சிந்தனைக் கவிஞர்' கவிதாசன், வெளியீடு : குமரன் பதிப்பகம், 19 கண்ணதாசன் சாலை, தி.நகர், சென்னை–17. போன் : 044–24353742, பக். : 152, விலை ரூ. 120/–.

கடந்த முப்பது ஆண்டுகளாகச் சமுதாய முன்னேற்றத்திற்காகவும், இளைஞர்களின் வளர்ச்சி, வெற்றிக் காகவும் செயல்பட்டு, தன்னம்பிக்கை யூட்டும் கட்டுரைகளையும் எழுதி வருபவர், 'சிந்தனைக் கவிஞர்' டாக்டர் கவிதாசன். அவருடைய சுய முன்னேற்றச் சிந்தனைகள் சமூகப் பயனுடையவை. இளைஞர்களின் வெற்றிக்குத் துணை நிற்பவை. அவ் வகையில், சாதாரண மனிதர்களைச் சாதனை மனிதர்களாக்கும் கருத் துக்கள் கொண்ட இருபது கட்டுரை களை இந்நூலில் படைத்தளித் துள்ளார் நூலாசிரியர். இடை யிடையே சிந்தனைகளைத் தூண்டும் சிறப்பான கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.

அரிய செய்திகள் கூறும் அற்புத ஆலயங்கள்

ஆசிரியர் : குடவாயில் பால சுப்ரமணியன், வெளியீடு : அன்னம் பதிப்பகம், எண்:1 நிர்மலா நகர், தஞ்சாவூர் – 613 007. செல் : 7598306030, பக்.: 240, விலை ரூ.210/–.

அண்மைக் காலமாகத் திருக் கோவில்கள், அவற்றின் தல வரலாறு கள் பற்றி எழுதிவரும் சில படைப் பாளர்களின் கட்டுரைகளில் கூறப் பெறும் செய்திகள் உண்மைத் தன்மைக்கு மாறாக இருப்பதைக் கண்டு வியந்த தொல்லியல் அறிஞர் குடவாயில் பாலசுப்ரமணியன், திருக்கோவில் கல்வெட்டுகள், செப் பேடுகள் கூறும் தரவுகளை வெளிப்


படுத்தவும், உண்மையான தலபுராணச் செய்திகளை எடுத்துரைக்கவும், கோவில் சார்ந்த சிற்பங்கள், ஓவியங்கள், கட்டுமான நுட்பங்கள் ஆகியவற்றின் சிறப்புகளை உண்மைத் தன்மையோடு எடுத்துரைக்கவும் படைக்கப் பெற்றதே இந்நூல் என்று கூறி, முப்பது திருக்கோவில்கள் பற்றி எழுதி, 127 படங்களுடன் வெளியிட்டிருக்கிறார். மொத்தத்தில், வரலாற்று ஆர்வலர்களுக்கும், ஆன்மீக அன்பர்களுக்கும் மிகவும் பயனுள்ள நூல்.

அண்ணலாரின் ஆளுமைகள்

ஆசிரியர் : டாக்டர் கே.வி.எஸ். ஹபீப்முஹம்மத், வெளியீடு : இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், 138, பெரம்பூர் நெடுஞ்சாலை, சென்னை –12. போன் : 044–26624401. பக்.: 208, விலை ரூ. 175/–.

நல்ல சிந்தனைகளும், நல்ல ஆளுமைப் பண்புகளும் ஒருசேர ஒருவரிடம் அமைந்துவிட்டால், அவர் சிறந்த தலைவராக, வழிகாட்டியாகப் பரிணமிப்பார். இவ்விரு பண்புகளும்





நபிகள் நாயகம்(ஸல்) அவர்களிடம் அமையப் பெற்றிருந்தன என்பதைப் பல்வேறு தலைப்புகளின்கீழ் முறையாக, எளிமையாகத் தொகுத்து வழங்கியிருக்கிறார் நூலாசிரியர். பன்முகத்தன்மை மிக்க ஆளுமைகளை, பண்புகளை எவ்வாறு, எவ்வகையில், எப்படி வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை நபிகளுடைய வாழ்வின் நிகழ்வுகளைக் கொண்டு விரிவாக விவரிக்கப்பட்டுள்ளன. அண்ணல் நபியின் அளுமைகளை முழுமையாக அறிந்துகொள்ள இந்நூல் பெரிதும் உதவும்.

– எம்.எஸ்.

முருகன் எப்படித் தூங்குவார்?



கிருபானந்த வாரியார், திருமணம் ஒன்றிற்குத் தலைமை தாங்க வந்திருந்தார். அதே திருமணத்திற்கு நடிகவேள் எம்.ஆர்.ராதாவும் வந்திருந்தார். இருவரும் சுவாரசியமாகப் பேசிக் கொண்டிருக்கும் போது, பேச்சுக்கு இடையே எம்.ஆர்.ராதா, "முருகனுக்கு ஆறு தலைகள் இருக்குன்னு சொல்றீங்க, இராத்திரி எந்தப் பக்கமாகப் படுத்துத் தூங்குவார்?" என்று கிண்டலாகக் கேட்டார்.



உடனே வாரியார் சுவாமிகள், "கொஞ்சம் பொறுங்க" என்று சொல்லிவிட்டு, மணப் பெண்ணின் பெற்றோரை அழைத்து, "நேற்று இராத்திரி தூங்கினீர்களா?" என்று கேட்டார். 'இந்தத் திருமணம் நல்லபடியாக முடியணுமே என்கிற நினைப்பில் நாங்கள் பல நாள்கள் தூங்கவில்லை' என்றனர்.

உடனே வாரியார் சுவாமிகள் எம்.ஆர்.ராதா பக்கம் திரும்பி, "பாத்தீங்களா? ஒரு பெண் கல்யாணத்தை நடத்தி வைக்க நினைத்த இவங்களுக்கே தூக்கம் வரவில்லை. கோடானு கோடி பக்தர்களைக் காக்கும் ஆறுமுகப் பெருமான் எப்படித் தூங்குவார்?" என்றார்.

இதற்கு என்ன பதில் சொல்வது என்று திகைத்தார் எம்.ஆர்.ராதா. இதேபோல் தன்னை நோக்கி எவர் எழுப்பிய கேள்விகளுக்கும் தக்க பதிலைக் கொடுப்பது வாரியாருக்கு என்றுமே கைவந்த கலை.



நகரங்களிலிருந்து கோவையிலுள்ள தங்கள் உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்து இதில் கலந்து கொண்டவர்களும் உண்டு.

இந்தாண்டு ஒரு சோதனை ஆண்டு. சோதனை என்பது இந்த விழாவிற்கு மட்டுமல்ல, இந்தத் தேசத்திற்கே, ஏன்



கோவையில் 'எப்போ வருவாரோ' 2021

'எப்போ வருவாரோ 2021' நிகழ்ச்சியைக் குத்துவிளக்கு ஏற்றித் தொடங்கி வைக்கிறார் கோவை மாவட்ட ஆட்சியர் கு. ராசாமணி அவர்கள். அருகில் (இ.வ) திருமதி மகேஸ்வரி சற்குரு, மரபின்மைந்தன் முத்தையா, திருமதி பாரதி பாஸ்கர், ஸ்ரீகிருஷ்ணா ஸ்வீட்ஸ் அதிபர் ம. கிருஷ்ணன்.

திருவையாறில் தியாகப் பிரம்மம் தியாகராஜர் ஆராதனைப் பெருவிழாவைப் போல, கோவை மாநகரில் 'எப்போ வருவாரோ' நிகழ்ச்சிக்கு இது 15–வது ஆண்டு. எதிர்வரும் நூறாண்டுகளுக்கும் இது நடைபெறும் என்ற நம்பிக்கையும் ஏற்படுகிறது.

2021–இல் ஜனவரி 1 முதல் 10–ஆம் தேதிவரை பத்து நாள்கள் நடந்த விழாவில் கலந்து கொள்வதற்காகவே திருச்சி, சென்னை, மதுரை முதலிய

உலகத்திற்கே சோதனை. கொரோனோ வைரஸ் சென்ற ஓராண்டாக உலகத்தையே ஆட்டிப் படைத்துவிட்டது. இன்னும் அதன் அச்சம் தீரவில்லை. மிச்சமிருக்கிறது.

இந்தப் பத்து நாள் நிகழ்ச்சிகளில் எழுந்தருளிய அருளாளர்களான ஆண்டாள், சுந்தரர், கபீர்தாஸ், பக்த மீரா, ஸ்ரீதட்சிணாமூர்த்தி சுவாமிகள், வாரியார் சுவாமிகள், வள்ளலார் சுவாமிகள், ராமானுஜர், தியாகராஜ

சுவாமிகள், ரமணர் ஆகியோர் மனித குலத்தின் நல்வாழ்வுக்காகத் தங்கள் வாழ்க்கை முழுவதும் தவம் செய்த வர்கள்.

அவர்களைப் பற்றிய சிந்தனைகள், எண்ணங்கள், கருத்துகள் அனைத்துமே மெய்யன்பர்களுக்கு ஒரு கோணத்தில் இலக்கிய விருந்தாகவும், இன்னொரு பார்வையில் மனநோய் தீர்க்கும் மருந்தாகவும் இருந்து வருகிறது.

உபநிடதங்களைத் தந்த தவஞானிகளைப் போல, ஒவ்வொரு அருளாளரும் ஞானத்தை நமக்கு வாரி வழங்கியிருக்கிறார்கள். இதைப் பற்றிய சிந்தனையே இல்லாமல், வயிற்றை நிரப்புவதற்கான வாழ்க்கைக்காக மட்டுமே நம்மில் அநேகர் ஈடுபட்டு வருகிறோம்.



திருமதி பாரதி பாஸ்கர்

அந்த அநேகரை, ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனம் அன்போடு அழைத்து, அமர வைத்து, நிமிர வைத்து இந்த ஞான சிகிச்சையை அவர்களுக்குத் தந்து வருகிறது. சிறந்த அறிஞர்களைக் கொண்டு, தாய் குழந்தைக்குப் பால் கொடுப்பதைப் போல ஊட்டுகிற அந்தச் சிரத்தையை உச்சி மீது வைத்துத்தான் மெச்ச வேண்டும்.

இந்நிகழ்ச்சியின் பின்புலமாகவும், பின்பலமாகவும் நின்று வருகிறவருக்கு, இதை வழங்க வேண்டும் என்ற அவசியமே இல்லை. அவரைப் போன்றவர்கள் ஊட்டி, கொடைக்கானல், சிம்லா போன்ற சுற்றுலா வாசஸ்தல சொகுசு பங்களாக்களில் தங்கி, சுக



திருமதி சரசுவதி ராமநாதன் அவர்களுக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பு செய்கிறார் திரு. ம.கிருஷ்ணன்.

போகங்களை அனுபவிக்கக் கூடிய வசதியானவர்கள்.

அவர்களில் வித்தியாசமானவர் மட்டும் அல்ல, முரண்பாடானவரும் திரு. கிருஷ்ணன் அவர்கள். தான் அனுபவிப்பதைப் பிறரும் அனுபவித்து அவர்கள் பெறுகிற இன்பத்தைக் கண்டு மகிழ்பவர்கள் சிலர்தான். மிகச் சிலர்தான். மிகமிகச் சிலர்தான்.

இந்தச் சிலரின் சம்பாத்யங்கள் நம்மைப் போன்ற நடுத்தரப்பட்டவர்களுக்கு அவசியமில்லைதான். ஆனால், அந்தச் சிலர் பெற்றுள்ள அனுபவம், அனுபூதி, ஆன்மீகம் நமக்கு அவசியம். அந்தச் சிலர், அவற்றை நம்மோடு பங்கிட்டுக் கொள்வாரானால், அந்தப் பங்கு – பொருள் குறைந்து போய் பத்து ஒன்றாகிவிடாது. மாறாக ஒன்று பத்தாகிவிடும். ஏன் ஆயிரம், லட்சமாகியும் விடலாம். அக்



திரு. ஸ்ரீராம் பரசுராம்



திருமதி சுசித்ரா பாலசுப்ரமணியன்

காரியத்தால் கிடைக்கிற திருப்தி, இன்பம், சுகம் இவ்வளவுதான் என்று சொல்லி மாளாது.

கிருஷ்ணா ஸ்வீட்ஸ் அதிபர் இப்படிப்பட்ட வித்தியாசமானவர், முரண்பாடானவர். பூஜ்யர் தயானந்த சரஸ்வதி சுவாமிகள் முன்பு சாஸ்டாங்கமாக விழுந்து நமஸ்கரிப்பதால் பெறும் பாக்யத்தை, தனது வியாபாரம் மூலம் கிடைக்கும் கோடானு கோடி லாபத்தையும்விட அதிகம் என்பார் அவர். ஏனெனில், அந்த லாபம் வியாபார லாபமல்ல, ஆன்ம லாபம்.

இதேபோலத்தான், ‘எப்போ வருவாரோ’ என்ற கோபாலகிருஷ்ண பாரதியின் கொஞ்சு தமிழை மகுடமிட்டு, அவர் நடத்தி வரும் பத்து நாள் விழாவுக்கு நிகராகத் தமிழ்நாட்டில் வேறு ஏதுமில்லை.

அதுவும், இந்த ஆண்டு, கொரோனாவின் கொடூர ஆதிக்கமுள்ள தரு



திரு. கிருஷ்ணா

ணம். மக்கள், கூடுவதற்கே அஞ்சுகிற தருணம். ஆனாலும் முகக்கவசம், ஆறு அடி இடைவெளி முதலிய மூன்றடுக்குப் பாதுகாப்புகளோடு தான் நிகழ்ச்சிகள் நடந்தன.

கொரோனாவிற்காகத் தடுப்பு மருந்து நமக்கெல்லாம் கிடைக்க நாளாகலாம். ஆனால், எப்போ வருவாரோவின் அருளாளர்கள் தந்து வரும் தவமருந்து, நமக்கு இந்தப் பதினைந்து ஆண்டுகளாகத் தடங்கல் இன்றிக் கிடைத்து வருகிறது.

இந்தக் கொரோனா தருணத்தில் மிகப் புத்திசாலித்தனமாக நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டுள்ளன. இணைய வழியில், யூ–டியூபில், முகநூலில் இந்த நிகழ்ச்சிகள் அனைத்தையும் காண



திரு. சொ.சொ.மீ. சுந்தரம்

முடிந்தது. விழா மண்டபத்திற்கு வராமல் வீட்டிலிருந்தே கேட்டுப் பயன் பெற முடிந்தது.

திரு. கிருஷ்ணன் இந்த விபரங்களைக் கேட்டு அறிந்தபோது, இந்த இணையவழி ஒளிபரப்பால், எதிர் காலத்தில் மண்டபங்களுக்கு மக்கள் வரவேண்டிய அவசியமே இல்லாமல் போய்விடலாம் என்று ஐயப்படுவது போலவும், ஆச்சரியப்படுவது போலவும் அது இருந்தது.

இந்த ஆண்டு இந்த விழாவை மாவட்ட ஆட்சியர் திரு. கு. ராசாமணி அவர்கள் தொடங்கி வைத்துச் சிறப்புச் சேர்த்தார். வழக்கமாக ஒவ்

வோராண்டும் இதனைத் தொடங்கி வைக்கும் ஆட்டநாயகன் திரு. சுகி சிவம் இல்லாதது, பளிச்செனத் தெரிந்தது. ஆனாலும் திருமதி பாரதி பாஸ்கரால் சம எடையில் அது நிரப்பப் பட்டது.

ஆழ்வாரிலேயே பெண் ஆழ்வார் ஆண்டாளை அவருடைய காதல் தான் தனித்துவப்படுத்தியது. அந்தக் காதல், அவர் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட கள்வன், கண்ணனின் காதல் என்று திருமதி பாரதி பாஸ்கர் குறிப்பிட்டார்.

வழக்கமாக ‘எப்போ வருவாரோ’ மேடை வித்தியாசமாக ஒவ்வோர் ஆண்டும் அமைக்கப்படும். இந்த ஆண்டு, மேடை முழுவதும் காற்று அடித்தாலும் அணையாத அகல்



திரு. ஐ.கே. சுப்பிரமணியன்

விளக்குகள். காரணம், அவை திரி விளக்குகள் அல்ல, மண் விளக்குகள் அல்ல, மின்விளக்குகள். தூரத்துப் பார்வையில் மங்களகரமான அந்த மேடை மனத்தை ஆக்கிரமித்தது. நமது பார்வையை ஆகர்ஷித்தது. நமது ஞானப் பசியை அதிகப்படுத்தியது.

இரண்டாம் நாள், அதே மேடையில் திருமதி. சரசுவதி ராமநாதன், சுந்தரரைப் பற்றி மந்திரத் தமிழில் பேசினார். நம்பியாரூரான் சுந்தரர் தான் பெரிய புராணத்தின் கதாநாயகன் என்று அழுத்தமாக நிறுவினார்.

மூன்றாம் நாள் எழுந்தருளிய அருளாளர் கபீர்தாஸ் சுவாமிகள். அவ



திரு. ஜி.எஸ். மணி

ரைப் பற்றி ஸ்ரீராம் பரசுராம் அவருடைய நதிமூலத்தைச் சுட்டிக் காண்பித்தபோது, அவர் ஒரு முஸ்லீம் என்பதைப் பெருமிதத்தோடு குறிப்பிட்டார். பதினைந்தாயிரம் பாடல்களைக் கொடுத்த அந்த ஞானி, அத்வைதத் தத்துவத்தைத் தாங்கிநின்ற அருளாளர் என்றார்.

நான்காம் நாள், பக்த மீராவைப் பற்றிப் பேசிய திருமதி. சுசித்ரா பால சுப்ரமணியன், ராமநாமமே அழியாச் செல்வம் என்பதை நம் மனதில் நங்கூரமிடச் செய்தார். மீரா, ஆண்டாளைப் போன்ற ஞானசக்தி உடையவள் என்பதை எடுத்து இயம்பினார்.

ஐந்தாம் நாள், மடப்புரம் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி சுவாமிகளை திரு. கிருஷ்ணா நமக்கு அறிமுகம் செய்தார். தட்சிணாமூர்த்தி சுவாமிகள் ஓர் அவதாரப் புருஷர், ரமணர் வரிசையில் நம்மை ரட்சிக்கத்தக்கவர் என்றார்.



திரு. மரபின்மைந்தன் முத்தையா



திரு. இந்திரா சௌந்தரராஜன்

ஆறாம் நாள், பொற்கிழிக் கவிஞர் சொ.சொ.மீ., வாரியார் சுவாமிகளை மண்டபத்தில் நடைபயிலவிட்டார். கம்பனின் கால்வண்ணம் என்ற சொற்றொடருக்கு மிச்சமுள்ள முக்கால் வண்ணத்தை வாரியார் எப்படி விளக்கினார் என்பதை இனிப்புப் பூந்தியைப் போல் தந்தார்.

ஏழாம் நாள், ஏழு திரை நீக்கிய வள்ளலார் சுவாமிகளைப் பற்றித் தமிழறிஞர் ஐ.கே. சுப்பிரமணியன், வள்ளலாரின் வரலாற்றையே சித்தரித்தார். வள்ளலார் கண்ட சன்மார்க்கமும், தேவார மூவரும் மாணிக்கவாசகரும் கண்ட சைவமும் ஒன்றே என்பதை நிறுவிக் காட்டினார்.

எட்டாம் நாள், ஆன்மிகச் சொற்பொழிவாளர் இந்திரா சௌந்தரராஜன் ராமானுஜரைத் தமது தோள்களில் சுமந்து வந்து மண்டபத்தில் இறக்கிவிட்டார். வைஷ்ணவத்தைப் பின்பற்றுவதற்குப் பிராமணராக இருக்க வேண்டிய அவசியமில்லை என்று காட்டிய ராமானுஜரின் மெய்யானப் புரட்சியை எடுத்துக் கூறினார்.



விழாவில் பங்கேற்ற சான்றோர் பெருமக்கள்...

ஒன்பதாம் நாள், தியாகப் பிரம்மம் தியாகராஜ சுவாமிகளின் அருமையான ராகங்களை எடுத்துக்கூறிய திரு. ஜி.எஸ். மணி அவர்கள், சங்கீதம் மோட்சத்தின் திறவுகோல் என்பதைத் தியாகராஜர் தமது கீர்த்தனைகளின் வழியாகக் காட்டியவர் என்பதை இசைத்துக் காட்டினார்.

நிறைவு நாளன்று, கோவையின் ஞானசம்பந்தன் மரபின் மைந்தன், ரமணரைப் பற்றிப் பேசியபோது, ரமணரின் தியானம் எத்தகைய சக்தி வாய்ந்தது என்பதைக் காட்டுவதற்கு,



'ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ்' அதிபருக்குப் பொன்னாடை அணிவித்துக் கௌரவிக்கும் திரு. மரபின்மைந்தன் முத்தையா

இளம்வயதிலேயே அவர் தன் உடலைத் துறந்தவர் என்பதைச் சுட்டிக் காட்டினார்.

இவ்வாறு, பத்து நாள் நிகழ்ச்சிகள், கொத்துத் திராட்சை போலப் பக்தர்களுக்கு – இலக்கியவாதிகளுக்கு – மெய்யன்பர்களுக்கு வாய்த்தன. கொரோனாவை முறியடித்து இணைய தளத்தின் ஆதரவோடு நடந்த இந்தாண்டு நிகழ்ச்சி, முந்தைய ஆண்டுகளின் நிகழ்ச்சிகளைவிட, முத்தாய்ப்பாக அமைந்தது என்றால், அது மிகையல்ல!

– ந.நி.


பொதுவாக கரு, கருவறை என்பவற்றைப் பற்றிய கருத்து நமக்கு உண்டு. கோயில் கர்ப்பகிரகத்தைக் கருவறை என்கிறோம். தாயின் கர்ப்பப்பையையும் கருவறை என்கிறோம். மகரிஷியின் கருமையம் இதுவல்ல.

ஆங்கிலத்தில் Gene என்பது நமது பாரம்பரிய மரபைக் காட்டுகிறது. குழந்தையின் ரத்த மரபணுவும், தந்தையின் மரபணுவும் ஒன்றாகவே இருக்கும். இதில் தந்தையின் குணாதிசயங்கள் பதிந்திருக்கும்.

கரு என்பது நமது மூலம். நமது சுயம். நமது ஆளுமை என்பது மகரிஷியின் விளக்கம்.

இது நமது உடலின் உறுப்பல்ல. உருவமற்ற அருவம். இதில்தான் நமது அனைத்தும் பதிவாகின்றன என்பதை, அருள்நிதி எஸ்.கே.எம். மயிலானந்தன் ஆழமாகவும், எளிமையாகவும் மகரிஷியை விளக்கியுள்ளார்.

– இ.ஆர்.



வேதாத்திரி மகரிஷி

கருமையம் (Genetic Centre)

"**வா**ழ்க்கைவளக் கல்விதான்" மனிதகுலத்திற்கு நன்கு திட்டமிடப்பட்ட ஒளிவிளக்காக அமைய முடியும் என்பது அருள்தந்தை வேதாத்திரி மகரிஷியின் கூற்றாகும். மனிதன் கடவுளை அறிவதும், போற்றுவதும் வாழ்வுக்கு அவசியம்தான். ஆனாலும் கருமைய உண்மைகளை அறியாத வரை போதிய பயன் நமக்குக் கிடைக்காது.

அதற்குக் கருமையத்தைப் பற்றிய ஞானம் மிக அவசியம். அது மனித இனத்திற்குக் கிடைத்த தெய்வீகப் புதையலாகும்.

உயிரினங்களின் உடலில் நீளவாக்கிலும், குறுக்கு வாக்கிலும் கோடு போட்டால் அவ்விரண்டு கோடுகளும் சந்திக்கும் இடமே கருமையம் அமைந்துள்ள இடமாகும். கருமையமே உடலின் இயக்க மையமாகச் செயல்படுகிறது.

இறைநிலையின் சூழ்ந்த அழுத்தத்தால் சீவகாந்த அலை உடலின் மையத்தில் திணிவு பெறுகிறது. திணிவுபெற்ற இந்த மையமே கருமையம். சீவகாந்தக் கருமையத்தைத்தான் உயிரினத்தின் ஆன்மா என்கிறோம். கருமையமே மனிதன் ஆற்றுகிற செயல்களுக்கேற்ப விளைவை நல்கக்கூடிய தெய்வீக நீதிமன்றமாகும்.



நிலம், நீர், நெருப்பு, காற்று, விண் என்பனவற்றைப் பஞ்ச பூதங்கள் என்கிறோம். பூதங்கள் என்றால் பேய், பிசாசுகள் அல்ல. பூதம் என்பதற்கு 'மூலம்' என்றும், 'அசல்' என்றும் அர்த்தங்கள் உண்டு. இங்கே பஞ்ச பூதங்கள் என்பவை ஐந்து மூலங்கள்.

உயிரினங்களின் உடலில் தனித் தனியே சுழன்றோடிக் கொண்டிருக்கும் விண்தான் (ஆகாசம்) உயிர் எனப் படுகிறது. இதனைச் 'சிதாகாசம்' என்றும் 'சூக்கும உடல்' என்றும் கூறுவார்கள்.

காந்தச் சுழலின் வேகத்தைவிட உயிர்த் துகள்கள் சுழலும் வேகம் குறைவாகும். உடலின் கருமையத்தில் அவை சுற்றிக் கொண்டிருக்கின்றன.

பருவுடலின் உற்பத்திக்குக் காரணமான விந்தும் (Sexual Vital Fluid) அதே இடத்திற்கு ஈர்க்கப்பட்டு அதுவும் மையம் கொள்கிறது.

கருமையத்தில் மூன்று மையங்கள் இணைந்துள்ளன. 1. சீவகாந்த மையம், 2. உயிர் மையம், 3. விந்து மையம். இந்த மூன்றும் இணைந்தும் ஒன்றை மற்றொன்று காத்தும், ஒன்றுக்கு மற்றது உதவியும் இயங்குகிற ஓர் இயற்கை நிதியமே கருமையம் ஆகும்.

இருதயம், இரத்த ஓட்டத்திற்கான இயக்க மையம். இரத்தம் இருதயத்திலிருந்து அதிக அழுத்தம் பெற்று எல்லாச் செல்களுக்கும் சென்று ஆற்றலைக் கொடுக்கிறது. பின்பு, குறைந்த அழுத்தத்துடன் இருதயத்திற்குத் திரும்பி வருகின்றது. இருதயத்தில் மீண்டும் அழுத்தம் பெற்று உடல் முழுவதும் பாய்ந்து ஓடுகிறது.

இதேபோல கருமையத்தைச் சுற்றிக் கொண்டிருக்கிற உயிர்த்துகள்களும் கருமைய விந்துநாதத்தில் தோய்ந்து, காந்த ஆற்றலைப் பெறுகிறது. பிறகு எல்லாச் சிற்றறைகளுக்கும் செல்கிறது. காந்த ஆற்றலை எல்லாச் செல்களுக்கும் கொடுத்துவிட்டுக் கருமையத்திற்கே அது திரும்பி வருகிறது.

கருமையத்திலும், சீவகாந்தத்திலும் ஏற்படுகின்ற பதிவுகள் அனைத்துமே உயிர்த்துகள்களிலும் விந்துநாதத்திலும் ஏற்படுகின்றன.

இவ்வாறு, ஓர் உயிரினத்தின் வாழ்நாள் முழுவதும் ஏற்படும் உடல், மன இயக்கங்களும் அவற்றின் விளைவுகளும் கருமையத்தில் பதிவாகின்றன. அவை வாழ்நாள் முழுவதும் செயலாற்றும் ஆளுமையாக (Personality) தரமாக அமைகின்றது. இந்த ஆளுமைதான் ஒருவரின் பிரத்யேக அடையாளம்.

உடல் முழுவதும் சுழன்றோடிக் கொண்டிருக்கின்ற சீவகாந்த அலைகள் ஐம்புலன்கள் வழியாகவும் மூளையின் வழியாகவும் இயங்குகின்றபோது, அது மனமாகச் செயல்படுகிறது. சீவ காந்த அலையே மனம் ஆகும். கருமையம் மற்றும் மூளைப் புலன்கள் ஆகிய இவை இரண்டும் இணைந்து செயலாற்றுவதே மனம் ஆகும்.

ஐம்புலன்களின் வழியாகச் சீவகாந்தம் செலவாகின்றபோது, அது



அருள்நிதி எஸ்.கே.எம். மயிலானந்தன்

தலைவர், உலக சமுதாய சேவா சங்கம்

அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம் என்று ஐந்து தன்மாத்திரைகளாகின்றன.

காந்த அலையாக இயங்குகிற இறைநிலையே மனமாகவும் இயங்குகிறது. அதுவே இறைநிலையின் பேரறிவும் சிற்றறிவுமாகும்.

செயல் விளைவு விதியின்படி (Cause and Effect), ஒவ்வொரு எண்ணமும், ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு விளைவைத் தருகிறது. எண்ணம், சொல், செயல்கள் மட்டுமல்லாமல், விளைவும் கருமையத்தில் பதிவாகிவிடுகிறது.

இங்கு, பதிவு என்றால் முத்திரை போடுவதோ அல்லது அழுத்தமான குறிப்பாகக் கருமையத்தில் ஏற்படு



வதோ அல்ல. கருமையமே புதிய புதிய அனுபவங்கள் அனைத்தையும் தனது போக்கில் தன்மயமாக்கிக் கொள்கிறது.

எத்தனை பிறவிகள் என்றாலும், வாழ்க்கை அனுபவங்கள் இந்தக் கருமையத் தொடர்பாக நீடித்து வரும்.

மீண்டும் அந்த அலைச்சுழல் (Mental Frequency) தானாக வரும்போது அதே எண்ணம் பிரதிபலிக்கும். அது செயலாகவும் மலரும். அந்தச் செயலின் விளைவும் பதிவாகிவிடும். மீண்டும் மீண்டும் அவை வெளிப்படும்போதெல்லாம் எண்ணம், சொல், செயல், விளைவு அனைத்தும் ஆழமாகப் பதிவாகின்றன. கருமையத்தில் இவை பதிவாகும்போது, அவை செயல்படுவதற்கான காலமும் இறைநிலையால் நிர்ணயிக்கப்பட்டு விடுகிறது.

இறைநிலையே காந்த ஆற்றலாக இருப்பதால், கருமையத்தில் இறுக்க ஆற்றலாகவும், விலக்கும் ஆற்றலாகவும் அது உள்ளது.

கருமையம் இரண்டு வேலைகளைச் செய்கிறது.

1) இறுக்க ஆற்றல், கருமையத்தில் சுருக்கிப் பதிவு செய்வது.

2) விலக்கும் ஆற்றல், கருமையத்திலிருந்து விரித்து எண்ணங்களாக மலர்த்திக் காட்டுகிறது.

மனிதன் எந்தச் செயல் செய்தாலும் உடலில் ஓடிக் கொண்டிருக்கும் சீவகாந்தத்தில் ஏற்படும் தாக்கங்களால், அவை அனைத்தும் கருமையத்திற்குப் போய்ச் சேருகின்றன. இவ்வாறு நிகழ்வதைத்தான் ‘வினைப் பதிவு’ என்கிறோம்.

ஒரு சீவன் செய்கின்ற எந்தச் செயலானாலும் எந்த எண்ணமானாலும் அது கருமையத்திலிருந்து பிரிக்க முடியாத தன்மை உள்ளதாக அமைந்து விடுகின்றது. அதனால்தான், கருமையத்தை ‘ஆன்மா’ என்று பெருமைப்படுத்திக் கூறுகிறோம்.

கருமையத்தை மனிதன் புரிந்து கொள்ள ஓர் உவமை கூறுவதென்றால், இக்காலத்தின் கணினியை (Computer) உவமையாகச் சொல்லலாம். கணினியில் உள்ள சிப் (Chip) (சிறுதுண்டு) போன்றதே சீவனில் உள்ள கருமையம். கணினியில் சுருங்கியும், விரிந்தும் அலைகளாக ஆயிரக் கணக்கான நிகழ்ச்சிகள் அடங்கி இருக்க அது வினையாற்றுகிறது.

இதேபோலத்தான், கருமையத்தில் பதிவான எண்ணங்கள், சொற்கள், செயல்கள் அனைத்தும் மலர்கின்றன.



அதனால்தான் நல்ல எண்ணங்களை எண்ணுவதும் நல்ல சொற்களையே சொல்லுவதும் நல்ல செயல்களையே செய்வதுவும் மனிதனுடைய பொறுப்பாகிறது.

பிறவி எடுத்த பிறகு நாம் ஆற்றிய செயல்கள் வேறு. அதற்கு முந்தைய பிறவியில் இருந்த கருவமைப்பில் பதிவானவை வேறு. இந்த இரண்டு பதிவுகளும் சேர்ந்துதான் கருமையத் தொகுப்பாகிறது. அதுவே ஒரு மனிதனுடைய குணமாகவும் அமைகின்றது.

இதுவரை நாம் எண்ணிய எண்ணங்கள், நாம் செய்த செயல்கள் விரும்பியபோதும் விரும்பாதபோதும் ஏற்பட்ட கருமையப் பதிவுகளே. பழக்கத்தின் வழியே எண்ணம், சொல், செயல்களாக அவை எழுச்சி பெறுகின்றன. இதனையே 'பழக்கப் பதிவுகள்' என்று குறிப்பிடுகிறோம். சிற்றுயிரிலிருந்து ஐயறிவு வரை தொடர்ந்த பரிணாம வளர்ச்சியில் எல்லாச் செயல்பதிவுகளும் அனுபவங்களும் மனிதனின் கருமையத்தில் திணிவு பெற்று இருக்கின்றன.

அதேபோல முதல் மனிதனில் தொடங்கிய பதிவிலிருந்து இன்று வரையில் வந்த எல்லாப் பதிவுகளும் கருமையத்தில் 'இருப்பாக' (Deposit) உள்ளன. அவ்வாறு, தனது பெற்றோர் வரைக்கும் வந்த பதிவுகளைச் 'சஞ்சித கர்மம்' என்கிறோம். இதுவே முன்வினைப் பதிவாகும்.

மூன்று வயது முதல் இன்று வரை ஒருவர் செய்த செயல்களும் விளைவுகளும் இன்பதுன்ப அனுபவங்களும் கருமையத்தில் பதிவாகியுள்ளன. இப்பதிவுகளைத் 'தன்வினைப் பதிவுகள்' என்கிறோம். இதனைப் 'பிராரப்த கர்மம்' என்றும் கூறுகிறோம்.

இத்தகைய முன்வினைப் பதிவுகள், தன்வினைப் பதிவுகள் ஆகிய இரண்டும் சேர்ந்த பதிவுகளே, ஒருவரது ஆளுமை (Personality) ஆகும். சஞ்சித, பிராரப்த பதிவுகளுக்கேற்ப ஒரு மனிதன் உலகத்தோடு தொடர்பு கொண்டு ஆற்றும் செயல்கள் 'ஆகாமிய கர்மம்' ஆகும்.

ஆன்மாவுக்கு இச்சை ஊட்டி செயலில் ஈடுபடச் செய்கின்ற மனதின் எழுச்சிகளை 'ஆகாமிய கர்மம்' என்பர். இதைத் தமிழில் 'புகுவினை' என்பர்.

கருத்தொடராக வந்த பதிவுகளையும் தற்போது உடலால் ஆற்றிய வினைப்பதிவுகளையும் 'பழவினை' என்பர்.

ஒரு மனிதனுடைய கருமையத்தைப் பற்றி ஆராய்ந்தால், ஆதியில் சிற்றுயிராக இருந்து, தன் மாற்றமடைந்து, எத்தனையோ ஆயிரம் பிறவிகள் எடுத்துள்ளோம் என்பது தெரியும். பலவிதமான உடலியக்க – மனஇயக்க அனுபவங்களைப் பெற்றுள்ளோம். அவையெல்லாம் ஒன்று விடாமல் கூடியிருக்கும் ஓர் இயற்கை நிதியமே 'கருமையம்' என்பது.

அதனை, பிரபஞ்ச இரகசியங்கள் அனைத்தும் அடங்கிய 'ஒரு தெய்வீக நிதியம்' எனக் கொள்ளலாம்.

கருமையத்தை இயற்கையின் புதையல் பெட்டகம் என்றும், தெய்வீக நீதி மன்றம் என்றும் உயர்வு படுத்தித் தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி குறிப்பிடுகிறார். அனுபவப் பதிவுகள் அனைத்தையும் அலை வடிவில் இறுக்கிச் சுருக்கி வைத்திருக்கும் இடம்தான் மனிதனுடைய கருமையம் ஆகும்.

(மீதி அடுத்த இதழில்)

ஆன்மிகம்



பசுபதீஸ்வரர் திருக்கோயில்

பெண்குலத்தின் பொன் விளக்கு!

தமிழ்நாட்டில் மிகவும் புகழ் பெற்ற கொங்கு நாட்டின் ஏழு சிவத் தலங்களில் கரூரும் ஒன்று. தேவாரப் பாடல் பெற்ற தலம். இத்தலத்தினை திருஞானசம்பந்தர், சித்தர் கருவூரார், அருணகிரிநாதர் முதலியோர் பாடியுள்ளனர்.

இங்கேதான் இந்த அதிஅற்புத வடிவாம்பாள் – வடிவுடைய நாயகியாக – சௌந்திர நாயகியாக, வரலாற்றுச் சிறப்புமிக்கச் சிவத்தலமான அருள்மிகு பசுபதீஸ்வரர் திருக்கோயிலில் வடபுறமாக அமர்ந்த கோலத்தில், தென்புறம் பார்த்துப் பக்தர்களுக்கு ஈசனுடைய பெருங்கருணையால் அருள்பாலித்து வருகிறார். பெண் குலத்தின் பெருமைக்கு எடுத்துக்காட்டாக இருந்த அந்த அம்மனைப் பற்றிய ஓர் அற்புத உண்மை வரலாறுதான் இக்கட்டுரை.

கரூருக்கு மேற்கே 10 கி.மீ. தொலைவில் அமராவதி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஒரு சிற்றூர்தான் அப்பிபாளையம். பழம்பெருமை வாய்ந்த இந்த ஊரில், அப்பொழுது கொத்துக்காரராக வேட்டுவர் குடியில் பிறந்த செல்வந்தர் ஒருவர் வாழ்ந்து வந்தார். இவர் சிவபக்தியில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்.

இந்தச் செல்வந்தருக்கு அழகே வடிவமாக ஒரு பெண் குழந்தை பிறந்தது. அவளுடைய அழகை எண்ணித்தானோ என்னவோ, அந்தக் குழந்தைக்கு 'வடிவாம்பாள்' என்று பெயரிட்டு மகிழ்ந்தார்.

வடிவு சிறு குழந்தையாக இருந்த போது, அவளின் பெற்றோர், சிவபக்தியில் சிறந்த விளங்கிய நாயன்மார்கள் குறிப்பாக, கண்ணப்ப நாயனாரின் பக்திச் சிறப்பினையும், அவரைக் கடவுள் எப்படி ஆட்கொண்டார் என்பது பற்றியும் வடிவுக்குக் கூறினார்கள்.

இதை நன்கு உற்றுக் கேட்ட வடிவு, பக்தியின் சிறப்பு இப்படிப்பட்ட நிலைக்கு உயர்த்தியுள்ளதே என்று அந்தச் சிறிய வயதி லேயே தன்னுடைய நாட்டத்தைக் கடவுள் மேலேயே செலுத்தினாள்.

கருவை வேணு

வடிவின் தகப்பனார், தன் உழவுப் பணியின் காரணமாக கரூருக்குச் செல்லும் போதெல்லாம், அவளும் உடன் செல்வாள். அப்போது கரூரில் வீற்றிருக்கும் பசுபதீஸ்வரர் சன்னதிக்கு வந்து, வணங்கி வருவதை வழக்க மாகக் கொண்டிருந்தாள்.

சில சமயங்களில் அவள் ஈசுவரன் கோயிலிலேயே பல மணிநேரம் அமர்வது, ஈசனையே எண்ணியெண்ணி தியானத்தில் ஆழ்ந்துவிடுவதும் நடைபெற்றது. இப்படியே சில ஆண்டுகள் கழிந்தன. வடிவின் இறைபக்தியும், இறைவன்மேல் வைத்திருக்கும் அன்பும் பன்மடங்காகியது.

வடிவு, அந்தக் கால வழக்கப்படி, அவள் பருவம் எய்திய பின்பு,



அவளின் எண்ணம் போல வெளியே எங்கேயும் செல்ல வேண்டிய வாய்ப்பு குறைந்துபோனது. இதனால் கரூருக்குச் சென்று பசுபதீசுவரரை வணங்கும் வாய்ப்பும் நாளும் குறைந்தது.

இந்நிலையில் வடிவு, தனது வீட்டுப் பூஜை அறையிலேயே சிறிய சிவலிங்கத்தை வைத்துப் பூஜித்து வந்தாள். இதைக் கண்டு வடிவின் பெற்றோர் மிகவும் வருத்தப்பட்டனர். பின்பு அவர்கள் வடிவுக்குத் திருமணம் செய்துவைக்க விரும்பினார்கள்.

அதை அவள் ஏற்றுக்கொள்ளவேயில்லை; “அப்படியே திருமணம் செய்து கொள்வதாயிருந்தால், பசுபதியீசரைத்தான் மணப்பேன்” என்று உறுதியோடு கூறினாள்.

பெற்றோரும் உறவினர்களும் மிகவும் வேதனையடைந்து, “ஒருவேளை இவளுக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டுவிட்டதோ” என எண்ணி, வீட்டில் உள்ள தனியறையில் அவளை அடைத்து வைத்தனர்.

இப்படி அடைக்கப்பட்டிருந்தாலும் தனியறையில் அமர்ந்து மணிக்கணக்கில் தியானத்திலேயே மூழ்கினாள். உண்ணும் உணவைக்கூடத் தவிர்த்து வந்தாள்.

இவளுக்கு ஏதோ மனோவியாதிதான் ஏற்பட்டுவிட்டது என்று எண்ணிய பெற்றோர், அவளுக்கு மருத்துவம் பார்க்கச் சரியான மருத்துவர் வரவழைக்கப்பட்டார்கள். அதுவுமல்லாமல், மனோவியாதிக்கு என ஜோதிடர்களும் வருகைபுரிந்து அவளைச் சோதித்துப் பார்த்தார்கள். ஆனால், வந்தவர் அனைவருக்கும் ஒன்றுமே புரியாமல்தான் இருந்தது.

அவளது பெற்றோர் “தாங்கள் ஏற்பாடு செய்யும் மாப்பிள்ளையை மணந்துகொள்ள வேண்டும்” என்று மன்றாடிக் கேட்டுக் கொண்டபோது கூட, நான் மணந்தால், பசுபதியீசரைத்தான் மணந்து கொள்வேன்” என்று திரும்பத் திரும்பக் கூறியே வந்தாள்.

வடிவின் இந்த நிலை கண்டு வருந்திய பெற்றோர், “ஏன் இப்படி இருக்கிறாய்...?” என்று கேட்டபோது, அவள் இறைவனை மனதார தியானித்துக் கொண்டே, தன்னுடைய பெற்றோரிடம், “நான் வணங்கும் தெய்வம், உங்கள் கனவில் தோன்றி எனக்கு நடக்க இருப்பதைப் பற்றி, தகுந்த முறையில் தெரிவிப்பார்” என்று உறுதியுடன் கூறினாள்.

அன்றைய தினம் இரவே, அவள் கூறியபடியே பசுபதீசுவரர், அவள் பெற்றோரின் கனவில் தோன்றி,



"வடிவாம்பாளை, தாம் பங்குனி உத்திரத் திருவிழாவின் ஏழாம் நாளில், மணம் செய்துகொள்ள இருப்பதாகவும், அன்றைய தினம் விடியற்காலை, இந்த ஊரான அப்பிபாளையத்தில் உள்ள தெருக்கள் முழுவதும் பூமாரி பொழிந்திருப்பதைக் காண்பீர்களாக" என்றும் கூறி, ஈசன் கனவிலிருந்து மறைந்தார்.



சித்தர் கருவூரார்

அதிகாலையில் விழித்தெழுந்த பெற்றோர், அவர்கள் கண்ட கனவு பற்றி ஆச்சரியமும் ஆனந்தமும் அடைந்தனர். அது குறித்து, ஊர்ப் பொதுமக்களிடமும் உற்றார் உறவினர் அனைவரிடமும் கூற, அவர்கள் ஆனந்தக் கடலில் மூழ்கினார்கள்.

பெருமான் ஈசன் கனவில் கூறிய படியே, அந்தக் குறிப்பிட்ட பங்குனி உத்திரத் திருநாள் வந்தது.

ஏழாம் நாள் அதிகாலையில், அந்த ஊர் முழுக்கத் தெருக்களிலெல்லாம் வகை வகையானப் புதுப்புது மலர்கள் இருப்பதைக் கண்டனர்; மிகுந்த ஆச்சரியமும் அதிர்ச்சியும் மகிழ்ச்சியும் அடைந்தனர்; அதைக் கண்டவுடன், அந்தத் தெரு மக்களெல்லாம் வடிவுவின் வீட்டை நோக்கிச் சென்றனர்.

அப்போது, வடிவாம்பாள், கழுத்தில் பெரிய தெய்வீக மாலையுடன் காணப்பட்டாள். அதைக் கண்ட பெற்றோரும் மற்றோரும் ஒன்று திரண்டு, அந்த மணமகளைப் பெரிய பூப்பல்லக்கில் அலங்கரித்து அழைத்துச் சென்றனர்.

பசுபதீஸ்வரர் சன்னிதியை அடைந்தவுடன், வடிவாம்பாள் கோயில் மூலஸ்தானத்திற்குள் நுழைந்தவுடன், ஒளிமயமாகக் காட்சியளித்த இறைவனுடன் ஆட்கொள்ளப் பட்டாள்.

அப்பிபாளையம் வடிவு, வடிவாம்பாள், வடிவுடைய நாயகியாகி, சௌந்திர நாயகி என்னும் இறைப் பெயரில், கல்யாண பசுபதீசுவரர் ஆலயத்தின் வடபுறம், தெற்கு நோக்கி எழுந்தருளி பக்தர்களுக்கு அருள்பாலித்து வருகிறார்.

கரூர் பசுபதீசுவரர் ஆகிய உற்சவமூர்த்திகள் இன்றும், சௌந்திர நாயகி இறைவனுடன் ஐக்கியமாகிய பங்குனி உத்திரத் திருநாளான ஏழாம் நாளில் அப்பிபாளையம் தன் மாமனார் வீட்டுக்குச் சென்று வருவதாக ஆன்றோர்கள், அப்பிபாளையம் பொதுமக்கள், சௌந்திர நாயகி குலவழி வந்தவர்கள், அப்பிபாளையம் சென்று வருவதை வழக்கமாகக் கொண்டு ஆராதித்து வருகிறார்கள்.

அப்படி அப்பிபாளையம் போகும்போது உற்சவமூர்த்திகளான ஈசுவரன், சௌந்திர நாயகி ஆகியோர் தனித் தனிப் பல்லக்கில் அழைத்துச் சென்று, அங்கே இருந்து திரும்பும்போது, ஒரே பல்லக்கில் சர்வ அலங்காரத்துடன் மேளதாளம் முழங்க வீதியில் வலம் வரும் காட்சியைக் காணும் அனைவர் கண்களிலும் நிச்சயமாக ஆனந்தக் கண்ணீரை வரவழைப்பதாக அமையும்.

இப்படிக் கோயில் திரும்பியவுடன், அங்கே கோலாகலமாகத் திருமண வைபவமும் நடைபெறும். இதுதான் பங்குனி உத்திரத் திருநாளில் முக்கிய நிகழ்வாக வருடா வருடம் நடைபெற்று, சாதாரணப் பெண்ணாய் இம்மண்ணுலகில் தோன்றி, இறைவனுடன் ஐக்கியமான நாளாய்ப் போற்றப்பட்டு வருகிறது!



நேர்காணல்

கோவையில் ஒரு மானுட வேடந்தாங்கல்



கூன், குருடு, செவிடு, வாய் பேசாமை, மனவளர்ச்சிக் குன்றிய நிலை, கை, கால் ஊனம்... இப்படியான குறைபாடுகள் சிலருக்குப் பிறவியிலேயே அமைந்து விடுகின்றன. இன்னும் சிலருக்கோ வாழ்க்கையின் மையப் பகுதியிலோ, வயது முதிர்ந்த நாட்களிலோ இந்தக் குறைபாடுகள் ஏற்பட்டு விடுகின்றன.

பணக்காரக் குடும்பத்தில் பிறந்தவர்களுக்கு இந்த நிலைமை ஏற்படுமாயின், அவர்கள் அதற்கென்று செவிலியரை நியமித்துத் தங்கள் குழந்தைகளைப் பராமரித்துக் கொள்வார்கள். ஆனால் ஏழைகளின் நிலைமை?

இதெல்லாம் நடப்பு உலகில் நிகழ்கிறதா என்றால்... மிகமிக அரிதே... எங்கோ ஈரம் இருக்கும் சில இடங்களில் மட்டுமே அரிதாய் நடக்கிறது. வயதான பெற்றோர்களையே பாரமாக நினைக்கின்ற இளைஞர் உலகம் இது.

இவ்வாறு பெற்றோரும் உற்றாரும் கைவிடப்பட்ட மனித ஜீவன்களுக்கு... இந்தச் சமூகம் அனாதை... ஆதரவற்றோர் எனச் சில பெயர்களைச் சூட்டியுள்ளது. இது உண்மைதான்.

புத்தி சுவாதீனம் இல்லாத சிலர், செல்லக் கூடாத இடங்களுக்குச் சென்று அகால மரணமடைகிறார்கள். சிலர் பிச்சை எடுக்கிறார்கள்... சாலையோரம் தனக்குத்தானே பேசிக் கொண்டும்... சிரித்துக் கொண்டும் திரிகிறார்கள்... இன்னும் சிலர் சமூக விரோதிகளிடம் சிக்கிப் பிச்சையெடுக்க வைக்கப்படுகிறார்கள்..

சரி... இப்படிப்பட்ட ஆதரவற்ற ஏழைகளுக்கு விடிவு என்பதே கிடையாதா...? இதற்கு என்னதான் தீர்வு...?

தீர்வு இருக்கிறது... வறண்டுபோன இந்த மனித மனங்களுக்குள்ளும் வசந்தம் வீசச் செய்து, அவர்களை அரவணைத்துப் பாதுகாக்கும் கருணை நிறைந்த காப்பகங்கள் ஆங்கங்கே இருக்கத்தான் செய்கின்றன. அப்படி ஒரு காப்பகம் கோவை, ஆர்.எஸ். புரத்தில் உள்ளது. அந்தக் காப்பகம், **"ஆதரவற்றோருக்கான தங்கும் மையம்"** என்ற பெயரில் இயங்கி வருகிறது. **மலரும் விழிகள்** எனும் தன்னார்வச் சமூகத் தொண்டு அமைப்பின் மூலம் இயங்கி வருகிறது.

நாம் அங்குச் சென்று பார்த்த போது, அம்மையத்தில் 92 பயனாளிகள் இருந்தனர். இதில் ஆண்கள் 65 பேர்,

பெண்கள் 27 பேர். இதில் பெரும்பாலானோர் மாற்றுத்திறனாளிகள்.

இது முழுக்க முழுக்கக் கோவை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. அவர்களின் ஆதரவோடு மிக நேர்த்தியாக, எந்தக் குறையுமின்றி மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இது ஓர் இலவசச் சேவை. இங்குத் தங்குவதற்கு எந்தக் கட்டணமும் கிடையாது.

இந்தக் காப்பகத்தைச் சமூக அக்கறையோடு நிர்வகித்து வரும் திரு. கங்காதரன் அவர்களை 'ஓம் சக்தி'க்காகச் சந்தித்து உரையாடினோம்....

கேள்வி : இந்தக் காப்பகம் எந்த ஆண்டுத் தொடங்கப்பட்டது...?

பதில் : 2011–ஆம் ஆண்டிலிருந்து இது இயங்கி வருகிறது.

கேள்வி : இதுபோல் எத்தனைக் காப்பகங்கள் உள்ளன?

பதில் : கோவை மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட இடங்களில் மூன்று காப்பகங்கள் இயங்கி வருகின்றன.

கேள்வி : இது அரசாங்கத்தின் மூலம் நடத்தப்படுகிறதா? இதற்கு நிதி எங்கிருந்து வருகின்றது?

பதில் : இது முழுக்க முழுக்க மாநகராட்சி நிதியிலிருந்து மாநகராட்சியால் இயக்கப்பட்டு, அதன் கட்டுப்பாட்டில் **மலரும் விழிகள்** எனும் தன்னார்வச் சமூக அமைப்பின் மூலம் நடத்தப்படுகிறது. இதற்கான நிதியைப் பொதுமக்களிடம் இருந்து பெறப்படுவதில்லை. மாநகராட்சி ஒரு நாளைக்கு ஒரு பயனாளிக்கு ரூபாய் 23 வீதம் உணவுக்காக வழங்குகிறது.



காப்பகத்தில் தங்கியுள்ள ஆதரவற்றோர்கள்...

கேள்வி : இங்கு அனுமதிக்கப்படுகிறவர்களுக்கு வயது வரம்பு ஏதேனும் உள்ளதா?

பதில் : ஆதரவற்றவர் எனக் கண்டறியப்படும் 5 வயதிலிருந்து 92 வயது வரை அனுமதிக்கப்படுவர்.



காப்பக நிர்வாகி
திரு. கங்காதரன்

கேள்வி : ஆதரவற்றோர் எனில், அதனை எவ்வாறு நிர்ணயிக்கிறீர்கள்?

பதில் : மாநகரக் காவல் துறை, மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி அலுவலர்கள், தன்னார்வு அமைப்பு, தொண்டு நிறுவனங்கள் மூலம் ஆதரவற்றோர் கண்டறியப்பட்டு, அவர்களால் உறுதி செய்யப்பட்ட பின்னரே இங்கு அனுமதிக்கப்படுவார்கள். மேலும் அந்தப் பகுதி கிராம நிர்வாக அலுவலர் (V.A.O.), மாநகராட்சி மக்கள் பிரதிநிதிகள் (Counsilor) இவர்களால் ஆதரவற்றோர் எனும் உறுதிச்சான்று அளிக்கப்பட்ட பின்னரே, இங்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

வட மாநிலத்தைச் சேர்ந்தவர்கள்தான் இங்கு அதிகமாக வருகிறார்கள். அதிலும் பெரும்பாலும் ரயில் மார்க்கமாக வந்து இறங்கி நகரின் அங்கங்கே திரிகிறார்கள். அவ்வாறு திரிபவர்களை ரயில்வே நிர்வாகம் கண்டறிந்து மாநகரக் காவல் துறையிடம் ஒப்படைக்கிறார்கள்.

கேள்வி : இவர்களுக்கு உணவுகள், உடைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன...?

பதில் : காலை 7.30–க்கு தேநீர், 8.30–க்கு டிபன், மதியம் 12.30–க்கு சாப்பாடு, மாலை 4 மணிக்கு தேநீர், இரவு 8.30–க்கு டிபன் எனத் தினந்தோறும் வழங்கப்படுகின்றன. இவை முழுக்க முழுக்கத் தன்னார்வு அமைப்பின்மூலம் வழங்கப்படுகின்றன. கடந்த 4 ஆண்டுகளாக காலை உணவு **‘உண்உணவு’** எனும் தன்னார்வ அமைப்பின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறே உடைகளும் தன்னார்வ அமைப்பின் மூலம் வருகிறது. தீபாவளிக்கு அனைவருக்கும் புத்தாடைகள் வழங்கப்பட்டன.

கேள்வி : இங்கிருப்பவர்களுக்கு நோய் ஏற்படும் போது, மருத்துவச் சேவை எவ்வாறு செய்யப்படுகிறது? இயற்கையான மரணம் நிகழ்ந்தால் எவ்வாறு அவர்களை அடக்கம் செய்யப்படுகிறது?

பதில் : இங்குச் சர்க்கரை ரத்தப் பரிசோதனை, ரத்த அழுத்தம், எடை பார்க்கும் வசதிகள் உள்ளன. மாநகராட்சி மருத்துவமனை மூலம் அவ்வப்போது வந்து பரிசோதனை செய்ய முழுநேர செவிலியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும் நோய்வாய்ப்படுபவர்களை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, நோய் குணமான பின் விடுவிக்கப்படுவார்கள். எதிர்பாராத விதமாக இறப்பவர்களின் உடல்கள் மாநகராட்சி மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகின்றன.

கேள்வி : கொரோனாக் காலத்தில் எப்படிச் சமாளித்தீர்கள்?

பதில் : கொரோனாவைப் பொறுத்தவரை நம்மைப் போன்றவர்களுக்குக் கடந்த 6 மாதங்களாக ஊரடங்கு. ஆனால் இவர்களைப் பொறுத்தவரை எல்லாக் காலங்களுமே இவர்களுக்கு ஊரடங்குதான். எப்போதுமே இவர்கள் வெளியில் சென்றதில்லை. அவ்வாறு செல்வதும் அவர்களுக்குச் சாத்தியமில்லாதது. ஏனெனில், இவர்களில் பெரும்பான்மையோர் மாற்றுத்திறனாளிகள் மற்றும் மூளைவளர்ச்சிக் குன்றியவர்கள். அதனால் அவர்கள் வெளியே போவதற்கு வாய்ப்பில்லை. அதனால் கொரோனோக் காலத்தில் இவர்களுக்கு எந்தச் சிரமும் இல்லை.

கேள்வி : இங்கு இருப்பவர்களுக்கானப் பொழுது போக்கு...?

பதில் : 15 நாட்களுக்கு ஒரு தடவை மார்கழி மாதப் பஜனை நடத்தப்படுகிறது. கேரம் போர்டு, தொலைக் காட்சி, ஃஎப்.எம் ரேடியோ, தினசரி பத்திரிகைகள் எனப்



காப்பகத்திலுள்ள
சிறுமி ஜெயந்தி



காப்பக நிர்வாகியுடன் 'ஓம் சக்தி' இணையாசிரியர் பெ. சிதம்பரநாதன் மற்றும் அலுவலகப் பணியாளர்கள்

பொழுதுபோக்க நிறைய வசதிகள் உள்ளன. மேலும் இங்கே நூலகமும் உள்ளது. இதில் இதிகாசங்கள், புராணங்கள் உள்ளிட்ட பலதரப்பட்ட நூல்களும் உள்ளன. எழுத்தாளர் ராஜேஷ்குமார் கொடுத்த 300 நாவல்கள் உள்ளன.

கேள்வி : இவர்களுக்குக் கல்வி வசதி கிடைக்கிறதா...?

பதில் : இங்கிருப்பவர்கள் வயதானவர்களாகவும், மாற்றுத் திறனாளிகளாகவும் இருப்பதால், கல்வி பயிலும் நிலைமையில் இல்லை. இங்கு ஜெயந்தி என்கிற 6 வயதுச் சிறுமி உள்ளாள். அந்தச் சிறுமி மாநகராட்சிப் பெண்கள் பள்ளியில் சேர்க்கப்பட்டு, தற்போது படித்து வருகிறாள். இக்காப்பகத்திலுள்ள ஆதரவற்றோர்களின் ஆடைகளை திரு. முத்து என்ற சலவைத் தொழிலாளி, கட்டணம் ஏதுமின்றி இலவசமாகத் தொடர்ந்து பல ஆண்டுகளாகச் சலவை செய்து கொடுத்து வருகின்றார்" என்று கூறினார் திரு. கங்காதரன்.

. இந்தக் காப்பகத்தைத் தற்போது நிர்வகித்து வரும் திரு.கங்காதரன் அவர்கள் கோவை மாநகராட்சியில் சுகாதார ஆய்வாளராகப் பணிபுரிந்த ஓய்வு பெற்றவர். தன்னைப் பற்றி எதுவும் செய்தி வேண்டாம் என்று தெரிவித்தார். இருந்தபோதிலும் அவர் இந்த விடுதியைக் கவனித்து வருவதைப் பற்றி நம்மால் எழுதாமல் இருக்க முடியவில்லை. இயற்கையிலே ஈரமனம் கொண்டவர்.

நமது நாட்டின் ஒவ்வொரு நகரிலும் அரசுக்கென்று சொந்தமான பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் இருப்பது போல் இதுபோன்ற ஆதரவற்றோருக்கான காப்பகங்கள் நாட்டின் எல்லா நகரங்களிலும் கட்டாயமாக இடம்பெற வேண்டும். அவ்வாறு இடம்பெறும் பட்சத்தில் ஆடு, மாடுகளைப் போல் தெருத்தெருவாக அலைகின்ற மனம் நலம் குன்றிய மனிதர்கள் தென்படமாட்டார்கள்.

அரசு குறைந்த நிதியையே ஒதுக்கி இக்காப்பகங்களை உருவாக்கினாலும் கூட, சமுதாயத்தில் கருணை உள்ளம் கொண்ட பல கருணாமூர்த்திகளால் அது காப்பாற்றப்படும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

இதை அந்தந்தப் பஞ்சாயத்துக்கள், நகராட்சிகள், மாநகராட்சிகள் தம் பொறுப்பிலே செயல்படுத்தலாம். இதை அரசு பரிசீலிக்குமா?

இந்தக் காப்பகத்திற்கு உதவிக்கரம் நீட்ட விரும்புபவர்கள் பழங்கள், டவல்கள், போர்வைகள், பெட்ஷீட்கள், தலையணைகள், மாற்றுத் திறனாளிகளுக்கான நாற்காலிகள், டெட்டால், ஃபினாயில், கேரம்போர்டு எனத் தங்களால் இயன்ற பொருள்களை உடனடியாக அனுப்பலாம்.

தொடர்புக்கு : **திரு.கங்காதரன்,**
செல் : 8883340288, ஆதரவற்றோருக்கான தங்கும் மையம், ஆரோக்கியசாமி ரோடு (மேற்கு), ஆர்.எஸ்.புரம், கோவை - 641 002.

– நேர்காணல் :
இரா. பொன்னாண்டான்

ஆயுர்வேத மருத்துவர்களை எதிர்க்கும் அலோபதி மருத்துவர்கள்!

ஆயுர்வேத மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்கான பயிற்சிகளை அளிக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது மிகமிகச் சரியே. மருத்துவப் படிப்பு என்றாலே மனிதனின் உடலைப் பற்றித் தெரிந்து கொண்டும் புரிந்து கொண்டும் படிப்பது. இதன் பெயர்தான் மருத்துவப் படிப்பு. இதில் ஆயுர்வேதம், அலோபதி என்ற வேறுபாடுகள் இல்லை. ஆயுர்வேத மருத்துவர்களுக்கும் அறுவைச் சிகிச்சை செய்வதற்குப் பயிற்சி கொடுத்தால், அவர்களும் அறுவைச் சிகிச்சை செய்யலாம்.

– ***உஷாமுத்துராமன்,*** திருநகர்.

அலோபதி மருத்துவர்களோ, ஆயுர்வேத மருத்துவர்களோ, சித்த, அலோபதி மருத்துவர்கள் யாரும் கல்லூரியில் சேர்ந்தவுடனே மருத்துவர்களாகவோ, அறுவைச் சிகிச்சை நிபுணர்களாகவோ ஆவதில்லை. முறைப்படியான செயல்முறைப் பயிற்சியின் மூலம் தான் அலோபதி மருத்துவர்கள் அறுவைச் சிகிச்சை செய்யத் தெரிந்து கொள்கிறார்கள். அக்காலத்தில் சித்த மருத்துவர்களே கட்டிகளை அறுத்து மருத்துவம் செய்திருக்கிறார்கள்.

இக்காலத்தில் எத்தனையோ நவீனக் கருவிகள் வந்தபின்பு, அதனை இயக்க அலோபதி மருத்துவர்கள் பயிற்சி எடுத்துக் கொள்வதைப் போல, ஆயுர்வேத, சித்த மருத்துவப் படிப்பிலும் அறுவைச் சிகிச்சையை ஒரு பாடமாகச் சேர்த்துக் கற்பித்தால், அவர்களும் அறுவைச் சிகிச்சையை மேற்கொள்ள முடியும். மிக எளிதில் கிராமப்புற மக்களுக்கும் உயர்தரமான மருத்துவமும் கிடைக்கும்.

– ***புலவர் கருமலைத்தமிழாழன்,*** ஒசூர்.

முன்னோர்கள் காலத்தில் நாட்டு மருந்துகள், மூலிகைச்சாறுகள் மூலம் பாட்டி வைத்தியம் என்ற பெயரில் வைத்தியம் தலைசிறந்து விளங்கியது எனலாம். சித்தர்கள் சித்த மருத்துவத்தையே கையாண்டு தலைசிறந்து விளங்கினார்கள். கிராமப் புறங்களில் அலோபதி மருத்துவர்கள் தங்கியிருந்து வைத்தியம் பார்ப்பதில்லை. இது மிகவும் வருத்தமளிக்கும் செயல். ஆயுர்வேத முதுநிலை மருத்துவர்களுக்குப் பயிற்சி அளித்தும் உரிய தேர்வுகள் எழுத வைத்தும், அதன்மூலம் அறுவைச் சிகிச்சை செய்ய அனுமதிக்கலாம். நோயை ஒழிக்கச் சிகிச்சைதான் மிக முக்கியம். இதில் ஆயுர்வேதம், அலோபதியெனப் பாகுபாடுகளை ஏற்படுத்துவது நல்லது அல்ல.

– ***லிங்கம் சின்னசாமி,*** தாராபுரம்.

ஆயுர்வேத மருத்துவர்களை அலோபதி மருத்துவர்கள் எதிர்க்க வேண்டிய அவசியம் இல்லை. இரண்டு மருத்துவமுமே ஏற்புடையதேயானாலும், முந்தியது ஆயுர்வேத மருத்துவம் ஆகும். பிந்திய அலோபதி மருத்துவம் வீரியம் மிக்கது. அறுவைச் சிகிச்சையில் அலோபதியின் அரியதன்மை ஆயுர்வேத மருத்துவத்தில் இல்லையென்றாலும், மெல்ல மெல்லப் புதிய யுத்தியைக் கற்பித்து உதவுவது மனித நேயமாகும். இரு மருத்துவமும் கைகோர்த்துச் செயல்படுவது ஆரோக்கியமானதாகும்.

– ***தெ.முருகசாமி,*** புதுச்சேரி.

ஆயுர்வேத மருத்துவர்களை அலோபதி மருத்துவர்கள் எதிர்க்கிறார்கள். இது முறையல்ல. மக்களுக்கு நன்மை செய்ய எந்த முறையில் இருந்தாலும் நோய் குணமடைந்தால் சரிதான். இவர்களுக்குப் பாதிப்பு வந்துவிடும் என இவர்கள் போராடுகிறார்கள். இது சரியல்ல.

– **தங்கவேல் பழனிச்சாமி,**
பெரியகள்ளி வலசு.

ஆயுர்வேத முதுகலைப் படிப்புப் படித்து முடித்துத் தொழிலில் ஈடுபட்டிருப்போர், அறுவைச் சிகிச்சைப் படிப்பைப் பகுதி நேரமாகவோ, முழு நேரமாகவோ படித்துத் தேர்வை எழுதி வெற்றி பெறும்பட்சத்தில், அவர்களையும் தகுதிவாய்ந்தவர்களாக ஏற்றுக் கொள்வதே ஏற்புடையதாக இருக்கும். பாடத் திட்டத்தில் அறுவைச் சிகிச்சையையும் சேர்த்துவிடும் பட்சத்தில் நிலைமை சீரடைந்துவிடும். மருத்துவர்கள் பற்றாக்குறையை நீக்குவதற்கும், கிராமப்புறங்களில் பணியாற்ற அதிக அளவில் மருத்துவர்கள் முன் வருவதற்கும் மத்திய அரசின் இந்த அறிவிப்பு துணைபுரியும் என்று உறுதியாக நம்பலாம்.

– **மேலை. தமிழ்க்குமரன்,**
முத்தரசநல்லூர்.

அலோபதி சிகிச்சை முறையிலேயே 50000 பேர், லட்சம் பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட எம்.எஸ். படித்த மருத்துவர்களைத் தேடிப் பிடித்து அறுவைச் சிகிச்சை செய்து வரும் இக்காலத்தில், இதுவரை அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளாத, அம்முறைப் பற்றி எவ்வித அனுபவமில்லாத, அடிப்படை அறிவுகூட இல்லாத ஆயுர்வேத மருத்துவர்களுக்கு அறுவைச் சிகிச்சையளிக்க அனுமதி அளித்திருப்பது நன்றன்று. வேண்டுமானால், இனிமேல் அலோபதி மருத்துவப் படிப்பில் பயின்றுவரும் எம்.எஸ். மருத்துவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் பாடப் பிரிவைப் புகுத்திச் சிகிச்சையளிக்கும் முறையைக் கற்பித்து அவர்களுக்கு மட்டும் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

– **உ.மு.ந. ராசன் கலாமணி,**
கோபிசெட்டிபாளையம்.

அலோபதி மருத்துவர்களும் ஐந்தரை ஆண்டுப் பட்டப்படிப்புப் படிக்கிறார்கள். அதேபோல் ஆயுர்வேத மருத்துவர்களும் ஐந்தரை ஆண்டுப் பட்டப்படிப்புத்தான் படிக்கிறார்கள். அலோபதியிலும் பட்டமேற்படிப்புப் படிக்கிறார்கள். இதிலும் சித்தா, ஆயுர்வேதம், யுனானி, ஹோமியோபதி என மருத்துவர்களும் பட்டமேற்படிப்புப் படித்து வருகிறார்கள். இதில் இரண்டு மருத்துவத்திற்கும் எந்தவிதக் கால வித்தியாசம் காட்டுவதில்லை. சாதாரண காய்ச்சல், வலிகளுக்கு ஊசிப் போட முதலில் இவர்களுக்கு அரசு அனுமதி வழங்கினால்தான் நன்றாக இருக்கும்.

– **டி. அரிதாஸ்,** தெள்ளார்.

ஒரு துறையில் அங்கீகாரம் பெற வேண்டுமானால் படிப்பு, பயிற்சி தேவை. அறுவைச் சிகிச்சைக்குரிய இவ்விரு தகுதிகளைப் பெற்ற ஆயுர்வேத மருத்துவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்வதற்கு அனுமதி அளிக்கலாம். தங்களுக்குப் போட்டியாக வந்து விடுவார்கள், வருமானம் குறையும் என்ற குறுகிய மனப்பான்மையின் காரணமாக ஆயுர்வேத மருத்துவர்களை அனுமதிக்கக் கூடாது என்று அலோபதி மருத்துவர்கள் கூறுவதில் பொருளில்லை. நியாயமுமில்லை.

– **மு. கணபதி,** பெருந்துறை.

இந்தியாவின் பாரம்பரிய சிகிச்சை முறையே ஆயுர்வேதம். நவீன மருத்துவத்தில் தீராத பல நோய்கள் ஆயுர்வேதத்தால் தீர்ந்திருக்கின்றன. அலோபதி மருத்துவர்கள் எதிர்ப்பதற்குக் காரணம், தங்களின் வணிகம் குறைந்துவிடுமோ என்ற அச்சமே! ஆயுர்வேத மருத்துவர்களுக்கு உரிய பயிற்சியும்,

முனைவர் செ.சு. பழனிச்சாமி மறைவு!



பேராசிரியர் முனைவர் செ.சு. பழனிச்சாமி சென்ற மாதம் 29.12.2020–இல் காலமாகிவிட்டார். அவருடைய நினைவுகள் போற்றுதலுக்குரியவை. அவர் முனைவர் பட்டம் பெறுவதற்கு ஆய்வுசெய்த புலம், சிறுகதை மன்னன் ஜெயகாந்தன் கதைகள் பற்றியதாகும். இவருடைய சொந்த ஊர் தாராபுரம் – செம்மம்பாளையம் கிராமம்.

நவீன எழுத்தாளரை முனைவர் பட்டத்துக்கு ஆய்வுசெய்ததே ஒரு துணிச்சலான முயற்சியாகும். சங்க இலக்கியத்தில் கும்மி, சிலப்பதிகாரத்தில் அம்மி, திருக்குறளில் முற்றுப்புள்ளிகள் என வெறும் கற்றுச் சொல்லிகள் மட்டுமே ஆய்வுத் தளத்தில் காணப்பட்ட நேரத்தில், ஜெ.கே.–யைப் பற்றி இவர் செய்த ஆய்வு துணிச்சல் மிக்கது.

அவர் 'ஓம் சக்தி'யின் வாசகர். அருட்செல்வரை விமர்சன முறையில் கவர்ந்தவர். கோவை கம்பன் க.கு. கோதண்டராமக் கவுண்டரின் நெஞ்சம் நிறைந்தவர். தன்னடக்கம், நன்னெறி, கண்ணோட்டம் முதலிய அருங்குணங்களின் பெட்டகம். அவர் மறைவுக்கு வருந்துகிறோம். அவருடைய ஆன்ம சாந்திக்கு அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரைப் பிரார்த்திக்கிறோம்.

– இ.ஆர்.

அறுவைச் சிகிச்சை செய்வதற்கான சூழலையும் அளித்து, சிறந்த ஆயுர்வேத மருத்துவர்களை உருவாக்குவது காலத்தின் கட்டாயம்.

– ***நவீன்குமார்,*** நடுவிக்கோட்டை.

அனைத்து உயிரினங்களின் பிணிகளைப் போக்கவும், வாழ்நாளைப் பெருக்கவும் ஆதாரமாக ஆயுர்வேதம் எனும் சாத்திரம் ஆதியில் பிரம்ம தேவரால் அருளப்பட்டு தட்சப்பிரஜாபதிக்கு உபதேசிக்கப்பட்டதென்று 'சுஸ்ருத சம்ஹிதை' முதலிய பழைய நூல்கள் தெரிவிக்கின்றன. சத்திர சிகிச்சையெனும் அறுவைச் சிகிச்சைக் கலையைத் தன்வந்திரி, ஆயுர்வேதத்திலிருந்து கற்றுத் தனது சீடர்களான அரச குலத்தவருக்குக் கற்றுக் கொடுத்தார். 'சாரங்கதரா சம்ஹிதை' என்ற ஆயுர்வேத நூல், ஆதியோடந்தமாக ஆயுர்வேத வரலாற்றைக் கூறுகிறது. இதைப் பார்த்துத் தான் மத்திய அரசு, ஆயுர்வேத முதுகலை மருத்துவர்களும் சர்ஜரி செய்யலாம் என்கிறது. அலோபதி டாக்டர்கள் இதை எதிர்ப்பது அர்த்தமற்றது.

– ***இரா.கல்யாணசுந்தரம்,*** மதுரை.

நம் நாட்டில் சித்தாவும், ஆயுர்வேதமும் மிகத் தொன்மையான மருத்துவமுறைகளாகும். அலோபதியால் கட்டுப்படாத சிக்கன் குனியாவுக்கு நிலவேம்புக் குடிநீர்தான் மிகச்சிறந்த மாற்றாக இருந்தது. வியாதி வந்தால் அலோபதி மருத்துவத்தில் உடனடி நிவாரணம் கிடைக்கும். ஆனால், திரும்பவும் வராது என்று உறுதிகூற இயலாது. ஆனால், ஆயுர்வேத மருத்துவத்தில் வியாதி மெதுவாகத்தான் குணமடையும். ஆனால் நிரந்தரமான குணம் கிடைக்கும். அலோபதி டாக்டர்களின் எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாமல், பிற சர்ஜரிகளைச் செய்ய அனுமதி அளித்ததோடு, தகுந்த பயிற்சியளித்து இருதய அறுவைச் சிகிச்சை செய்யவும் ஆயுர்வேத முதுகலை மாணவர்களுக்கு அனுமதி அளித்தால், மருத்துவ உலகில் மிகப்பெரிய மாற்றம் உண்டாகும்.

– ***பே. சண்முகம்,*** செங்கோட்டை.

நீண்ட நாள் அனுபவமுள்ள நர்சுகளை டாக்டராக்கலாம் என்கிறீர்கள். நோயைக் கண்டுபிடித்துச் சிகிச்சை அளிப்பவர்கள் டாக்டர்கள். அவர்களுக்கு உதவி செய்பவர்கள் நர்சுகள். நர்சுகளை டாக்டர் நிலைக்கு உயர்த்துவது ஏற்புடையதல்ல.

– ***மா. வன்னிக்காளை,*** சத்திரப்பட்டி.

‘தமிழ்த் தாத்தா’ சொன்னது பொய்யா?


மகாவித்துவான்


உ.வே.சா.

எட்டயபுரம் எல்லோருக்கும் தெரியும். பாரதியின் ஊர். பாரதியார் வசித்த தெருவுக்கு அடுத்தத் தெருவில்தான் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை வசித்து வந்தார். தமிழ்க் கடல் அவர். அவரிடத்தில் தமிழ் படிக்க ஒரு மாணவன் அவர் வீட்டைத் தேடிவந்து வாசலில் நின்று கொண்டிருக்கிறான்.

உள்ளே இருந்து குரல் வருகிறது. ‘யாரது?’ இது மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் குரல்.

பையனிடமிருந்து பதில் போகிறது, ‘ஐயா, தங்களிடம் தமிழ் படிப்பதற்காக வந்திருக்கிறேன். அருள்கூர்ந்து என்னை ஆசிர்வதிக்க வேண்டுகிறேன்.’

‘அப்படியா... இப்படியும் தமிழ் படிக்க ஆர்வமுள்ள பையனா...? வா... வா... உள்ளே வா...’ இது மீனாட்சி சுந்தரம் பிள்ளையின் வரவேற்புக் குரல்.

உள்ளே சென்ற பையனிடம், ‘தமிழ் படிக்க வந்த தம்பி, உன் பெயர் என்னப்பா...?’ வினவியவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை.

பையன் பதில் சொல்கிறான், ‘வேங்கடராமன்.’

பையன் பதில் சொன்ன நொடியில், மீனாட்சிசுந்தரம் பிள்ளை தனது இரண்டு காதுகளையும் மூடிக்கொண்டு ‘அபசாரம்... அபசாரம்...’ என்று கூறிக் கொண்டே, ‘என்முன் நிற்காதே ஓடிப் போ...!’ என்று உரக்கச் சத்தமிடுகிறார். பயந்துபோன பையன் வெளியே ஓடி வருகிறான்.

சில மாதங்கள் கழித்து, ஒரு பெரியவரோடு ஒரு பையன் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் வீட்டு வாசல்படியில் நிற்கிறார்கள்.

உள்ளே இருந்து அதே குரல், ‘யாரது...?’

நிற்கிற பெரியவர் பேசுகிறார், ‘ஐயா, என் பையன் உங்களிடம் தமிழ் படிக்க ஆசைப்படுகிறான். அழைத்து வந்திருக்கிறேன். அருள்கூற வேண்டும்.’

மீனாட்சிசுந்தரம் பிள்ளை பதில் தருகிறார். ‘அருமை...! அருமை...!’ என்று சொல்லிக் கொண்டே வீட்டுக் குள்ளிருந்து அவர் வெளியே வருகிறார். பையனைப் பார்க்கிறார். இவருக்குப் பழைய நினைவில்லை.

நெற்றி நிறைய விபூதி. கழுத்தில் ருத்திராட்சம் என்று சிவக்கொழுந் தாகப் பையன் நிற்கிறான்.

மீனாட்சிசுந்தரம் பிள்ளை பையனிடத்தில், ‘உன் பெயரென்ன?’ என்று கேட்கிறார்.

பையன் சொல்கிறான், ‘சாமிநாதன்.’ உடனே மீனாட்சிசுந்தரம் பிள்ளை, ‘என்ன புண்ணியம் செய்தன என் காதுகள்; சாமிநாதன் என்ற திருநாமத்தைக் கேட்க...’ என்று சொல்லிவிட்டு, ‘வா... உள்ளே வா... உடன் தங்கு... தமிழைப் படி. பாடங்கள் முடிக்கும்வரை இங்கேயே தங்கிவிடு’ என்று அந்தப் பையனை ஆரத்தழுவி அழைத்துச் செல்கிறார்.

அந்த சாமிநாதன்தான், ஏடுகளைத் தேடிப் பனையோலைப் பயணம் போன **‘தமிழ்த் தாத்தா’ உ.வே. சாமிநாதய்யர்.** ●

டெல்லி விவசாயப் போராட்ட விநோதக் காட்சிகள்!



டெல்லி நுழைவுச் சாலையில் போராடும் பஞ்சாப் விவசாயிகள் குஷியடைவதற்காக விளையாடும் மல்யுத்தம்.



கல்லூரி மைதானத்தில் அல்ல இந்த வாலிபால் போட்டி, விவசாயப் போராட்டக் களத்தில்.

கூடாகச் கடச்கட விவசாய சகோதரிகள் போராட்டக் களத்தில் தயாரித்துத் தரும் சப்பாத்திகள்...




உங்கள் மனம் மகிழும்
வாகனத்தை தேர்ந்தெடுப்பீர்
FORCE
MOTORS
TRAX CRUISER
புதிய
TRUMP 40
3 சிலிண்டர் MERCEDES
Derived Engine மற்றும் Gear Box
4.4.4
FORCE
GURKHA E.O.V.
BUILT FOR WAR
Traveller
SIMPLY WORLD CLASS
Luxury
கல்வி மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு
ஏற்றதொரு வாகனம்
Available in 9 to 20 Seats
விவசாயிகளின்
செல்வ வெற்றிக்கு
BALWAN
400, 450 & 500
FORCE
MAN
MAN FORCE TRUCKS Pvt. Ltd.
MAN TRUCKS
The New Force in India
NM நா. மகாலிங்கம் & கம்பெனி
68, Dr. நஞ்சப்பா ரோடு, கோவை–18. ✆ 2239800, 2239808
செல் : 98438-84900, 98438 84920 பொள்ளாச்சி : ✆ 224096, 98438 84931
திருப்பூர் : ✆ 2478665, 98438-84902 ஈரோடு : 98438 84940

வாசகர் கடிதங்கள்

2021 ஜனவரி 'ஓம் சக்தி' இதழின் முகப்பு அட்டையில் ஞானச்சுடரான சுவாமி விவேகானந்தரின் பஞ்சமுகத் தரிசனம் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது.

– **தெ.முருகசாமி,** புதுச்சேரி.

'சுரங்கம்' பகுதியில் வெளியான 'செக்யுலரிசத்திற்கு ஒரு திருத்தம் தேவை' எனும் அருட்செல்வரின் அறிவார்ந்த கட்டுரை சிந்திக்க வைத்தது. சமய சார்பற்ற என்பதை சமய சமத்துவம் என்று தனது கட்டுரையில் நன்கு விளக்கம் அளித்திருந்தார்.

– **தி.வெண்ணிலா,**
பொன்.புதுப்பட்டி.

மரபின் மைந்தன் முத்தையாவின் கட்டுரையில் ஆன்மீக மணம் கமழ்கிறது. பாலரிஷி விஸ்வசிராஷினி தேவி பற்றிய செய்திகள் சிலிர்ப்புத் தந்தன.

– **சீத்தலைச்சாத்தன்,** திருப்பத்தூர்.

கார்ட்டூனிஸ்ட் மதியின் கைவண்ணத்தில் அமைந்த 2021 ஜனவரி 'ஓம் சக்தி' இதழின் அட்டைப்படம் அருமை. சுவாமி விவேகானந்தரின் பன்முகத் தரிசனத்தை அதில் காண முடிந்தது.

– **முத்து வள்ளிமயில்,**
முத்தரசநல்லூர்.

'தீவினை மாற்றும் திருமந்திரத் தொடர்' ஆன்மீக ஆர்வலர்களுக்கு அரிய வரப்பிரசாதம். இதழுக்கு இதழ் புதிய கருத்துக்களை வழங்கும் சொ.சொ.மீ. சுந்தரம் போற்றுதலுக்குரியவர்.

– **ஆர்.கே. லிங்கேசன்,**
மேலகிருஷ்ணன்புதூர்.

சுவாமி விவேகானந்தர் பற்றியும், காந்திஜி பற்றியும் மிக ஆழமான கருத்துக்களை, அரிய நிகழ்வுகளை அனுபவப் பதிவுகளாக நன்கு விளக்கியிருந்தார் சுவாமி விமூர்த்தானந்தர்.

– **இரா.கல்யாண சுந்தரம்,** மதுரை.

பேரூர் சி. இரவியின் 'தை மகளே வருக!' கவிதை சொல்வளம், கருத்து வளத்தோடு படிப்போரைப் பூரிக்கச் செய்யும் வண்ணம் அமைந்திருந்தது.

– **மு. இலக்குமணன்,** திருச்சி.

இன்னா செய்தார்க்கும் இனியவே செய்கின்ற பண்பின் உயர்வைக் கதையாக்கிச் சமூகத்திற்குப் பாடமாக்கியது ஸ்ரீதுரையின் 'வேலைக்காரியின் கணவன்' சிறுகதை.

– **தி. வெற்றிச்செல்வன்,**
மேலைச்சிவபுரி.

விமலாரமணி அவர்களின் 'பூர்ணிமா' சிறுகதை மனத்தை நெகிழ வைத்தது. பூர்ணிமா என்று பெயர் வைக்கச் சொல்லப்பட்ட கடைசி விளக்கம் அருமை.

– **உஷா முத்துராமன்,** திருநகர்.

'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' கவிதையில் சகோதரி ஜோதிபெருமாள் கையாண்டிருந்த உவமைகள் மிகச் சிறப்பு.

– **தஞ்சை கந்தமாறன்,** சென்னை.

கார்ட்டூனிஸ்ட் மதியின் 'பேலூர் பயணம்' எனும் பயணக் கட்டுரை அந்த இடங்களுக்கு நம்மை நேரில் அழைத்துச் சென்று காண்பிப்பது போல் இருந்தது. பாராட்டுக்கள்!

– **ஏ.பாஸ்கர்,** சேலம்.

இரா. பொன்னாண்டானின் 'உழவனே நம் தெய்வம்' கவிதை நெஞ்சில் நிலைத்து நிற்கும் திறத்தோடு இருந்தது. மொத்தத்தில் ஜனவரி இதழில் வெளியான மூன்று கவிதைகளுமே முத்தான, சத்தான கவிதைகளாக இருந்தன.


– **சி.பழனிச்சாமி,** சத்தியமங்கலம்.

அற்ப ஆயுசு... ஆனால் அறிவாளி...!

'மிருகண்டு முனிவர் என்பவருக்குப் புத்திரபாக்கியம் இல்லை. மிகவும் வருந்தினார். சிவபெருமானிடத்தில் குழந்தை வரம் பெறத் தவமிருந்தார். அவருடைய தவத்தைக் கண்டு சிவபெருமான் மனமிரங்கி, அவர்முன் தோன்றினார்.

'என்ன வேண்டும்...?' என்று கேட்க, அதற்கு முனிவர் 'எனக்குப் புத்திர பாக்கியம் தர வேண்டும்' என்றார்.

அப்போது வரம்தரத் தயாரான சிவபெருமான், 'உனக்கு ஒரு நல்ல



புத்திரனைத் தருகிறேன். நூறு வயதுவரை ஆயுள் உள்ள புத்திரன் வேண்டுமா?, பதினாறு வயதுவரை மட்டுமே ஆயுள் உள்ள புத்திரன் வேண்டுமா?, நூறு வயதுவரை உள்ள புத்திரன் வேண்டுமானால், அவன் ஊனமுற்றவனாகவும், ஞானமில்லாதவனாகவும் இருப்பான். ஆனால் நூறு வயதுவரை வாழ்வான். பதினாறு வயதுவரை ஆயுள் உள்ள புத்திரன் வேண்டுமானால், அவன் 'ஞானச்சுடர்' வீசுபவனாக இருப்பான். ஆனால், அவன் அற்ப ஆயுளில் இறந்துவிடுவான். இந்த இருவரில் உனக்கு எந்தப் புத்திரன் வேண்டும்?' என்று சிவபெருமான் கேட்டார்.

அதற்கு மிருகண்டு முனிவர், 'நூறு வயதுவரை வாழும் முட்டாள் புத்திரன் வேண்டாம்' என்று கூறிவிட்டு, பதினாறு வயதுவரை உள்ள அறிவுள்ள புத்திரனைக் கேட்டார். அந்தப் பதினாறு வயது இளைஞனின் பெயர்தான் மார்க்கண்டேயன்.

மார்க்கண்டேயன் அறிவாளியாய் இருந்ததற்கு அடையாளம் : பதினாறு வயதில் இவனை எமதர்மன் துரத்திக் கொண்டு வருகிறான். ஏனெனில், இவன் கணக்கு முடிந்தது என்று எமதர்மனின் காரியதரிசி சித்திரகுப்தன் ஓலை அனுப்பிவிட்டான். அதனால் மார்க்கண்டேயனைத் துரத்தி வந்த எமன், தன் கையிலுள்ள பாசக்கயிறை வீசுகிறான். அதற்குள் மார்க்கண்டேயன் அங்குள்ள கோயிலிலிருந்த சிவலிங்கத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டான்.

எமதர்மனால் வீசப்பட்ட பாசக் கயிறை இழுத்தால், மார்க்கண்டேயனுக்குக் கழுத்து இறுக்கப்பட்டு எமனிடத்தில் வந்து சேர்ந்திருக்க வேண்டும். ஆனால், எமனோ எவ்வளவு இழுத்தாலும் இழுக்க முடியவில்லை.

ஏனெனில், அந்தப் பாசக்கயிறு லிங்கத்தின் மீதும், மார்க்கண்டேயன் மீதும் விழுந்திருக்கிறது. இவ்வாறு லிங்கத்தைக் கட்டிப்பிடித்துக் கொண்டால், மரணத்தைத் தவிர்த்துவிட முடியும் என்ற ஞானம் மார்க்கண்டேயனுக்கு உதித்தது. அதனால் மரணத்திலிருந்து தப்பித்தான். பதினாறு வயது கடந்தும் அவன் மரணத்தைத் தழுவவில்லை. ●

சென்ற இதழ் தொடர்ச்சி


மார்க்சும் ஏங்கெல்சும் ஆயுதம் ஏந்திய பலாத்காரப் புரட்சிவாதிகள் என்றுதான் பரவலான புரிதல் இருந்து வருகிறது. சென்ற இதழிலும் இந்த இதழிலும் வெளியாகியுள்ள கட்டுரைகள் மார்க்சும் ஏங்கெல்சும் ஜனநாயகத்தை, தேர்தலை, வாக்குரிமையை நேசித்தவர்களே தவிர, கலவரங்களையோ, கலகங்களையோ செய்து ஆட்சி அதிகாரத்தைப் பிடிக்கத் திட்டமிட்டவர்கள் அல்ல என்பதை இக்கட்டுரைகள் விளக்குகின்றன.

– இ.ஆர்.

மார்க்சும் ஏங்கெல்சும் ஜனநாயகவாதிகளே!

சமதர்மச் சிந்தனை நூல்கள் பறிமுதல் செய்யப்பட்டதை எதிர்த்துத் தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்தனர். அதனால் அப்பறிமுதல் சட்டம் திரும்பப் பெறப்பட்டது. இது 1890–இல் ஜெர்மனியில் நடந்தது.

1881–இல் ஜெர்மன் சமதர்ம ஜனநாயகக் கட்சி (Social Democratic Party) பின்னடைவுகளைச் சந்தித்தது. இந்தப் பறிமுதல் சட்டத்தின் காரணமாக அக்கட்சி வளர்ச்சிமுகம் காட்டியது.



காரல் மார்க்ஸ்

1884–இல் அதாவது மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, அக்கட்சி பெற்ற வாக்குகளின் வளர்ச்சி 5 லட்சத்து 50 ஆயிரமாகும். 1887–இல் அந்த வாக்கு 7 லட்சத்து 63 ஆயிரமாக அதிகரித்தது. 1890–இல் 14 லட்சத்து 27 ஆயிரமாக அதிகரித்தது.


ஏங்கெல்ஸ் உயிரோடு இருந்த காலத்திலேயே இந்த வளர்ச்சி 17 லட்சத்து 87 ஆயிரம் என அதிகரித்தது. ஏறக்குறைய ஜெர்மன் தேசத்தின் கால்பங்கு வாக்காளர்கள் ஜெர்மன் சமதர்ம ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவளித்தனர். அதனால், ஜெர்மனியில் அக்கட்சி வலுவான கட்சியாக மாறியது. 1912–இல் அந்த வாக்கு விகிதம் 27.2 சதவிகிதத்திலிருந்து 34.8 சதவிகிதமாக அதிகரித்தது.

ஜெர்மனியிலேயே மிகப்பெரிய கட்சியாக சமதர்ம ஜனநாயகக் கட்சி உருவாகியது. அக்கட்சியின் சார்பில் நூற்றுக்கும் அதிகமான தினசரிப் பத்திரிகைகள் வெளிவந்தன.

ஜெர்மன் சமதர்ம ஜனநாயகக் கட்சியின் தேர்தல் வெற்றிகள் மார்க்சிய சித்தாந்தத்தின் மதிப்பை அதிகரித்தன. அதுமட்டுமல்ல. மார்க்சியம் தேர்தல் – ஜனநாயகத்தில் அக்கறை கொண்ட கட்சி என்பதையும் அது காட்டியது.

ஜெர்மன் தொழிலாளர்கள் இவ்வாறு தேர்தலில் வாக்களிப்பதை ஏங்கெல்ஸ் பாராட்டினார். தொழிலாளர்கள் தேர்தலில் பங்கேற்பதைத் தொழிலாளி வர்க்கத்தின் புதுவிதமான போராட்டமாகக் கருதினார். தொழிலாளி வர்க்கம், சட்டமன்றத்திற்கான தேர்தலில் மாநில அரசின் நிறுவனங்களை எதிர்த்துத் தங்கள் வாக்குரிமையை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்துவதற்கான புதிய வாய்ப்பாக இது அமைந்தது.

நகராட்சிகள், தொழில் நீதிமன்றங்கள் இவையெல்லாம் அரசு நிறுவனங்கள். தொழிலாளி வர்க்கம் இவற்றிற்கான தேர்தலில்தான் கலந்து கொண்டது. தேர்தல் மூலமாகவே ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்குத் தொழிலாளி வர்க்கம் முன்வந்தது என்றே கூறலாம். அதனால் முதலாளி வர்க்கமும், அரசும் அச்சமடையத் தொடங்கின.



ஏனெனில், தொழிலாளி வர்க்கம் பொதுவாக சட்ட விரோதமான காரியங்களில் ஈடுபட்டுக் கலகம் செய்துதான் ஆட்சியைக் கைப்பற்றும். இந்த வழக்கத்திற்கு மாறாக, சட்டத்திற்கு உட்பட்டு, தேர்தல்கள் மூலமாகவே தொழிலாளி வர்க்கம் ஆட்சியைக் கைப்பற்றுகிற முயற்சியைக் கண்டு, முதலாளி வர்க்கம் அச்சமடையத் தொடங்கியது.

தெருவில் இறங்கிப் பகிரங்கமாகக் கலகம் செய்வதைக் கைவிடுமாறு ஏங்கெல்ஸ் கூறினார். ஆயுதம் ஏந்திய போராட்டம் அவசியமில்லை என்றார். முன்பு எப்போதையும்விட தற்போது ஏற்பட்டுள்ள சாதகமான வாய்ப்புகள் மிக அதிகமாக உள்ளன என்றார். இராணுவம் இப்போது நவீனமாகியுள்ளது. அதன் எண்ணிக்கை பலமும் அதிகமாகியுள்ளது. அடக்குமுறை சக்திகள் இவ்வாறு பலமாகியுள்ளன.

அதனால் புரட்சி செய்வது பைத்தியக்காரத்தனமாகிவிட்டது என்றார் ஏங்கெல்ஸ். அபூர்வமாகத்தான் இனிமேல் புரட்சி நடக்கும். அந்தப் புரட்சியும் தொழிலாளி வர்க்கத்திற்கும் உதவாது. அப்புரட்சி, தொழிலாளர்களை இல்லாமலேயே செய்துவிடும் என எச்சரிக்கையும் செய்தார்.

"எங்கே துப்பாக்கிகள் முழங்குகின்றனவோ, எங்கே வாள்கள் சுழற்றப்படுகின்றனவோ, அங்குப் போய் சிக்கிக் கொள்வதற்கு நாம் முட்டாள்கள் அல்ல" என்றார். அது எதிரிகளின் இடம். நம்மைப் பழிவாங்குவதற்கான எதிரிகள் காத்திருக்கும் இடம், அந்த இடம். அங்கு நாம் எதற்காகப் போக வேண்டும் என்றார்.

"ஜெர்மன் சமதர்ம ஜனநாயகக் கட்சி ஏகமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. கட்டுப்பாட்டோடு வளர்ந்து கொண்டிருக்கிறது. பலமாக வளர்ந்து கொண்டிருக்கிறது. இந்த வளர்ச்சியே எதிரிகளை வெல்லக் கூடியதாகும்" என்று ஏங்கெல்ஸ் குறிப்பிட்டார்.

தொழிலாளி வர்க்கத்தின் குரலாக இந்தக் கட்சி ஒன்றுதான் இருக்கின்றது. அதற்கு ஒரு பெரிய பணி காத்துக் கொண்டிருக்கிறது. அந்தப் பணி, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றுகிற பணியாகும். தேர்தல் வாக்குகள் மூலமாக, ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற முடியும். வாக்காளர்கள்தான் இனி எதிரிகளுக்கு அதிர்ச்சி ஊட்டக்கூடிய படையாகும் (Shock Force) என்றார்.

அதைப்பற்றி விளக்கிப் பேசுகையில், ஜெர்மனியில் 20 லட்சம் வாக்காளர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் வாக்குப் பெட்டிகளில் தங்கள் ஆதரவைத் தங்கள் கட்சிக்குத் தெரிவிப்பார்கள். அவர்களுக்குப் பின்னால் இளைஞர்களும், யுவதிகளும் அவர்களுக்குப் பலமாக நிற்கிறார்கள். அவர்களுக்கு வாக்களிப்பதற்கான வயதில்லை. அதனால்தான் அப்படி நிற்கிறார்கள்.


இந்த 20 லட்சம் வாக்காளர்கள்தான் எதிரிகளை அச்சுறுத்தக்கூடிய ராணுவம். இவர்களை 'சர்வதேசத் தொழிலாளர் ராணுவம்' (International Proletarian Army) எனலாம். இந்த 20 லட்சம் வாக்காளர்களும் தேசத்தின் வாக்காளர்களில் நான்கில் ஒரு பகுதியினர்.

ஜெர்மன் பாராளுமன்றத்திற்கும், சட்டமன்றத்திற்கும் நடந்த தேர்தலில் கிடைத்த முடிவுகள் ஜெர்மன் சமதர்ம ஜனநாயகக் கட்சி சிறப்பாக வளர்ந்து கொண்டிருப்பதைக் காட்டுகின்றன. எல்லா எதிர்ப்புகளையும் கடந்து அது வளர்ந்து கொண்டிருக்கிறது. அரசு செய்த தடைகள் அனைத்தையும் கடந்து அது வளர்ந்து கொண்டிருக்கிறது. இவ்வாறு அந்த வளர்ச்சி தொடருமானால், இந்த நூற்றாண்டின் இறுதிக்குள் இந்தத் தேசத்தின் மத்தியதர வர்க்கத்தினரையும் குட்டி பூர்ஷ்வாக்களையும், குறுவிவசாயிகளையும் ஜனநாயகக் கட்சி தன் பக்கத்தில் இழுத்துக் கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

அப்போது தேசத்தின் மற்ற சக்திகள் எல்லாம் மகத்தான இந்தச் சக்திக்கு முன்பு அடிபணிந்துவிடும் என்பதே உண்மை.

இந்த வாக்காளர் ராணுவத்தை எப்படிக் கட்டுக்குலையாமல் வைத்துக் கொள்வது என்பது பற்றியும் ஏங்கெல்ஸ் சிந்தித்திருக்கிறார்.

அரசு ராணுவத்தோடு வாக்காளர் ராணுவமும் மோதப் போகிறது. ஆனால், இந்த மோதலில் துளி அளவு ரத்தம்கூட சிந்தக்கூடாது. 1871–இல்

பாரீஸ் நகரத்தில் நடந்த புரட்சியைப் போல இது நிகழ வேண்டும் என்றார் ஏங்கெல்ஸ். தொழிலாளி வர்க்கம் அவசரப்பட்டுத் தேவையில்லாத காரியங்களில் ஈடுபடக் கூடாது என்றும் எச்சரித்தார். எக்காரணம் கொண்டும் அவர்கள் தூண்டிவிடப்பட்டுவிடக் கூடாது என்றும் எச்சரித்தார்.

அரசு ராணுவத்தோடு மோதி தனது பராக்கிரமத்தைக் காட்ட இதைப் பயன்படுத்தக் கூடாது என்பதையும் குறிப்பிட்டார். புரட்சிவாதிகள் எக்காரணம் கொண்டும் தெருவில் இறங்கிக் கலவரங்களில் ஈடுபடக் கூடாது என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றார்.

ஏங்கெல்ஸ் மேலும் கூறுகையில், “உலகச் சரித்திரத்தில் ஒரு விநோதமான காரியம் நடந்தது உண்டு. ஆட்சி அதிகாரங்களைக் கைப்பற்றியவர்கள் சட்டப்படியான பாதையில் சென்றுதான் அதனைச் சாதித்துள்ளார்களே தவிர, சட்ட விரோதமான பாதையில் சென்று அதைச் சாதிக்கவில்லை என்பதுதான் அந்த விநோதம்.

யார் புத்திசாலி !

ஒரு சமயம் பேரறிஞர் பெர்னாட்ஷா, தன் மனைவியிடம் “புத்திசாலித்தனம் அதிகம் ஆணிற்கா? இல்லை பெண்ணிற்கா?” என்று கேட்டார்.

அதற்கு அவருடைய மனைவி, “நீங்கள் புத்திசாலியாய் இருந்ததால் என்னை மணந்தீர்கள். நான் முட்டாளாய் இருந்ததால்தான் உங்களை மணந்தேன்” என்று கூற, பெர்னாட்ஷா நிலைகுலைந்து போனார்.

– ஆர்.கே. லிங்கேசன்

ஜனநாயக உரிமைகளைப் பெற்ற பிறகு, சோஷலிசப் புரட்சிக்கான வழிகள் என்று வாக்குப் பெட்டிகளைத்தான் மார்க்சும், ஏங்கெல்சும் அடையாளம் காட்டினார்கள்.

இரண்டாவது உலகமகா யுத்தத்திற்குப் பிறகு 21–ஆம் நூற்றாண்டில் அனைவருக்கும் வாக்குரிமை என்று எல்லா நாடுகளிலும் பரவியுள்ளது. வாக்குரிமை, கருத்துச் சுதந்திரம், அரசியல் சாசனத்தைக் காப்பது, ஜனநாயகப் போராட்டம் போன்ற இவையெல்லாம் நமது நாட்டிலுள்ளதைப் போலவே மற்ற நாடுகளிலும் முக்கியத்துவம் பெற்றுள்ளன.

லத்தீன் அமெரிக்க நாடுகள், நேபாளம், மேற்கு ஐரோப்பிய நாடுகள் இன்னும் வேறு சில நாடுகளில் உள்ள ஜனநாயகமும் சமதர்மமும் ஒவ்வொரு நாட்டிலும் ஒரே மாதிரியாக இல்லை. வித்தியாசமாகவே உள்ளன.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் இடதுசாரிகள் ஆட்சி அதிகாரத்தைக் கடந்த 20 ஆண்டுகளாகத் தொடர்ந்து தேர்தல் மூலமாகக் கைப்பற்றி வந்துள்ளனர். ஆனாலும் இது சமதர்ம ஆட்சி அல்ல. சமதர்மத்திற்கான முதல் அடி மட்டுமே.

ரஷ்யா, சீனா, கியூபா, வியட்நாம் முதலிய நாடுகளில் உள்ள ஜனநாயகமும், சமதர்மும் ஒன்றுக்கொன்று வேறுபட்டவையாக உள்ளன. ஆனாலும் ஜனநாயகப் புரட்சி என்பது முன்பைக் காட்டிலும் அதிகத் தாக்கத்தை இப்போது ஏற்படுத்தியிருக்கிறது.

அதனால், ஏங்கெல்ஸ் மற்றும் மார்க்ஸ் ஆகியோரின் சிந்தனைகள் இன்றைக்கும் பொருத்தப்பாடு உடையனவாகவே உள்ளன. அப்படி இருந்தபோதிலும் அச்சிந்தனைகளுக்குப் புதிய பரிமாணங்களைச் சேர்க்க வேண்டிய தேவையும் இருக்கிறது.


– ந.நி.

வாழ்விக்க வந்த பாரதி – 10

‘அன்ன யாவினும் புண்ணியம் கோடி’

இன்றைக்குச் சரியாக 114 ஆண்டு களுக்கு முன்பு, அதாவது, 1906–ஆம் ஆண்டு. பிப்ரவரி மாதம், மகளிருக் கென வெளிவந்த பத்திரிகையில், அதன் ஆசிரியர் எழுதுகிறார்:

“பலவகைத் தானங்களிலே நல் லறிவுத் தானமே விசேஷமுடைய தென்று மேலோர் சொல்லுவார்கள். அழிந்துபோன ஆலயங்களை மறுபடி புதுக்கிக் கட்டிப் பிரதிஷ்டை புரிந் தோர், நெடுங்காலமாக நின்றுபோன அன்னசத்திரங்களுக்கு மறுபடியும் உயிரளிப்போர், வறண்டு மண்ணேறிப் போய்க்கிடக்கும் தடாகங்களை மறுபடி வெட்டி நலம் புரிவோர் என்னும் பல வகையாரினும், மங்கி மறைந்துபோய்க் கிடக்கும் புராதனப் பெருங்காவியங் களைப் பெருமுயற்சி செய்து திரும்ப உலகத்துக்கு அளிக்கும் பெரியோர்கள் புண்ணியத்திற் குறைந்தவர்களல்லர். மேலும் புகழ் நிலைக்குந் தன்மையில் மற்றெல்லோரைக் காட்டிலும் இவரே சிறந்தவராவார்.”



இந்த ‘இவர்’ எவர் என, அடுத்த பத்தியில் அவர் (அதாவது, ஆசிரியர்) குறிக் கிறார்: **“மேற்கூறப்பட்ட பெருந்தருமத்தை நன்கு புரிந்தவர்”** என்பதற்கு முன்னதாக, அப்பெயர் அமைகிறது; அது, **‘பிரமஸ்ரீ உ.வே.சாமிநாத ஐயர்.’**

மேல் விளக்கம் எழுதுகிறார் ஆசிரியர்: **“சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய பழந்தமிழ் நூல் களை இன்று நம்மவர் கற்றுக் களிப்பது சாமிநாத ஐயருடைய கருணைமிகுதி யாலல்லவோ?”**

எதற்கு இந்தப் பாராட்டு?

‘மஹாமஹோபாத்தியாய’ப் பட்டம் கொடுத்து ஆங்கில அரசு இவரைப் பெருமைப்படுத்திய தருணம் அது. அதற்கான பாராட்டுவிழா சென்னை யில் நடைபெற்றபோது, தனது வகுப்புத் தோழரின் வேண்டுகோளுக்கு இணங்கி, மூன்று பாடல்களை எழுதி முடித்து, அந்த அரங்கில் பாடிவிட்டு வந்த நினை வோடு, இந்தப் பாராட்டுரையினையும் எழுதிய அந்த இதழாசிரியர், கவிஞர் வேறு யாருமல்லர், நமது மகாகவி பாரதிதான். அவரை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த மகளிர் இதழ், ‘சக்கரவர்த்தினி’. ‘வாழ்த்துக் கவிதை எழுதிப் பாட வேண்டும்’ என்று வேண்டுகோள் விடுத்தவர், அவர்தம் வகுப்புத்தோழர், நாவலர் சோமசுந்தர பாரதியார்.


சென்னைப் பிரசிடென்சிக் கல்லூரி யின் தமிழ்ப் போதகராக, உ.வே. சா. இருந்தபோது நிகழ்ந்தது இது. இதற்கு முன்னர் எந்தப் பண்டிதருக்கும் அப் பட்டம் சூட்டப்படவில்லை. அதனைப் பெற்றதில் ஐயர் தமக்குத் தாமே நிகராவார் என்று இந்துநேசன் ஆசிரியர்

கிருங்கை சேதுபதி

ல.அனந்தய்யர் பாராட்டு உரைத்ததும் உண்டு. ஆனால், பாரதி கொடுத்த பாராட்டும், தன் கவிதையில், **'குடந்தை நகர்க் கலைஞர் கோ'** என்று பாடிக் கொடுத்த மங்கலப் பட்டமும் நிலைபேறுடையவை. அது தனித்து விளக்கவேண்டிய வரலாறு.



உ.வே.சாமிநாத ஐயர்



பாரதிதாசன்

இங்கே, இதனை நினைவு கூர்வதற்கு இன்றியமையாத காரணம் ஒன்று உண்டு.

இந்தக் கவிதையும், இதனோடு கூடிய பாராட்டுரையும் எழுதிவெளிவந்து, சுமார் எட்டாண்டுகளுக்குப் பின்னர், பாரதியார் புதுவையில் அடைக்கலமாகிய காலத்தில் எழுதியது 'வெள்ளைத் தாமரைப் பூவினில் இருப்பாள்' என்னும் பாடல்.

அதன் முடிப்புக்கு முந்தைய, நவரத்தினம் ஒத்த ஒன்பதாவது பாடலாக அமைவதுதான், இன்று உலகப் புகழ் பெற்ற சிறப்புமிகு பாடல். அது, **"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்"** எனத் தொடங்கி, வளர்கிறது.

உரைநடையில், 1906–ஆம் ஆண்டு எழுதிய கருத்து, 1914–ஆம் ஆண்டு, தென்னாப்பிரிக்க டர்பன் நகரத்து, சரஸ்வதி விலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பெற்ற, 'மாதா மணிவாசகம்' என்னும் பாரதியின் கவிதைத் தொகுப்பில் இடம்பெற்ற கவிதையாக உருப்பெருகிற போது, அந்த அருள்வாக்கு, சுடர்த் தன்மையும் என்றும் நிலைபேறுடைய அறத்தன்மையும் மிகுந்து விளங்குவதைக் கவனிக்க முடிகிறது.

அறங்களின் பயனாய் வாய்க்கும் நன்மைகளை நிரல்படுத்திப் பார்க்கிறார் பாரதி. ஓர் அறிவு முதலான உயிர்களைப் பேணி வளர்த்து உலக நலன் காக்கும் அறப்பணி **'இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்.'**

தானும் உணவாகித் தாயகத்தின் உயிர்களுக்கெல்லாம் உயிரளிக்கும் உயிராகி அமைவது, நீர். அதனை நிலைப்படப் பேணுதற்குரிய நீர்நிலை, 'ஊருணி'. குளிக்கப் பயன் தருவது குளம். மணற்பாங்கான நிலத்து நீர்நிலை, 'கேணி'. ஆழமாகத் தோண்டி அமைப்பது 'கிணறு'. குளிக்கப்பயன் தருவது 'குளம்'. பாசன வசதிக்குரியன கண்மாய்கள், ஏரிகள் என விரிவன.

ஆனால், பாரதி இப்பாடலில் சுட்டிக் காட்டுவது, 'சுனை'. இது குறிஞ்சிநிலத்திற்குரிய நீர்நிலை. மலைப் பாங்கான பகுதியில் தண்ணென்று ஊறுவது. அங்கு கிட்டும் நீர், இனிமை உடையது; குளிர்ச்சி நிறைந்தது; அதனால்தான், **'இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்'** என்கிறார் பாரதி.

பசிக்கு உணவிடும் அருட்பணி நிகழும் இடம், 'அன்ன சத்திரம்.' செல்விருந்து ஓம்பி, வருவிருந்து பார்த்து இடையறாது அன்னமிடும் அருந்தவச் சாலை, அது. ஒன்றை நிறுவிப் பராமரிப்பதே சிரமம். ஆயிரக்கணக்கில் வைத்துப் பராமரிப்பது எவ்வளவு பெரிய அறப்பணி. அதனை அடுத்துப் பெரிய அறமாக, **'அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்'** என்கிறார்.

அதற்கும்மேலாக, அக்காலத்து அறநிலையங்களாகவும், அருள் நிலையங்களாகவும் விளங்கிய ஆலயங்களை நாட்டுதல். அதுவும் பதினாயிரம் ஆலயங்கள்; **'ஆலயம் பதினாயிரம் நாட்டல்.'**

இந்த வரிசையைப் பின்தொடர்ந்து வ(ள)ரும் தானங்களை அடிப்படையாகக் கொண்ட தருமங்கள் பற்பல. அன்னதானத்துக்கு அடுத்து வருகிற

ஆடைக்கொடை (வஸ்திரதானம்), பொற்கொடை (சொர்ணதானம்), பசுக் கொடை (கோதானம்), நிலக்கொடை (பூ(மி)தானம்), குதிரைக்கொடை (அஸ்வ தானம்), காளைக் கொடை (வ்ருஷப தானம்), வித்துக்கொடை (தான்ய தானம்), தென்னங்கன்றுக் கொடை (கல்ப விருக்ஷ தானம்), பொருட்கொடைகள் (சந்தன தானம், நல்முத்து தானம், நவரத்ன தானம், தேன் தானம், எள்ளு தானம், மாதுளம் பழம் தானம், உப்பு தானம் மற்றும் பதினாறு விதப் பழங்களை பதினாறு பேருக்குத் தானம் அளிப்பது.)

இந்த வரிசையில், குப்த தானம் என்றும் ஒன்று உண்டு. அதாவது பூசணிக்காய் அல்லது பலாப்பழம் அல்லது இளநீர் ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை எடுத்துக் கொண்டு, அதில் ஒரு ரூபாய் அளவுக்குத் துளையிட்டு, அதில் ரத்னம், சொர்ணம் (தங்கம்), வைரம், வைடூரியம், வெள்ளி, முத்து ஆகிய வற்றை நிரப்பி, மீண்டும் துளையை மூடிவிட்டு அப்படியே தானம் வழங்கு வதற்கு 'குப்த தானம்' என்று பெயர். இவ்வாறாக, இன்னும் என்னென்ன இருக்கின்றனவோ, அவற்றை எல்லாம் மீளவும் பெயர் விளங்கும்படியாக ஒளிர நிறுத்திச் செய்வது.

'அன்ன யாவினும்' புண்ணியம். ஒன்றல்ல, நூறல்ல, ஆயிரமல்ல, கோடி.

அந்தப் புண்ணியம் எது?

'ஆங்கோர் ஏழைக்கு எழுத் தறிவித்தல்.' ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்னும் புண்ணியத் திருப்பணிக்கு நிகராக, ஏனைய புண்ணியந்தருகிற தருமப் பணிகளை, கோடிக்கணக்கில் செய்தாலும் ஆகாது என்பது பாரதி யின் உள்ளக்கிடக்கை. அதனால்தான்,

"இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினா யிரம் நாட்டல்
பின்னர் உள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்ன யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்று பட்டியல் அமைத்துப் பாடி முடிக்கிறார். காசிக்குப் போய் பாரதி தேடிக் கண்டுகொண்ட நற்புண்ணியம் இதுபோலும்.

அந்த ஏழை ஆணாகவும் இருக்க லாம்; பெண்ணாகவும் இருக்கலாம்; இரண்டும் கடந்த பாலினராகவும் இருக் கலாம். கைப்பொருள் இன்றிக் கற்றிட முடியாத அவலத்தில் இருக்கும் ஆன்மா வின் பெருந்துயர் வறுமை. அதனை, இளமையில் அனுபவித்தவர் பாரதி. அதனால்தான்,

"கைப்பொருள் அற்றான் கற்பது எவ்வகை?" என்று தன் பதினைந்தாம் வயதிலேயே, இளசைபுர மன்னருக்குக் கவிமடலினை அவர் எழுத நேர்ந்தது.

தனக்கு நேர்ந்த அக்கொடுந்துயர் வறுமை, தன் தாயகத்திற்கு மட்டுமல்ல, தரணியில் எவருக்கும் வந்து விடலா காது என்ற ஆவேசத்தில்தான், அவரிடமிருந்து கவிவாக்காகப் பிறக்கிற சொற்றொடர், **'ஆங்கோர்.'**

வறுமையின் கொடிய கரம் எங்கெல்லாம் நீண்டு, ஏழைகளைத் துன் புறுத்துகிறதோ, அங்கெல்லாம் சென்று

தோல்வி ஏன்?

பேரறிஞர் எட்வர்டு பாரட்டிடம் சகநண்பர் ஒருவர் "தோல்விமேல் தோல்வி ஏன் வந்து கொண்டிருக்கிறது?" என்று கேட்டார். "யாரும் தோற்பதற்கு வாய்ப்பில்லை. தான் தோற்று விட்டேன் என்று உணர்கிறவர்கள் மட்டும்தான் தோற்கிறார்கள். மற்றவர்கள் 'எழு'கிறார்கள்" என்றாராம் எட்வர்டு பாரட்.

– ஆர்.கே. லிங்கேசன்

ஆற்ற வேண்டிய அறப்பணி, அன்றாடம் அன்னமிடும் சத்திரம் வைப்பதை விடவும், அனுதினமும் பூசனைகள் புரியும் ஆலயங்களை நிலைநாட்டுவதை விடவும், அவர்களுக்கு எழுத்தறிவித்தல் என்னும் இறைபணிதான் இன்றியமையாதது என்று எடுத்துரைப்பதற்காகவே, இந்த 'ஆங்கு' எனும் சொல் பாரதியிடமிருந்து கட்டளைபோல் பிறக்கிறது.

அதுவும் 'ஓர் ஏழைக்கு' என்கிறார். இந்த ஓர் எனும் சொல், 'ஒவ்வோர்' எனும் உட்பொருள் தாங்கி நிற்கிறது.

அதிவீரராம பாண்டியர் எழுதிய 'வெற்றிவேற்கை' என்னும் நறுந்தொகை, **'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்'** என்றே தொடங்குகிறது. இது பல காலம் தமிழுலகில் நிலைபெற்ற மந்திரத் தொடர். ஆனாலும், செயல்தளத்தில், ஆசானின் பெருமையை உணர்த்துவதாக இது அமைந்ததே ஒழிய, அறிவிக்கப் பெற வேண்டியவனின் அவலத்தைத் தீர்க்க முனைவதாகத் தெரியவில்லை.

அந்த இடத்தில்தான் பாரதி, இந்த ஸ்தானத்தை மாற்றிக் காட்டுகிறார். தன்னை இறை நிலைக்கு உயர்த்திக்கொள்ள விரும்புகிற ஒவ்வொருவரும் இன்றியமையாது செய்ய வேண்டிய இறைப்பணியாக இத்திருப்பணியைச் சுட்டுகிறார். ஏழ்மையில் இருப்பவனே இறைவன். அவனுக்கு ஆற்றுகிற தொண்டே அறப் பணி என்று உணர்விக்கிறார். இந்த மக்கள் தொண்டே மகேசனுக்குச் செய்யும் புண்ணியத் திருத்தொண்டைவிட மகத்தானது என்பது இதன் உட்கிடக்கை.



பாரதியார்

அது எல்லைகள் கடந்து எங்கும் சென்று, செய்ய வேண்டிய அருட்பணி என்பதால் தான், ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்தறி வித்தல் என்று சொல்லப்பெற்றது. பாரதியின் புகழ் பெற்ற மற்றொரு பாடலான,



சோமசுந்தர பாரதியார்



"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்; அதை அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்" என்பதில், இடம் பெறும் **'அங்கு'** என்ற சொல்லையும், பொந்திடை என்ற சொல்லுக்கு முன் வரும் **'ஓர்'** என்ற சொல்லையும் மேற் சுட்டிய பாடற் சொற்களோடு இணைத்துச் சிந்தித்தால், இந்த அறத்தினை உடன் ஆற்ற வேண்டிய அவசியத்தைப் பாரதி அழுத்தமாக வலியுறுத்துவது புரிபடும்.

"...அன்ன யாவினும் புண்ணியம் கோடி" தரும் இந்தத் திருப்பணி, ஏழையென்று, உலகின் எந்தவொரு கடைக் கோடியில் இருந்தாலும் யார் இருந்தாலும் தேடிச் சென்று உடனடியாகச் செய்தாக வேண்டிய அருட்பணி என்று உணர்த்துவதோடு, இப் பாடல் நிற்கவில்லை.

அலைகடலுக்கு அப்பால் உள்ள தேசங்களில் எல்லாம் நிகழும் அப்பெரும் பணியை, 'ஆங்கு' என்று சுட்டிக் காட்டும் இக்கவித்தொடர், அதனை விடவும், 'ஈங்கு' அந்நிலை விரைந்து எழ வேண்டும் என்ற உத்வேகத்தை நுட்பமாகத் தந்து நிலைக்கிறது.

அதற்கு என்ன செய்ய வேண்டும்? **"...அதே சக்கரவர்த்தினி இதழில், அதற்கு மூன்று விதமான உபாயங்கள் இருக்கின்றன"** என்கிறார். அவை எவை எனக் காண்பதும், ஈங்கு இன்றியமையாதது. ●



தூய்மையின் வலிமையுடன்
Sakthi
as pure as mother's love
சக்தி பால்
தாய் பாசம் போல் தூய்மையானது
Available in: 250 ml, 500 ml & 1 litre
பால் | தயிர் | பனீர் | வெண்ணெய் | நெய் | டெய்ரி ஒயிட்னர் | ஸ்கிம்டு பால் பவுடர்
ABT FOODS
www.sakthidairy.com, Follow us on SAKTHI DAIRY For trade enquiry: 1800 102 3040 (Toll Free)

இம்மாத ராசி பலன்

**“என்ன நடக்கலாம் என்பதை அனுமானிப்பவன் சோதிடன்
என்ன நடக்கும் என்பதைத் தீர்மானிப்பவன் இறைவன்!”**

1.2.2021 அன்று கோள்கள் நிலை

	செவ்வாய்	ராகு	
புதன் (வ)	4.2.2021 புதன் – மகரம் 12.2.2021 சூரி. – கும்பம் 20.2.2021 சுக். – கும்பம் 22.2.2021 செவ். – ரிஷபம்		
சூரியன் சனி குரு சுக்கிரன்			
சந்திரன்	கேது		

'ஜோதிடத் திலகம்'
க. தில்லையம்பலம்

மேஷம்



இம்மாதம் சூரியன் சிறப்பாகச் சஞ்சரிப்பதால் நினைத்த காரியங்கள் நிறைவேறும். தொழில் உத்யோகத் துறைகளில் அனுகூலம் ஏற்படும். பொருள் சேர்க்கை ஏற்படும். தொழில்வழி நண்பர்கள் மூலம் ஆதாயம் கிட்ட வாய்ப்புண்டு. செவ்வாய் 22–ஆம் தேதிவரை ராசி மீது சஞ்சரிப்பதால், கோபதாபங்கள் அவ்வப்போது ஏற்பட்டு அகலும். ராகு 2–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் எதிர்பாராத பண வரவும் செலவும் ஒருங்கே ஏற்படும். 8–இல் கேது சஞ்சரிப்பதால் கட்டி, ஜுரம் முதலியவை ஒருசிலருக்கு ஏற்பட வாய்ப்புண்டு. புதன் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால், உடன்பிறந்த சகோதர வர்க்கத்தார் பாதிப்புகளை அடையலாம்.

10–இல் சனி – குரு சஞ்சரிப்பதால் தொழில் சம்பந்தமாக சிலர் குழப்பம் அடையக் கூடும். அந்தஸ்து குறைந்துவிடுமோ என்ற அச்சத்தை அடைவர். சுக்கிரன் 20–ஆம் தேதிவரை 10–இல் சஞ்சரிப்பதால் பெண்கள் முகாந்திரமாக அமைதியான முறையில் உங்கள் அணுகுமுறைகள் இருப்பது நல்லது. திருமணக் காரியங்களில் உங்கள் ஜனன ஜாதகத்தை ஆய்வுசெய்து இறங்குவதே உசிதமானது. புது முயற்சிகளை மாதத்தின் பிற்பாதியில் தொடங்கலாம்.

ரிஷபம்



இம்மாதம் பிற்பாதியில் சூரியன் அனுகூலங்களை ஏற்படுத்த வாய்ப்புண்டு. நீண்ட நாள் திட்டம் ஒன்று நிறைவடையும். நீண்ட பயணங்கள் மாதத்தின் முற்பாதியில் சிலருக்கு ஏற்பட வாய்ப்புண்டு. தொழில், உத்யோகத் துறைகளில் மாதத்தின் பிற்பாதியில் நன்மை ஏற்படும். சுக்கிரன் 20–ஆம் தேதிவரை சனி – குரு சேர்க்கைப் பெற்று 9–இல் சஞ்சரிப்பதால் ஆன்மீகத் துறையில் உள்வர்கள், தொண்டு நிறுவனங்கள் நடத்துபவர்கள், நீதித் துறையில் இருப்பவர்கள் யோகமடைவர். ராகு உங்கள் ராசி மீது சஞ்சரிப்பதால் வயிற்று உபாதைகள் ஏற்படலாம். அஜீரணக் கோளாறுகள் சிறுவயதினருக்கு ஏற்படும்.

7–இல் கேது சஞ்சரிப்பதால் விதவைகள், கபட சந்நியாசிகள், கந்துவட்டி வசூலிப்பவர்களிடம் கவனம் வேண்டும். செவ்வாய் 12–இல் சஞ்சரிப்பதால் சகோதர வழியிலோ, பூமி சம்பந்தப்பட்டோ விரயங்கள் சிலர் அடைவர். ஞாபக

மறதியும் ஏற்படும். புதன் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் புத்திர வர்க்கத்தாரால் பிரச்சினை வரக் கூடும். திருமணம் முதலிய காரியங்களுக்கு உகந்த நேரமல்ல.

மிதுனம்



இம்மாதம் சூரியன் 8, 9–மிடங்களில் சஞ்சரிப்பதால் செலவும், அலைச்சலும் எதிர்பாராத சம்பவங்களும் உங்களை வருத்தப்படச் செய்யலாம். நீதிநெறிகளைக் கடைப்பிடித்து நேரான வழிகளில் சென்றால் நன்மை அடையலாம். 20–ஆம் தேதிவரை உத்யோகஸ்தர்கள், நண்பர்கள் மூலம் நன்மை அடையலாம். ஏற்கனவே கோர்ட்டு வில்லங்க விவகாரங்களைச் சந்தித்துக் கொண்டிருப்பவர்கள் வெற்றி பெறலாம். புதன் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் எதிர்மறையான சிந்தனைகள் தோன்றும். நிதானமாகக் காரியம் ஆற்றுவது நல்லது.

ராகு 1–இல் சஞ்சரிப்பதால் ரகசிய எதிர்ப்புகள் இருந்துவரும். கேது 6–இல் சஞ்சரிப்பதால் தங்களது வசதிகளை அதிகரித்துக்கொள்ள சிலர் முயற்சி செய்வர். சனி – குரு 8–இல் சஞ்சரிப்பதால் தொழில் பாதிப்பு ஏற்படும். அல்லது உங்களது வேலை பறிக்கப்படலாம். ஒருசிலர் தாங்களே விட்டுவிடவும் கூடும். சுக்கிரன் 8–இல் சஞ்சரிப்பதால் வாகனச் செலவு, பீடை ஏற்படும். திருமணக் காரியங்கள் சரிவராது. கால தாமதம் ஆகும்.

கடகம்



இம்மாதம் சூரியன் திருப்திகரமான பலன்களை வழங்க வாய்ப்பு இல்லை. மாதத்தின் முற்பாதியில் சிலரது சந்திப்புகள் ஏதேனும் எதிர்ப்புகளையோ, வேறு பிரச்சனைகளையோ தோற்றுவிக்கக் கூடும். மாதத்தின் பிற்பாதியில் எதிர்பாராத செலவு ஏற்படும். தேகம் பாதிப்பு அடையலாம். செவ்வாய் 10–இல் 22–ஆம் தேதிவரை சஞ்சரிப்பதால் தொழில்வழிக் கலக்கம் அதுவரை இருந்துவரும். சிலருக்குச் சொத்து வாங்கும் யோகம் உண்டு. ராகு – செவ்வாய் இணைவு ஏற்படுவதால், மாற்று மதக்காரர்களிடமிருந்து அனுகூலம் அடைவீர்கள். வயது முதிர்ந்தவர்கள் காதில் கோளாறுகளை அடைவர். ஒருசிலர் அறுவைச் சிகிச்சைச் செய்துகொள்ள வாய்ப்புண்டு. தாய்வழியினர் லேசான பாதிப்புகளை அடையலாம்.

சனி – குரு 7–இல் சஞ்சரிப்பதால், கூட்டுத் தொழில்கள் பிரச்சனைக்கு உள்ளாகி மீண்டும் புதிய கூட்டு உருவாகும் வாய்ப்புண்டு. கேது 5–இல் சஞ்சரிப்பதால் குழந்தைகள் அதிகச் சுதந்திரத்தை எதிர்பார்க்கலாம். காலத்திற்குத் தகுந்தபடி நடந்துகொள்வது நல்லது. திருமணக் காரியங்களுக்குத் தற்சமயம் வாய்ப்பில்லை.

சிம்மம்



இம்மாதம் சூரியன் அனுகூலமாகச் சஞ்சரிப்பதால் தொழில் உத்யோகத் துறைகளில் அனுகூலம் உண்டு. எதிர்ப்புகள் அகன்றுவிடும். குழந்தைகள் வழியில் அத்யாவசியச் செலவுகள் ஏற்படும். ஒருசிலர் நிதி நிறுவனங்களில் அல்லது தனியாரிடம் கடன்பெற வாய்ப்புண்டு. வாழ்க்கைத் துணைவருக்கு நற்பலன் கிட்டாது. செவ்வாய் 9–ஆம் வீட்டில் 22–ஆம் தேதிவரை சஞ்சரிப்பதால், வீண்பயம் அவ்வப்போது ஏற்படும். கருவுற்ற பெண்கள் கவனமுடன் இருக்க வேண்டும். ராகு 10–இல் சஞ்சரிப்பதால், தொழில் வழியில் மாற்றம் செய்ய நினைத்தாலும் இதர சூழ்நிலைகள் காரணமாக நீங்கள் உங்களது முயற்சிகளில் வெற்றிகாண இயலாது.

கேது 4–இல் சஞ்சரிப்பதால் குடும்பத்தில் அதிருப்திகள் இருந்துவரும். மூத்த உறுப்பினர்களுக்கு நோய்நொடிகள் ஏற்படலாம். சுக்கிரன் 20–ஆம் தேதிவரை 6–இல் சஞ்சரிப்பதால் வெறுப்புடன் ஸ்திரீகளுடன் பழக வேண்டாம். சிலர் கடன்பெற யோகமுண்டு. புதன் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் பணப் புழக்கத்தில் ஏற்ற இறக்கங்கள் காணப்படலாம். அதேபோல் நண்பர்கள் சிலர் குறுக்கே திரும்ப வாய்ப்புண்டு. திருமணக் காரியங்களுக்கு 11 மாதம் பொறுத்திருக்க வேண்டும்.

இம்மாதம் சூரியனின் சஞ்சாரம் மாதத்தின் பிற்பாதியில் பல நன்மைகளை ஏற்படுத்தக் கூடும்.

கன்னி



மாதத்தின் முற்பாதியில் புத்திக் குழப்பம், குழந்தைகள் பற்றிய கவலை, அரசாங்கப் பிரச்சினைகள், தம்பதியரிடையே அபிப்ராயப் பேதங்கள் போன்றவை ஏற்படக் கூடும். மாதத்தின் பிற்பாதியில் தொழில் உத்யோகத் துறைகளிலும், பொருளாதார விஷயங்களிலும் நன்மை ஏற்படும் வாய்ப்புண்டு. செவ்வாய் 8–இல் சஞ்சரிப்பதால் விவகாரங்களில் ஈடுபட வேண்டாம். 20–ஆம் தேதி வரை சுக்கிரன் 5–இல் சஞ்சரிப்பதால் சுபகிரகத் திசை புத்தி நடப்பவர்களுக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் ஏற்படும். சுப காரியங்கள் நடைபெறும்.

சனி – குரு 5–இல் சஞ்சரிப்பதால் ஆன்மீகத் துறையில் இருப்பவர்களுக்கு நற்காலமாகும். 9–இல் ராகு சஞ்சரிப்பதால் வெளிதேச வர்த்தகங்கள், தொடர்புகள் நன்மை பயக்கும். கர்ப்பிணிப் பெண்கள் கவனமுடன் இருக்க வேண்டும். கேது 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் வசதி வாய்ப்புகள் போகப் போக அதிகரிக்கும். திருமணம் முதலிய சுப நிகழ்ச்சிகளில் சாதகம் ஏற்படாது. இருப்பினும் ஜனன ஜாதகத்தில் நல்ல திசைபுத்தி அமைந்தவர்களுக்கு நல்ல வாய்ப்புகள் கிட்டலாம்.


துலாம்



இம்மாதம் முற்பாதியில் அலைச்சல், உடல்நலிவுகள் ஏற்படலாம். மிதமிஞ்சிய கேளிக்கை நாட்டங்களில் ஈடுபட வேண்டாம். வருந்த நேரிடும். மாதத்தின் பிற்பாதியில் 5–ஆம் வீட்டில் சூரியன் சஞ்சரிப்பதால் அரசாங்க அலுவல்களில் கவனமுடன் செயல்பட்டால் நன்மை ஏற்படும். சில காரியங்களில் தடைகள் ஏற்படக் கூடும். குழப்பமும் ஏற்படலாம். செவ்வாய் 7–இல் 22–ஆம் தேதி வரை சஞ்சரிப்பதால் குடும்பத்தில் வீண் விவாதம், தர்க்கம் வேண்டாம். ராகு 8–இல் சஞ்சரிப்பதால் போக்குவரத்துகளில் கவனம் வேண்டும்.

கேது 2–இல் சஞ்சரிப்பதால் சிக்கனத்துடன் இருக்கலாம். ஆனால் கஞ்சத்தனமாய் இருக்க வேண்டாம். 4–இல் 20–ஆம் தேதி வரை சுக்கிரன் – குரு – சனி இணைவு காரணமாக சந்தோஷ நிகழ்ச்சிகள், கேளிக்கைகளில் ஈடுபட வாய்ப்பு ஏற்படலாம். மிதமிஞ்சிய சுகம் நல்லதல்ல. புதன் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் தகப்பனார் வர்க்கத்தார் உறுவினர்கள் இடைஞ்சல் ஏற்படுத்தலாம். கல்வி கேள்விகளில் கவனம் வேண்டும். திருமணக் காரியங்களில் திருப்திகரமான பலன்கள் தற்சமயம் எதிர்பார்க்க இயலாது.

விருச்சிகம்



இம்மாதம் முற்பாதியில் தொழில் உத்யோகத் துறைகளில் அனுகூலங்கள் ஏற்படும். உங்கள் முயற்சிகள் பலிதமாகும். பண வரவும் ஏற்படும். குறுகிய பயணங்களால் நன்மை ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் அலைச்சல் ஏற்படும். தேக நலம் பாதிக்கலாம், கவனம். செவ்வாய் 22–ஆம் தேதி வரை 6–இல் சஞ்சரிப்பது நன்மை. விரோதங்கள் அகன்றுவிடும். உற்சாகத்துடன் காணப்படுவீர்கள். சுக்கிரன் 20–ஆம் தேதி வரை 3–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் சுக போகம் அனுபவிப்பீர்கள்.

சனியும் – குருவும் இணைவு பெற்றுச் சஞ்சரிப்பதால் சில நேரங்களில் அதீத உணர்ச்சிவசப்படும் வாய்ப்புண்டு. நிதானமாக யோசித்து முடிவெடுக்க வேண்டும். ராகு 7–இல் சஞ்சரிப்பதால் வேற்று மதக்காரர்களுடன் எச்சரிக்கையுடன் தொடர்புகள் வைத்துக்கொள்ள வேண்டும். விதவை ஸ்திரீகளால் சங்கடங்கள் வர வாய்ப்புண்டு. ராசி மீது கேது சஞ்சரிப்பதால் கட்டி, ஜூரம், பீடை சிலருக்கு ஏற்படும். அவ்வப்போது மனக்குழப்பமும் ஏற்படும். திருமண வாய்ப்புகள் தற்சமயம் இல்லை.

தனுசு



இம்மாதம் சற்று அதிர்ஷ்டகரமான மாதம்தான். மாதத்தின் முற்பாதியில் தனம், பொருள், ஆதாயம், சுபகாரிய ஈடுபாடுகள், குடும்ப மகிழ்ச்சி, சொல்லுக்கு மதிப்பு ஏற்படுதல், பிதுர் வகை நன்மை ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் தன்னம்பிக்கையுடன் எக்காரியத்திலும் இறங்கி வெற்றி அடைவீர்கள். தொழில் உத்யோகத் துறைகளில் ஏற்றம் உண்டாகும். செவ்வாய் 22–ஆம்

தேதி வரை 5–இல் சஞ்சரிப்பதால் குழந்தைகள் வழியிலோ, அரசாங்க அலுவல்கள் நிமித்தமோ செலவுகள் ஏற்படலாம். சுக்கிரன் 20–ஆம் தேதி வரை 2–இல் சஞ்சரிப்பதால் உறவினர்கள், பெண் கள் மூலமாக நன்மை ஏற்படும். நண்பர்கள் உதவிகரமாக இருப்பர்.

ராகு 6–ஆம் வீட்டில் சஞ்சரிப்பதால் உணவு உட்கொள்வதில் கவனம் வேண்டும். எளிதில் ஜீரணிக்கும் உணவுகளை எடுத்துக்கொள்ள வேண்டும். வயிற்றில் சிலருக்கு உபாதைகள் உண் டாகலாம். கேது 12–இல் சஞ்சரிப்பதால் கனவுகள் அதிகம் ஏற்படக்கூடும். சனி – குரு 2–இல் சஞ் சரிப்பதால் சுபகாரிய முயற்சிகளில் இறங்கலாம்; ஈடேறும் வாய்ப்புண்டு. புதிய தொழில் துறைகளில் இறங்க மாசி மாதம் ஏற்றது. முயற்சிக்கலாம்.

மகரம்



இம்மாதம் சூரியன் பல்வேறு சிந்தனைகளைத் தூண்டக் கூடும். சிரசு வலி முதலியவை ஏற்படலாம். வய தான ஒரு சிலருக்கு உடல் நோவு ஏற்படும் வாய்ப்புண்டு. மாதத்தின் பிற்பாதியில் பணத் தேவை அதிகரிக்கும். சில ருக்குக் குடும்பப் பிரச்சினை கள் கவலை கொடுக்கலாம். செவ்வாய் 22–ஆம் தேதி வரை உங்களுக்குச் சிரமங்களை ஏற்படுத் தினாலும், பின்னர் உத்யோகத் துறைகளிலும் தொழில் துறைகளிலும் சில நன்மைகளை ஏற் படுத்தும் வாய்ப்புண்டு.

ராகு – செவ்வாய் சேர்க்கை ஏற்படுவதால், சிலர் மாதத்தின் கடைசிப் பகுதியில் தங்கள் காரியங்களில் எச்சரிக்கையுடன் செயல்பட வேண் டும். குறிப்பாக மாற்று மதக்காரர்களுடன் பழகு வதில் எச்சரிக்கை வேண்டும். அரசாங்கத்திற்கு எதிராக எதையும் செய்யலாகாது. கேது 11–இல் சஞ்சரிப்பதால் ஞானவான்கள் நட்பு கிட்டும். புதன் வக்ரகதியில் சஞ்சரிப்பதால் உறவினர்கள் சிலர் உங்களுடைய விருப்பத்திற்கு எதிராகச் செயல் படக் கூடும். திருமணம் முதலிய சுப காரியங்கள் தாமதமாகும். வரும் நவம்பர் மாதத்திற்கு மேல் முயற்சிக்கலாம்.

கும்பம்



இம்மாதம் முற்பாதியில் சுபச்செலவு, விரயம் உண்டு. ஒருசிலர் மன அமைதிக் குறைவுடன் காணப்படுவர். அரசாங்கப் பீடை ஏற்பட வாய்ப்பு உண்டு. புதிய பொறுப்பும், சுமையும் வந்தடையக் கூடும். மாதத்தின் பிற்பாதியில் சிற்சில உபத்திரவங்கள், கஷ்டங்கள் நீங்கிவிடும். செவ்வாய் 22–ஆம் தேதிவரை உங்களுக்குத் தைரியம், தன்னம்பிக்கையுடன் செயல்படத் துணை நிற்கும். பின்னர் மனக் கலக்கத்தை ஏற்படுத்தும். குரு – சனி 12–இல் சஞ்சரிப்பதால் ஒருசிலர் குறிப்பாக பிறரது ஆதரவு கிடைக்காதவர்கள், தொண்டு நிறுவனங்கள், ஆசிரமங்கள் நோக்கிச் செல்ல நேரிடும்.

ராகு 4–இல் சஞ்சரிப்பதால் இந்த ராசி அன்பர்கள் நாற்கால் பிராணிகள், வண்டி வாகனங்களைக் கையாள்வதில் கவனம் தேவை. திருமணம் முதலிய சுப காரியங்களை எதிர் நோக்கியுள்ளவர்கள் தங்களது ஜனன ஜாதகத்தை ஆய்வுசெய்து அதன்படி நடந்துகொள்வது நல்லது. 10–இல் கேது சஞ்சரிப்பதால் தொழில் உத்யோகத் தில் நிழல் படிந்தது முதலிய சூழ்நிலையே நிலவும். சுக்கிரன் 20–ஆம் தேதி வரை 12–ஆம் வீட்டில் சனி – குரு சேர்க்கைப் பெற்றுச் சஞ்சரிப்பதால் நேர்மையான நடத்தை அவசியம்.

மீனம்




இம்மாதம் சூரியன் மாதத்தின் முற்பாதியில் லாபஸ்தானத்தில் கூட்டுக் கிரக அமைப்புடன் சஞ்சரிப்பதால் பற் பல நன்மைகள் உண்டு. பொன், பொருள் சேர்க்கையாகும். ஆடம்பரப் பொருள் வாங்கும் யோகம் ஏற்படும். மாதத்தின் பிற்பாதியில் சுபச் செலவு உண்டு. 22–ஆம் தேதி வரை வீண்செலவு செய்வீர்கள். வீண் வார்த்தை விதாண்டவாதம் பேசுவீர்கள். ராகு – செவ்வாய் மாதத்தின் பிற்பாதி யில் சேர்க்கை ஏற்படுவதால், சாகசங்களில் ஈடு பட வேண்டாம். அசட்டுத் துணிச்சல் ஆபத்தாகும்.

9–இல் கேது சஞ்சரிப்பதால் கோயில் ஸ்தலங்களுக்குச் சென்று வரலாம். புதன் வக்ரம் பெற்றுச் சஞ்சரிப்பதால் ஒருசிலர் தற்காலிகமாகத் தன் தாய்வழி உறவினரையோ, வாழ்க்கைத் துணைவரையோ பிரிய நேரிடும். திருமணக் காரியங்களில் ஒருசிலருக்குச் சாதகமானப் போக்குத் தென்படும். வரும் அக்டோபர் வரை திருமண யோகம் உண்டு. சனி – குரு 11–இல் சஞ்சரிப்பதால் இவ்வருடம் உங்கள் தொழில் துறையில் ஏற்றம் ஏற்படும். புதிய முயற்சிகள் பலிக்கும்.

ஆன்மிகம்

பேயாரும் பேயாழ்வாரும்

நீண்ட தமிழிலக்கிய வரலாற்றில் சைவத்தமிழ் இலக்கிய மரபைத் தொடங்கி வைத்தவர் பேயார் ஆவார். சங்ககாலம் தொடங்கி இவர் காலம் (5–ஆம் நுற்றாண்டு) வரையில் சிவனைப் பாடுபொருளாகக் கொண்டு தனி இலக்கியம் எதுவும் பாடப்பட்டதாகத் தெரியவில்லை. பேயார் தாம் ஈசன்மீது முதன்முதலில் அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை, மூத்த திருப் பதிகம் என்னும் சிற்றிலக்கியங்களைச் செய்துள்ளார்.



யார் இந்தப் பேயார்? கட்டிய கணவனே தம்மைத் தெய்வமெனப் பிறழ உணர்ந்து தம் கால்களில் விழுந்து வணங்கியபோது, இல்லறத்தைத் துறந்து இறைவனை வேண்டி "ஊனடை வனப்பை எல்லாம் உதறி" ப் பேய் வடிவம் பெற்ற பெருமாட்டி இவர்.

காரைக்கால் வணிகர்குலத் தலைவனாம் தனதத்தருக்குத் திருமகள் போலப் பிறந்த இவரது இயற்பெயர் புனிதவதி. இறைவன் இவருக்கு அன்போடு வழங்கிய பெயர் அம்மை. இவர் தமக்குத் தாமே சூட்டிக் கொண்ட பெயர் 'பேய்'. சுந்தரர் இவரைப் போற்றிச் சொன்ன பெயர் பேயார். சேக்கிழார் இவரை வணங்கி வழங்கிய பெயர் காரைக்காலம்மை. பத்தரெல்லாம் இவரைக் கும்பிட்டுக் குறிப்பிடும் பெயரோ காரைக் காலம்மையார்.

பேயார் என்றதும் உலகியல் பேய் போல இவரை எண்ண வேண்டா. இவரது வடிவம் என்பது "வானமும் நிலனும் எல்லாம் வணங்கும் பேய் வடிவம்" ஆகும்.

அம்மையார் கொண்ட பேய் வடிவம் தசையெல்லாம் உதிர்த்துப் பெற்ற எலும்பு வடிவமாகும். இப் பேய் உருவம் பற்றிப் பெரிய புராணப் பேருரையாளர் திரு சி.கே.சு. ஐயா அவர்கள், "களிம்பு நீக்கித் தூய்மை ஆக்கப்பட்ட சுத்தமாயா உருவம் வாய்ந்ததும், மக்கள் கண்களுக்குப் புலப்படுவதுமாகிய ஓர் ஒளி பெற்ற திருவுடம்பு" என்று தெளிவுப்படுத்தியுள்ளார்.

காரைக்காலம்மையார் பிறந்து மொழி பயின்ற காலம் முதலே சிவபெருமானிடத்துப் பேரன்பு கொண்டிருந்தவர். எழுபிறப்பும் பெருமானுக்கே அடிமையானவர். பெருமான் தன் நெஞ்சத்தான் என்னும் திட்பம் உடையவர். சிவன் ஒருவனையே நினைந்து, அவனையே உறுதி செய்து மற்றவற்றைப் புறந்தள்ளி, அவனையே மனத்துள் இருத்தி அவனுக்கே ஆளானவர். காணும் அனைத்தையும் கண்ணுதற் கடவுளாகவே கண்ட சிவஞானியாம் காரைக்காலம்மையார் பிற சமயக் காழ்ப்புணர்ச்சி இல்லாத சான்றோராகவும் விளங்கியுள்ளார்.

சிவனை வழிபடு தெய்வமாகக் கொண்ட அவர் திருமாலையும் மதித்து ஒழுகியுள்ளார். சிவபெருமானை, "உன்னைச் சிவனென்று சொல்வேனா? நான்முகன் என்று சொல்வேனா? உயரிய திருமால் என்று சொல்வேனா?" என்ற அம்மையாரது அருள் வாக்கில் சமய நல்லிணக்கச் சாயலைக் காணலாம்.

திருமேனி நாகராசன்



காரைக்கால் அம்மையார்



சேக்கிழார்

"அரன்என்கோ
நான்முகன் என்கோ
அரிய பரன்என்கோ
பண்புரை மாட்டேன்"
(அற்.அந்.பா:18)

சிவனுக்கு மாதொருபாகன் என்னும் மகத்தான திருப்பெயர் உண்டு. அவனில் ஒருபாதி உமையவள் என்றால், மறுபாதியில் அரன் என்பதுதான் மரபு. பேயாரோ சிவனில் ஒரு பாதியில் உமையாளையும், மற்றொரு பாதியில் திருமாலையும் கண்டு மகிழ்ந்து பாடுகிறார். "(இறைவா!) உன் திருமேனியில் ஒரு பக்கம் உலகை அளந்த திருமால் உள்ளார். மறுபக்கம் உமையவள் உள்ளாள். அதனால் உன்னுடலில் இரு பாதியிலும் உன் உருவத்தை என்னால் அறிந்து கொள்ள இயலவில்லை. அப்படியானால், உன் உருவம் என்பது உமையவள் உருவம்தானா? சிவம் என்று ஒன்று இல்லையா?" (அற்.அந்.பா:41)

சிவபெருமானைச் சங்கர நாராயணனாகக் கண்ட முதல் சிவஞானி பேயார்தாம். சைவ – வைணவ இணக்கத்தை நாடிய முதல் ஞானியும் இவரே. பேயார் சமயப் பண்பாட்டை வியந்த அடியார் சிலர் "சிவபெருமானும் திருமாலும் இணைந்து வந்து தரிசனம் அருளினால் எப்படி இருக்கும்?" என்று இவரை வினவிய போது, இவரது விடை பின்வருமாறு அமைந்தது.

"மின்னல் போன்ற சிவந்த சடையையுடைய சிவபெருமான் திருமாலுடன் இங்கு எழுந்தருளினால் காண்பதற்கு எப்படி இருக்கும் என்று நீங்கள் என்னைக் கேட்டால், தன்னைப் போலப் பொன்குன்றும் நீலநிறமுள்ள மாணிக்கக்குன்றும் ஒரு சேர நெடுங்காலமாக நிற்கின்றதைப் போன்றிருக்கும்" (அற்.அந்: பா.83).

இக்கருத்துக்களால் இன்றைக்கு 1600 ஆண்டுகளுக்கு முன்பே சமய நல்லிணக்கத்தை நாடிய முதல் ஞானியாகப் பேயார் விளங்கினார் என்பது தெளிவு.

அம்மையாரின் இந்தச் சமரச மனப்பான்மை பன்னிரு ஆழ்வாருள் முதல் ஆழ்வார் எனப் போற்றப் பெறும் பேயாழ்வாரிடத்தும் காணப் படுவது சிறப்பாக எண்ணத் தக்க தாகும்.

பேயார் காலத்திற்கு ஒரு நூற்றாண்டுக்குப் பின்னர்த் தமிழகத்தில் வாழ்ந்தவர் பேயாழ்வார். மயிலாப்பூரில் தோன்றிய இவர், திருமாலிடத்து அதீத பக்தி கொண்டு பேய்போல ஆடியும், பாடியும் திரிந்ததால் பேயாழ்வாரென அழைக்கப்பட்டார். ஆழ்வாருள் வேங்கடவனைச் சிவன் சாயலில் கண்ட தனித்துவம் உடையவர் இவர்.

பேயாழ்வார் பாடுகின்றார்:– "திரண்ட அருவிகள் பாயும் திருமலையில் எழுந்தருளியிருக்கும் திருவேங்கடவன் தாழ்ந்த சடையும் நீண்ட கிரீட

ஆசன பைரவர்

எமனுக்குத் தனி ஆலயம் உள்ள ஊர் திருவாஞ்சியூர். அங்குள்ள பைரவர் அமர்ந்த நிலையில் உள்ளார். அதனால் 'ஆசன பைரவர்' எனப் போற்றப்படுகிறார். சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் அமர்ந்த நிலை பைரவர் உள்ளார். இவர் 'யோக பைரவர்' என அழைக்கப்படுகிறரா்.

– சீத்தலைச் சாத்தன், திருப்பத்தூர்.

மும் சுடர்வீசும் மழுவும் ஆழிப்படையும் சூழ்ந்திருக்கும் பாம்பும் பொன்னாலான அரைஞாணும் கொண்டு இரு வடிவமும் ஒரு வடிவமாகப் பொலிவார்.

"தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ்அரவும் பொன்நாணும் தோன்றுமால் – சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்(கு)
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து" – பேயாழ்வார்

தாழ்ந்த சடையும், சுடர்வீசும் மழுவும், இடுப்பில் சூழ்ந்திருக்கும் பாம்பும், சிவனுக்கு உரியவையாகும். நீண்ட கிரீடமும், ஆழிப்படையும், பொன் அரைஞாணும் திருமாலுக்கு உரியவையாகும். திருவேங்கடன் இந்த இரண்டு உருவமும் ஓர் உருவமாகக் காட்சி அருள்கின்றார் என்பது கருத்து.

பேயார் சைவத்திற்கும் வைணவத்திற்கும் இணக்கம் காண விரும்பியது போலவே, பேயாழ்வாரும் வைணவத்திற்கும் சைவத்திற்கும் இணக்கம் காண விழைந்துள்ளார். இவ்விரு ஞானியரும் தத்தம் சமயக் கொள்கையில் ஊன்றி நின்ற சமயச் சகிப்புச் சால்பினர் என்றே சரித்திரம் காட்டுகிறது.

காலத்தாலும், இடத்தாலும், சமயத்தாலும், நாயன்மாரும் ஆழ்வாரும் வேறுபட்டிருந்தாலும் சமய இணக்கமுடைமைக்கு இருவருமே இனிய எடுத்துக்காட்டாக இலங்குகின்றனர். புறநானூற்றுப் புலவர் கண்ணகனார் கூறுவது போலக் காலம், இடம் முதலியவற்றைக் கடந்து சான்றோர் கருத்துக்கள் என்றும் ஒன்றாகவே இருக்கும் என்பது உறுதியாகின்றது. "சான்றோர் சான்றோர் பாலர் ஆப" (புறம்.பா:198).

●



இவன்தான் மகன்!



நானும் என் மருமகனும்
அரசியல் பேசியவாறு
காலை உணவு
சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்!
மகள் பரிமாறினாள்!

சாப்பிட்டு முடித்து
மருமகன் எழுந்தார்!
'தட்டைக் கொண்டுபோய்
'சிங்க்'கில் போடுங்க!' என்றாள்.

ஐந்து நிமிடம் கழித்து
நான் சாப்பிட்டு முடித்தேன்!
தட்டை எடுக்கப் போனேன்!
'நீ ஏம்ப்பா தட்டை எடுக்கறே? வை!
அங்க நம்ம வீட்டிலே நீயா
தட்டு எடுக்கறே?' என்று கேட்டுவிட்டு
எனது எச்சில் தட்டைப்
பிடுங்கிக் கொண்டு போனாள்!


மருமகன் சிரித்துக் கொண்டே நகர்ந்தார்.
விக்கித்து நின்றேன்.

விழித் திரைக்குள் ஏதோ ஒன்று
நிறைந்ததுபோல் உணர்ந்தேன்!

– ஜெ. கமலநாதன்

கட்டுரை

காந்திஜிக்கு கம்யூனிஸ்டு தலைவரின் கடிதம்!




தோழர் பி.சி. ஜோஷி

காந்திஜி பற்றி உலகத்திற்குத் தெரியும். அகிம்சைக் கொள்கையை உருவாக்கியவர். சத்தியத்தைத் தனது வாழ்க்கையாகக் கடைப்பிடித்து வாழ்ந்தவர். அகிம்சைக் கொள்கையில் நம்பிக்கையிலுள்ள காந்திஜி, பலாத்காரம் என்ற வன்முறைக்கு எதிரானவர். தனிமனித வாழ்க்கையிலும் தேச விடுதலைப் போராட்டத்திலும் அகிம்சையை வலியுறுத்தி அதன்படி வாழ்ந்தவர்.

அகிம்சைக்கு எதிரானக் கோட்பாடு – பலாத்காரம், வன்முறை, கலகம், தீவைத்தல், இறுதியாகப் புரட்சி என்பவையாகும். காந்திஜி இவை அனைத்தையும் நிராகரித்தவர். குறிப்பாக, கம்யூனிச சித்தாந்தத்தின் பலாத்காரத்திற்கு எதிரானவர். கம்யூனிச சித்தாந்தத்தின் இறுதி லட்சியமும், காந்தியத்தின் இறுதி லட்சியமும் ஒன்றுதான் என்றாலும், அகிம்சை – பலாத்காரம் என்ற முரண்பாடு உள்ளவை.

கம்யூனிசத்தில், முதலாளி வர்க்கம் என்பதை காந்திஜி தர்மகர்த்தா என்று ஒரு சிந்தனை மாற்றத்தை உருவாக்கியவர். கம்யூனிசத்திற்குப் பலாத்காரம் அவசியப்படுகிறது. காந்தியமோ, 'செய் அல்லது செத்துமடி' என்று தன்னைத் தானே துன்புறுத்திக் கொள்கிற வழியைத்தான் காட்டியது. அதுமட்டுமல்லாமல், 'உன்னதமான லட்சியத்தை அடைய அதற்கான வழியும் உன்னதமானதாகத்தான் இருக்க வேண்டும்' என்றவர் காந்திஜி.

லட்சியம் என்பது படித்துப் பட்டம் வாங்குவதைப் போன்றது. அதே பட்டத்தைக் காப்பி அடித்துப் பெறுவது, சரியான வழியல்ல. பட்டம் பெறுவது லட்சியம் என்றால், அதற்குரிய உன்னத வழி, சிரமப்பட்டுப் படிப்பது தான். இதில் சமரசம் கிடையாது.

கம்யூனிசமோ, முதலாளித்துவ ஆட்சியை எதிர்க்க வேண்டும் என்கிறது. அதற்குரிய வழி கலவரம் செய்வது. காந்தியமோ, முதலாளிகளைத் திருத்தி, அவர்களையும் உள்ளடக்கிய சமூகத்தை அமைக்க வழிகாட்டுகிறது.

இந்தப் பின்புலத்தில், 1944–இல் பூரணச்சந்திர ஜோஷி என்ற கம்யூனிஸ்டு தலைவர் பி.சி. ஜோஷி, காந்திஜிக்குக் கடிதம் எழுதியிருக்கிறார். காந்திஜி அவருக்குப் பதில் கடிதம் எழுதியிருக்கிறார்.

பி.சி. ஜோஷி இன்றைய மும்பையில் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளராக இருந்தபோது, அவருடைய தனி உதவியாளராக யார் பணி புரிந்தார் என்பதைத் தெரிந்தால், நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! அந்த உதவியாளர் ஒரு பெண். தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் சுப்பராயன்


இந்திராகாந்தி


பார்வதி
கிருஷ்ணன்

அவர்களின் ஒரே மகள் பார்வதி கிருஷ்ணன்.

பார்வதி, முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியின் கல்லூரித் தோழி. லண்டனில் தனது படிப்பை முடித்துவிட்டு, கம்யூனிச சித்தாந்தத்தில் ஈடுபாடு கொண்ட காரணத்தால், செல்வி பார்வதி அன்றைய பம்பாயில் பி.சி. ஜோஷியின் தனி உதவியாளராக ரூ. 12 சம்பளத்தில் சேர்ந்து பணி செய்தார். பிறகுதான் டாக்டர் கிருஷ்ணனுடன் அவருக்குத் திருமணம் நடந்தது.

இத்தகைய சிறப்புவாய்ந்த அறிவாளியான பி.சி. ஜோஷி, காந்தியத்தில் அளவற்ற மதிப்புடையவர். அவருக்கும் காந்திஜிக்கும் நடந்த கடிதப் போக்குவரத்துக்கள் சுவையானவை.

நமது வாசகர்கள் ஒரே ஒரு கடிதத்தையாவது படிப்பதற்கு பி.சி. ஜோஷி காந்திஜிக்கு எழுதிய ஒரு கடிதத்தையும், காந்திஜி பி.சி. ஜோஷிக்கு எழுதிய ஒரு கடிதத்தையும் மட்டும் கீழே வெளியிட்டுள்ளோம். இவற்றை மொழிபெயர்த்தவர் கம்யூனிஸ்ட் தலைவர் தோழர் பி. ராமமூர்த்தி. எத்தனை உன்னதமான இந்த மனிதர்கள் தங்கள் கொள்கையை மட்டுமே முன்னிறுத்தி ஒருவருக்கு ஒருவர் முரண்பட்டிருக்கிறார்களே தவிர, தரம்தாழ்ந்த அரசியலில் இத்தலைவர்கள் ஈடுபடவே இல்லை. அந்த இரண்டு கடிதங்கள் :

பி.சி. ஜோஷி,

காந்திஜிக்கு எழுதிய கடிதம் :

பம்பாய்,

மே 6, 1944

அன்புமிக்க காந்திஜி,

கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பாக உங்களை வரவேற்கிறேன். நாட்டு மக்கள் நீங்கள் சீக்கிரம் குணமடைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றனர். நீங்கள் சீக்கிரமே உடல்நலம் பெற வேண்டுமென நாங்களும் விரும்புகிறோம். நாட்டின் மிகப்பெரிய தேசபக்தி வாய்ந்த ஸ்தாபனத்தின் மக்களால் எல்லோரையும்விட, அதிகமாக நேசிக்கப்படும் தலைவர் நீங்கள். ஜனங்கள் அரசியல் நெருக்கடியைத் தீர்க்க வழியுண்டா என்று உங்களை நீண்ட காலமாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். இந்த நெருக்கடியின் விளைவாய் நாடெங்கும் பஞ்சம் ஏற்பட்டுள்ளது; ஜப்பானியத் தாக்குதல் ஆரம்பித்துள்ளது. நம் மக்களுக்கு உணவு கிட்டவும், நாடு சுதந்திரம் எய்தவும் தேசபக்தியின் அடிப்படையில் ஒற்றுமையை நிறுவ தேசம் உங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. இவ்வழியைக் காட்டும் வண்ணம் நீங்கள் சீக்கிரம் பூரண குணமடையும் நன்னாளை நாங்கள் அவலுடன் எதிர்பார்க்கிறோம்.

எங்கள் கட்சி அனுஷ்டித்து வரும் கொள்கையை விளக்கவும், நீங்கள் வெளியில் இல்லாத காலத்தில், தேசத்தைக் காக்க நாங்கள் செய்த சிறு முயற்சியைப் பற்றி ஒரு ரிப்போர்ட்டு சமர்ப்பிக்கவும் நான் சித்தமாகக் காத்திருக்கிறேன்.

எங்கள் கட்சியின் சார்பாக வணக்கம் செலுத்த உங்களுக்கு ஏற்கெனவே அறிமுகமான தோழர்

பாட்லி வாலாவை அனுப்புகிறேன்.

அன்புள்ள,

பி.சி. ஜோஷி

மகாத்மா காந்தி, பி.சி. ஜோஷிக்கு எழுதிய கடிதம் :



ஜூஹு

ஜூன் 11, 1944

அன்புள்ள ஜோஷி,

நாம் சந்தித்தபோது, நான் கிளப்பிய பிரச்சினைகளுக்கு உடனே பதில் அனுப்புவீர்களென்று எதிர்பார்த்தேன். அதற்கிடையே சில புதிய கேள்விகள் எழுந்திருக்கின்றன. நான் முதலில் கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளிக்கும் போது இக்கேள்விகளுக்கும் பதில் அளிக்கவும்.

1. *"பொதுஜன யுத்தம்" என்ற சொற்றொடரில், "பொது ஜனம்" என்ற பதத்திற்கு என்ன அர்த்தம்? கோடிக்கணக்கான இந்திய மக்களின் சார்பில், அல்லது தென் ஆப்பிரிக்கா அல்லது மேற்கு ஆப்பிரிக்காவிலுள்ள நீக்ரோ மக்களின் சார்பில், அல்லது அமெரிக்காவிலுள்ள நீக்ரோ மக்களின் சார்பில், அல்லது மேற்கூறிய எல்லா மக்களின் சார்பிலும் நடக்கும் யுத்தம் என்பதுதான் பொருளா? நேசக் கட்சியினர் இப்படிப்பட்ட ஒரு யுத்தத்திலா ஈடுபட்டிருக்கின்றனர்?*
2. *உங்களைப் பிரதிநிதியாகக் கொண்ட கம்யூனிஸ்டுக் கட்சியின் வரவு செலவுகள் பகிரங்கத் தணிக்கைக்குட்பட்டவையா? அப்படியாயின் நான் அவைகளைப் பார்க்கலாமா?*
3. *கடந்த இரண்டு வருஷங்களில் தொழிலாளர் வேலைநிறுத்தங்களை நடத்தும் தலைவர்களைக் கைது செய்வதில் அதிகாரிகளுக்குத் தீவிரமாக உதவியளித்திருப்பதாகக் கூறப்படுகிறது.*
4. *கம்யூனிஸ்டுக் கட்சி காங்கிரஸ் ஸ்தாபனத்தை விரோதமான எண்ணத்தோடு ஊடுருவும் கொள்கையைக் கடைப்பிடித்திருப்பதாகக் கூறப்படுகிறது.*
5. *கம்யூனிஸ்டுக் கட்சியின் கொள்கை வெளிநாட்டிலிருந்து வரும் உத்தரவுகளைப் பொறுத்ததில்லையா?*

அன்புள்ள,

எம்.கே. காந்தி.



உப்புமா குத்துகிறதா?

குழந்தைக்கு அதன் அம்மா உப்புமா ஊட்டிக் கொண்டிருந்தார். எதனாலோ அந்தப் பழைய உப்புமா குழந்தைக்குப் பிடிக்கவில்லை. அருகில் இருந்தார் கி.வா.ஜ.

'உப்புமாவைத் தின்ன' முடியலையோ! உப்புமா ஏன் தொண்டையைக் குத்துகிறதா?" எனக் குழந்தையைக் கோபித்துக் கொண்டார் அந்தப் பெண்மணி.

கி.வா.ஜ. அந்தப் பழைய உப்புமாவை வாங்கி வாயில் போட்டுக் கொண்டு பார்த்தார். பிறகு "ஆமாம். இந்த உப்புமா தொண்டையைக் குத்தத்தான் செய்யும்" என்றார்.

ஏன் என்று அந்த அம்மா கேட்டார். **'ஊசி இருக்கிறது'** என்று கூறிச் சிரித்தார் கி.வா.ஜ.!

ஓம் சக்தி

ஆருயிர்களுக்கு எல்லாம் – நான்
அன்புசெயல் வேண்டும்.
– வள்ளலார்

மலர் : 39 பிப்ரவரி 2021 இதழ் : 1

நிறுவனர் : **நா. மகாலிங்கம்**

ஆசிரியர் & வெளியிடுபவர் : **ம. மாணிக்கம்**

Editor & Publisher : **M. MANICKAM**

அச்சிடுபவர் : **து. ராஜ்குமார்**

Printer : **T. RAJKUMAR,**

Rukmani Offset Press

ருக்மணி ஆப்செட் பிரஸ்,
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோவை – 641 021.

இணையாசிரியர் : **பெ. சிதம்பரநாதன்**

கதை, கவிதைகளில் வரும் பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

படைப்புகளைச் சுருக்கவோ, திருத்தி அமைக்கவோ ஆசிரியருக்கு உரிமை உண்டு.

‘ஓம் சக்தி’யில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகள் அவற்றின் எழுத்தாளர்களுக்கு உரியவையே தவிர, பத்திரிகை அவற்றிற்குப் பொறுப்பேற்காது.

தனிப் பிரதி ரூ.15/-
ஆண்டு சந்தா ரூ. 265/-
(தீபாவளி மலர் உட்பட)
ஆயுள் சந்தா ரூ. 2000/-
(10 ஆண்டுகள்)

சந்தா தொகையை “SAKTHI SUGARS LTD. A/c OMSAKTHI” என்ற பெயரில் D.D.–யாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர், ஓம் சக்தி
69–ஏ, ஆரோக்கியசாமி சாலை (மேற்கு),
ஆர்.எஸ்.புரம், கோவை – 641 002
போன் : 0422–4322471, 0422–4322423

வெளியிட்டோர் : **சக்தி சுகர்ஸ் லிமிடெட்.**

E-mail : omsakthieditorial@gmail.com



சமையல்

சோயா கீர்

தேவையான பொருள்கள் : சோயாப் பயறு : 100 கிராம், பால் ; 1/2 டம்ளர், சர்க்கரை : 4 மேசைக் கரண்டி, முந்திரிப் பருப்பு : 8, நெய் : 2 தேக் கரண்டி, ஏலக்காய்த் தூள் 1/4 தேக் கரண்டி.

செய்முறை :

1. முந்திரிப் பருப்பை நெய்யில் வறுத்து, ஆறினதும் மிக்சியிலிட்டுப் பொடி யாக அரைத்துக் கொள்ளவும்.
2. சோயாப் பயறை 12 மணி நேரம் ஊறவைத்து எடுத்து மிக்சியில் கூழாக அரைத்துக் கொள்ளவும்.
3. இத்துடன் பால் ஊற்றி, போதுமான அளவு நீர் சேர்த்துக் கொதிக்க விட வும்.
4. கலவை நன்கு கொதித்ததும், சர்க்கரை, முந்திரிப் பருப்பு, ஏலக்காய்த் தூள் சேர்த்து, இரண்டு நிமிடத்தில் இறக்கவும்.

சுவையான ‘சோயா கீர்’ தயார். சூடாகக் குடித்தால் மிகவும் சுவையாக இருக்கும். ஜில்லெனக் குடிக்க விரும்பு வோர், ஆறினதும் பிரிஜ்ஜில் வைத்து, இரண்டு மணி நேரத்திற்குப் பின் எடுத்துக் குடிக்கலாம்.

– **ரமா மோகன்ராஜ்,** சென்னை.

சிறுகதை

தாய்ப்பால்



தாயில்லாமல் தாய்ப்பாலுக்கு எங்கே போவது? கண் கலங்கினான் கண்ணன். என்ன செய்வது? யாது செய்வது? என்று தெரியாமல் கன்னத்தில் கை வைத்தபடி கவலையுடன் உட்கார்ந்திருந்தான். மனைவியை இழந்தோம், குழந்தையையும் இழந்துவிடுவோமோ?

கண்ணனின் நாடித் துடிப்பு அதிகமானது. மூச்சின் வேகம் அதிகரித்தது. சுய உணர்வைப் பாதி இழந்த நிலையில், அங்குமிங்கும் நடந்து கொண்டிருந்தான். "கடவுளே! எல்லாம் நல்லபடி நடக்க வேண்டும். என் மனைவிக்கும் குழந்தைக்கும் எந்த ஆபத்தும் வந்துவிடக் கூடாது" அடிக்கடி கடவுளை வேண்டிக் கொண்டான்.

கண்ணனின் மனைவிக்கு இது முதல் பிரசவம். திருவனந்தபுரத்தில் ஒரு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தாள். துரதிஷ்டவசமாக அறுவைச் சிகிச்சைப் பிரசவமாக அது அமைந்தது.

அதனால்தான் கண்ணன் கலங்கிப் போயிருந்தான். சாதாரணமாகப் பிரசவம் என்றாலே ஒரு பெண் செத்துப் பிழைப்பதாகும். ஆபத்தான ஒரு விபத்து அது. அவள் அந்த நேரத்தில் அனுபவிப்பது வேதனையின் உச்சம். அதுவும் ஆபரேசன் பிரசவம் என்றால் கேட்கவா வேண்டும்?

என்ன ஆகுமோ... ஏது ஆகுமோ... என்று பயந்தபடி நின்று கொண்டிருந்தான் கண்ணன். அப்போது "கண்ணன்... கண்ணன்..." என்று குரல் கேட்க, "நான்தான்... நான்தான்..." என்று ஓடி வந்தான்!

"உங்களுக்கு ஆண் குழந்தைப் பிறந்திருக்கிறது" நர்ஸ் கூறியதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தான் கண்ணன். 'அப்பாடா...' என்று பெருமூச்சுவிட்டான். உறவினர்களிடம் கூறி மகிழ்ந்தான்.

வார்டுக்குள் சென்று குழந்தையைப் பார்த்துப் பரவசமடைந்தான். வாரிசு ஒன்று உருவானதை நினைத்துப் பூரிப்படைந்தான். அதுவும் ஆண் குழந்தை என்றவுடன் மகிழ்ச்சி இரட்டிப்பானது. மலர்ந்த முகத்துடன் மனைவியின் அருகில் அமர்ந்து, அவள் தலையைப் பாசமாகத் தடவிவிட்டான். சோர்வாகக் காணப்பட்ட மனைவியிடம் ஆறுதல் வார்த்தைகளைக் கூறினான்.

"குழந்தை உங்களைப் போலவே மூக்கும் முழியுமா இருக்கிறது" என்று மனைவி சொல்லக் கேட்டு வெட்கப்பட்டான்.

அப்போது டாக்டர் அறைக்குள் நுழைந்தார்.

"கண்ணன், கொஞ்சம் கஷ்டமான பிரசவம். ஆபரேசனும் கொஞ்சம் கடினமாகத்தான் இருந்தது. அதனால நல்ல முறையில கவனிக்கணும். சரியான நேரத்தில மருந்து மாத்திரைகளைக் கொடுக்கணும். ஏதாவது பிரச்சனை என்றால் உடனே நர்ஸ்ஸைக் கூப்பிடணும், சரியா?"

டாக்டரின் அறிவுரையின்படி, மனைவியின் அருகிலே அமர்ந்து நல்ல முறையில் கவனித்துக் கொண்டான்.

இன்னும் ஓரிரு நாளில் மருத்துவ மனையிலிருந்து டிஸ்சார்ஜ் ஆகி வீட்டுக்குப் போய்விடலாம் என்று எண்ணிக் கொண்டிருந்தபோது, திடீ ரென மனைவியின் உடல்நிலையில் பாதிப்பு ஏற்பட்டது. குளிர் ஜுரம் தொடங்கியது. சிறிது நேரத்தில் ஜன்னி யும் ஏற்பட்டது. உடனடித் தீவிர சிகிச் சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார். உயர் மருத்துவர்கள் விரைந்தனர்.

மருத்துவம் அவள் உயிரைக் காப் பாற்றத் துடித்தது. மருத்துவர்கள் அவளை மீட்டெடுக்கப் போராடினர். பலன் பயனற்றுப் போயிற்று. மனைவி இறந்துவிட்டாள்.

செய்தியைக் கேட்டுத் துடியாய்த் துடித்தான் கண்ணன். நெஞ்சிலும் தலை யிலும் கைகளால் ஓங்கி அடித்தான். மருத்துவமனை என்றுகூடப் பார்க் காமல் ஓ...வென்று கத்தி அழுதான்.

கண்ணனின் மனைவி காதல் மனைவி. அதுவும் கலப்புத் திருமணம். கைகலப்புத் திருமணமும்கூட. மனிதர் களால் உருவாக்கப்பட்ட ஜாதியில் அவள் உயர்ஜாதி, கண்ணன் தாழ்ந்த ஜாதி. ஒரே அலுவலகத்தில் வேலை பார்த்தபோது, இரு மனமும் இணைந்து திருமணத்தில் முடிந்தது.

பலத்த எதிர்ப்புக்களுக்கிடையே கண்ணனின் கரம்பிடித்தாள் அவள். அதனால் மனைவியின் மீது உயிரே வைத்திருந்தான் அவன். அளவுகடந்த அன்பும் பாசமும் வைத்திருந்தான். அதனால்தான் அவளின் பிரிவை அவ னால் தாங்க முடியவில்லை. எல்லாம் சில மணித் துளிகளில் நடந்து முடிந்து விட்டன. கண்ணனின் காதல் மனைவி யைக் காலன் அழைத்துச் சென்றுவிட் டான். நடைப் பிணமானான் கண்ணன்.

மறுநாள், மருத்துவமனையின் கண் காணிப்பில் இருந்த குழந்தையைப் பார்ப்பதற்காகச் சென்றான் கண்ணன். மருத்துவரைச் சந்தித்தான்.

“கண்ணன்... குழந்தைக்கு அவசர மாகத் தாய்ப்பால் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் குழந்தையின் உயி ருக்கே ஆபத்து ஏற்படலாம். எனவே உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்யுங் கள்” அவசரப்படுத்தினார் டாக்டர்.

தாயில்லாமல் தாய்ப்பாலுக்கு எங்கே போவது? கண் கலங்கினான் கண்ணன். என்ன செய்வது? யாது செய் வது? என்று தெரியாமல் கன்னத்தில் கை வைத்தபடி கவலையுடன் உட்கார்ந் திருந்தான். மனைவியை இழந்தோம்,



நு. ஹாஜா

குழந்தையையும் இழந்துவிடுவோமோ? என்று பயந்தான்.

அப்போது, “கண்ணா... டேய் கண்ணா...” என்று குரல் கேட்டுத் தலை நிமிர்ந்தான். அங்கே அவன் நண்பர் இப்ராஹிம் நின்று கொண்டிருந்தான்.

“என்னடா? இங்க உட்கார்ந்திருக்க. கண்ணெல்லாம் கலங்கிப் போயிருக்கு. என்ன விசேஷம்? ஆஸ்பத்திரியில யாராவது அட்மிட் ஆயிருக்காங்களா?”

நண்பனைக் கண்டதும் கண்ணன் குழந்தையைப் போல் விக்கிவிக்கி அழ ஆரம்பித்தான்.

"அழாதே... என்ன ஆச்சு சொல்லு...?"

கண்ணன் நடந்தவற்றை ஒன்று விடாமல் நண்பனிடம் கூறினான்.

"மனைவி இறந்த விஷயத்தை ஏண்டா எங்கிட்ட சொல்லல..." உரிமையோடு கோபித்துக் கொண்டான் நண்பன் இப்ராஹிம்.

"கொரோனா ஆனதினால யாரு கிட்டேயும் சொல்லல. மனைவி இழந்த வேதனையில எனக்கு எதுவும் தெரியல..."

"சரி! சரி! கவலையை விடு! நெனெச்சுப் பார்த்தா எனக்கும் ரொம்ப வேதனையாகத்தான் இருக்கு, என்ன செய்ய, எல்லாம் விதி. இனிக் குழந்தையை நல்லா வளர்க்கப்பாரு" நண்பன் ஆறுதல் கூறினான்.

"குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்கணும்னு டாக்டர் சொல்றாரு. என்ன செய்யணும்னு தெரியல. சரி! நீ எங்க இங்கே வந்திருக்கே. யாராவது அட்மிட் ஆயிருக்காங்களா...?"

"என்னுடைய மனைவி இங்கேதான் அட்மிட் ஆயிருக்கா. அவளுக்கு நேத்துக் காலையில பிரசவம் நடந்தது. சுகப்பிரசவம்தான். அதுவும் ஆண் குழந்தைதான். சரி, நீ இங்கேயே இரு. நான் மனைவியைப் பார்த்துவிட்டு வருகிறேன்" என்று கூறிவிட்டு, அவன் மனைவி இருக்கும் அறைக்குச் சென்றான்.

கண்ணனும் இப்ராஹீமும் நெருங்கிய நண்பர்கள். திருவனந்தபுரம் பல்கலைக்கழகக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தவர்கள். ஒரே மாணவர் அணியில் செயல்பட்டவர்கள். முற்போக்குச் சிந்தனை உடையவர்கள். கண்ணனின் கலப்புத் திருமணத்திற்கு இப்ராஹீம் மாப்பிள்ளைத் தோழனாக இருந்து பல உதவிகளைச் செய்தவன். இருவரும் இப்போது பல்வேறு அரசு துறைகளில் வேலை பார்க்கிறார்கள்.

மனைவியைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்தான் நண்பன் இப்ராஹிம்.

"கண்ணா! ஒரு சந்தோஷமான செய்தி. என்னுடைய மனைவியே உன் குழந்தைக்கும் தாய்ப்பால் தரச் சம்மதித்துவிட்டாள். அதனால் கவலையை விடு. டாக்டரைப் பார்த்து விஷயத்தைச் சொல்வோம் வா."

இதைக் கேட்டதும் ஆனந்த கண்ணீர் வடித்தான் கண்ணன். நண்பனின் கைகளை இறுகப் பிடித்தான். "ரொம்ப நன்றிடா. எனக்கு என்ன சொல்லணும்னு தெரியலடா. குழந்தையையும் பறிகொடுத்து விடுவேன்னு பயந்தேன். நல்ல நேரத்தில கடவுள் உன்ன இங்கு அனுப்பி வைச்சாரு. இந்த உதவியை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன்டா. உன் மனைவி தெய்வம்டா.

"தன்னுடைய அழகு கெட்டு விடும்னு பெத்த குழந்தைக்கே தாய்ப்பால் கொடுக்கத் தயங்குகிற இந்தக் காலத்தில, உன் குழந்தையோடு என் குழந்தைக்கும்

குட்டிக் கதை

காற்று

தலைவலி என்று படுத்திருந்த மனைவி நந்தினியை 'இப்ப எப்படியிருக்கு?" என்று கேட்டான் கணவன் சிவா.

'கடவுள் புண்ணியத்தில் சரியாகிவிட்டது' என்றாள்.

'அப்பா, அம்மா கடவுள் புண்ணியத்தில் என்று சொன்னாங்களே, கடவுள் இருக்கிறாரா?' என்று எட்டு வயது மகன் பாபு கேட்டான்.

உடனே சிவா, பாபுவின் முகத்தில் 'பூ...' என்று ஊதினான்.

'இப்போ உன் முகத்தில் என்ன பட்டது?' என்றான்.

'காற்று' என்று சொன்னான் பாபு.

'அதெப்படி காற்றுன்னு சொல்றே?'

'அதை ஃபீல் பண்ணினேன்.'

'காற்றை உணரலாம். அதைப் பார்க்க முடியாது, இல்லை.

அதுபோலத்தான் கடவுளை நம் பக்தியால் உணரலாம். அவரைப் பார்க்க முடியாது. நாம் நம்பிக்கையுடன் வணங்கினால் தான் அவரை உணர முடியும்.'

அப்பா சிவா சொன்ன விளக்கம், பாபுவிற்குப் புரிய 'ஓ.கே.. அப்பா புரிந்தது' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

– உஷா முத்துராமன்.



சேர்த்துத் தாய்ப்பால் கொடுக்க முன் வந்த உன் மனைவி உண்மையிலே தெய்வம்தான்டா. மதம் பார்க்காமல், அதிலையும் ஜாதி பார்க்காமத் தாய்ப்பால் கொடுக்கச் சம்மதித்த அந்தத் தெய்வத்தை நான் ஒருகாலும் மறக்க மாட்டேன்டா.”

“உனக்கு ஒரு விஷயம் தெரியுமா? ஐயா பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்குத் தாய்ப்பால் கொடுத்தது ஒரு முஸ்லீம் தாய்தான்டா. பிராமண வகுப்பைச் சார்ந்த கவிஞர் வாலிக்குத் தாய்ப்பால் கொடுத்ததும் ஒரு முஸ்லீம் தாய்தான்டா. ஒரு முஸ்லீம் தாயிடம் என் குழந்தைத் தாய்ப்பால் குடிப்பதை நான் பெருமையா கருதுகிறேன்டா...” உணர்ச்சிவசப்பட்டான் கண்ணன்.

வணக்கத்திற்குரிய கால்கள்





'சிந்தனைக் கவிஞர்'
டாக்டர் கவிதாசன்

கால்கள்
கைம்மாறு கருதாத
ஆயுட்கால ஊழியர்கள்!

மகாபலியின்
ஆணவத்தை அடக்கிய
வாமனனின் கால்கள்
வணக்கத்திற்குரியவை!

வனவாசத்தில்
ராமனின் கால்கள்
அகலிகைக்கு
சாபவிமோசனம் வழங்கின!

உப்பு சத்தியாகிரகத்தில்
நடந்த காந்தியின் கால்கள்
ஆங்கில ஆதிக்கத்தையே
அதிர வைத்தன!

தடம் மாறும் கால்கள்
தலைமுறைகளுக்குப் பாவத்தை
சேர்க்கும் துர்பாக்கியசாலிகள்!

தடம் பதித்து நடக்கும் கால்களோ
வரலாற்றின் பக்கங்களில் -
முகப்பு எழுத்துக்களாக
காலம் கடந்தும் கவுரவப்படுகின்றன

ஊதியம் கோராது உழைத்த
கால்களுக்கு நன்றி சொல்லவே
தோளில் சுமக்கிறார்கள்
இறுதி யாத்திரையில்...



‘அப்துல்கலாம் – நினைவுகளுக்கு மரணமில்லை’ நூல் வெளியீட்டு விழா!

மேதகு வெங்கையா நாயுடு சென்னையில் வெளியிட்டார்

நூலை வெளியிட்ட மேதகு வெங்கையா நாயுடு, நசீமா மரைக்காயர், சக்தி குழுமத் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம், மொழிபெயர்ப்பு மைய இயக்குநர் கவிஞர் சிற்பி, ஷேக் சலீம் ஆகியோர்.

டாக்டர் ஒய்.எஸ். ராஜன், ஏ.பி.ஜெ.எம். நசீமா மரைக்காயர் ஆகியோர் இணைந்து எழுதிய **‘அப்துல்கலாம் – நினைவுகளுக்கு மரணமில்லை’** எனும் அப்துல்கலாம் வாழ்க்கை வரலாற்று நூலை சென்னை ஆளுநர் மாளிகையில் மேதகு குடியரசுத் துணைத் தலைவர் வெங்கையா நாயுடு 17.1.2021 ஞாயிறன்று வெளியிட்டார். பொள்ளாச்சி அருட்செல்வர் நா. மகாலிங்கம் மொழிபெயர்ப்பு மையம் இதனை வெளியிட்டுள்ளது.

மேதகு வெங்கையா நாயுடு பேசுகையில், “புத்தகத்தைத் தமிழில் எழுதியதற்காக விண்வெளி விஞ்ஞானி டாக்டர் ஒய்.எஸ். ராஜன், ஏ.பி.ஜெ.எம். நசீமா மரைக்காயர் ஆகிய நூலாசிரியர்களை நான் பாராட்டுகிறேன். பெரும்பான்மையான மக்களைச் சென்றடைய தாய்மொழியில் எழுதுவதுதான் சிறந்தது.

நமது விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைகளில் தற்சார்பு இந்தியாவுக்கு வலுவான அடித்தளம் அமைத்த பெருமை டாக்டர் அப்துல் கலாமையே சாரும். அவர் தந்த தன்னம்பிக்கைதான் விஞ்ஞானிகளைத் தடுப்பூசி உருவாக்கத் தூண்டியுள்ளது.

நம் நாட்டில் 65 சதவீத மக்கள் 35 வயதுக்கும், 50 சதவீதம் பேர் 25 வயதுக்கும் கீழே உள்ளனர். இந்த இளைஞர்களுக்கான நூல் இதுதான். டாக்டர் கலாம் மாணவர்களுடன் உரையாட எப்போதும் அவர், பள்ளிகளுக்குச் சென்றார். தனது பேச்சு மற்றும் உற்சாகமான புன்னகையால் ஆயிரக்கணக்கான மாணவர்களை ஊக்கப்படுத்தினார்” என்றார்.

இந்த விழாவில் நூலாசிரியர் ஏ.பி.ஜெ.எம். நசீம் மரைக்காயர், சக்தி தொழிற் குழுமத் தலைவர் டாக்டர் ம. மாணிக்கம் கலந்து கொண்டனர். மொழிபெயர்ப்பு மையத்தின் இயக்குநர் சிற்பி பாலசுப்பிரமணியம் நூலை அறிமுகம் செய்து உரையாற்றினார். அப்துல் கலாம் பன்னாட்டு அறக்கட்டளையின் துணை நிறுவனர் ஏ.பி.ஜெ. எம்.ஜெ. ஷேக் சலீம் நன்றி கூறினார்.

நூல் வேண்டுவோர் : 9976144451, 9445637190, 8667380700 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

பாரதியின் புதுமைப் பெண்!

கண்ணே கண்மணியே – உன்னை
தனியாகத் தொட்டிலிட
தாய்மனசு தாங்காமல்
தமிழோடு கண்ணுறங்க
தாலாட்டுப் பாடுகிறேன்!

பெண்ணே பெண்மணியே – என்னை
பெருமைப்பட வைத்தவளே!
வண்டுகளை ஆணென்றும்
வாசமலர் பெண்ணென்றும்
வருணிப்பார் புலவரெலாம்


வாசமகளே அப்பெருமிதத்தை – எண்ணி
எண்ணிக் கண்ணுறங்கு!
இன்றைய இரவோடு நம்
இழிவுகளும் விடியட்டும்
அச்சமெலாம் முடியட்டும்!

குறிஞ்சிக்கு இளையவளே – கண்ணே
குலப்பெருமை உடையவளே!
தங்கச்சுரங்கமெனத் தாய்வயிறை
மங்கலமாய்ச் செய்தவளே
மரகதமே கண்ணுறங்கு!

சாண்பிள்ளை யானாலும் – ஒன்னு
ஆண்பிள்ளை வேண்டுமெனும்
அறியாமை வாதிகளை
திருத்துகிற படைக்குன்னை
தலைமைப் படுத்துகிறேன்!

பெண்ணாய்ப் பிறந்தாலே – பொன்னே
கண்ணீரே கதியென்ற
தலைவிதியை மாற்றும்
கலைமகள் வீணையே
கண்ணுறங்கு! கண்ணுறங்கு!

அறிவுத்தேவி சரசுவதி
ஆணல்ல, அவள் பெண்தான்
பாரதியின் பெண்ணே
களப்பணிக்கு உரியவளே
காலம்வரும் கண்ணுறங்கு!



– சிபி

சென்ற இதழ் தொடர்ச்சி

பயணக் கட்டுரை

கார்ட்டூனிஸ்ட் மதி



பேலூர் பயணம்

இரவு இதுபற்றிய பேச்சு எனக்கும் எனது மனைவிக்கும் இடையே நடந்தது. "சாரதா தேவிக்கு இந்த மீன் பிடிக்கும் என்றால், நாளை மதிய உணவின் பொழுது நான் அந்த மீனை சாப்பிடப் போகிறேன்" என்று கூறினார் எனது மனைவி. "அப்படியானால் உனது விருப்பம். என்னால் அப்படி எல்லாம் சாப்பிட முடியாது. அந்த அளவு பக்தி எனக்கு இல்லை" என்றும் பதிலளித்தேன்.



நரேந்திரன் வீட்டின் உட்புறம் (1997)



கல்கத்தாவில் சுவாமி விவேகானந்தர் (நரேந்திரன்) பிறந்த வீட்டின் வாசல் மீது பதிக்கப்பட்டுள்ள கல்வெட்டு

நான் சொல்ல வந்த விஷயம் இதுதான். என்னைவிட அதிகப் பக்தியுடனும் சமர்ப்பணத்துடனும் தான் எனது மனைவி என்னுடன் வந்திருக்கிறார் என்பதை அன்னை சாரதா தேவி எனக்குப் புரியவைத்தார். அதற்காகவே இச்சம்பவம் நடந்தது போல் நான் உணர்ந்து தெளிந்தேன். ஆனால் ஆச்சரியம் என்னவென்றால், மறுநாள் மதியம் மீன் பரிமாறப்படவில்லை. விசாரித்த போதுதான் தெரிந்தது – வாரத்தில் இரு நாட்கள் மட்டுமே மீன் பரிமாறப்படும் என்று கூறினார்கள். அன்னை சாரதை என் மனைவிக்கு அந்தக் கஷ்டத்தைக் கூடக் கொடுக்கவில்லை.

இங்கு வாசகர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். மேற்குவங்கத்தில் மீன் இன்றுவரை சைவ உணவாகத்தான்

ஹல்தார்புகூர் குளம் : ஸ்ரீ ராமகிருஷ்ணரோ கல்கத்தா தட்சிணேஸ்வர கோவிலில் பக்திப் பித்துப் பிடித்தவராக அர்ச்சகர் பணியிலிருந்தார். அன்னை சாரதை கமார்புகூரில் சந்திரமணி தேவியுடன் (ஸ்ரீராமகிருஷ்ணரின் தாயார்) தனியாக இருந்தார். பெண்கள் சூரிய வெளிச்சம் வருவதற்கு முன்பே காலை 5 மணிக்குள் இக்குளத்தில் குளித்தாக வேண்டும். அன்னை சாரதைக்கோ இளம் வயது. தனியாகக் குளிக்கச் செல்ல பயம். சாரதைக்கு உதவியாக ஜெயா, விஜயா என்று இரண்டு சேடிப் பெண்கள் துவார பாலகியர் தினம்தினம் துணைக்கு வருவர்.





ஒரு செங்கல்லைக் கூட அகற்றாமல் அப்படியே புதுப்பிக்கும் பணி ஆரம்பமாகியிருந்த நேரம் (தற்போது ஸ்ரீராமகிருஷ்ண மடம் முழுமையாக அதைப் புதுப் பித்திருக்கிறது)

கருதப்படுகிறது. இதற்கு வங்காள பிராம ணர்களும் விலக்கல்ல. எனவே கல்கத் தாவைப் பொறுத்தவரையில் மீன் இல் லாத சைவ உணவு வேண்டுமென்றால், எங்காவது ‘மதராஸ் ஹோட்டல்’ என்று இருக்கும் உணவுவிடுதியைத் தேடித் தான் நாம் போயாக வேண்டும்.

டார்ஜிலிங்கிற்குத் தேனிலவு திட்டத் தைக் கைவிட்டுவிட்டு சுமார் பத்து நாட்களுக்குப் பிறகு சென்னை திரும்பி னோம். ஆண் குழந்தை பிறந்தால் நரேன் (சுவாமி விவேகானந்தரின் இயற்



காசிப்பூர் தோட்டம் : சுவாமி விவேகானந்தர், முதன்மைச் சீடர்கள், மற்றும் இல்லற பக்தர்களுடன் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தனது மகாசமாதிக்கு முன் தனது இறுதி நாட்களைக் கழித்த இடம்.

காசிப்பூர் தோட்டத்தில் நடந்த ஒரு முக்கிய நிகழ்ச்சி: ஒரு நாள் குருதேவர் நரேந்திரரைத் தம் அருகே அழைத்தார். அப்போது அறையில் யாரும் இல்லை. அவர்கள் இருவர் மட்டுமே இருந்தனர். குருதேவர் நரேந்திரரைத் தம் எதிரே உட்காரச் சொல்லி, அவரை உற்றுப் பார்த்தபடியே ஆழ்ந்த சமாதியில் மூழ்கினார். சிறிது நேரத்திற்குள் நரேந்திரர் தம் உடம்பில் மின்சாரம் போன்று ஒரு சக்தி பாய்ந்து செல்வதை உணர்ந்தார். சிறிது சிறிதாக அவரும் உலக நினைவை இழந்தார். தாம் எவ்வளவு நேரம் இப்படி சமாதியில் மூழ்கியிருந்தோம் என்பது அவருக்குத் தெரியவில்லை. உணர்வு திரும்பிக் கண்களைத் திறந்து பார்த்தபோது குருதேவர் கண்ணீர் வழிய அமர்ந்திருந்தார்.

நரேந்திரர் காரணம் கேட்டபோது,, “என்னிடமிருந்த எல்லாவற்றையும் இன்று உனக்குக் கொடுத்துவிட்டு நான் பக்கிரியாகிவிட்டேன். இந்த ஆற்றல்களின் மூலம் நீ உலகிற்கு மிகுந்த நன்மையைச் செய்வாய். அதன் பிறகுதான் நீ எங்கிருந்து வந்தாயோ, அந்த இடத்திற்குத் திரும்புவாய்” என்று கூறினார். இவ்வாறு தமது ஆற்றலை நரேந்திரரிடம் செலுத்தியதன் மூலம் உலகம் பெற்ற நன்மைகளை நிகழ்கால வரலாறு சொல்லிக் கொண்டிருக்கிறது; எதிர்கால வரலாறு இன்னும் சொல்ல இருக்கிறது.



கல்பதரு : 1886, ஜனவரி முதல் நாள், தான் ஓர் அவதார புருஷரே என்பதை ஒப்புக்கொண்டு பக்தர்களுக்கு ஸ்ரீராமகிருஷ்ணர் ஆசிகளை வழங்கிய இடம். அங்கேயிருந்த மாமரத்தின் அடியில் அவரைச் சுற்றி நின்ற அத்தனை பக்தர்களையும் நோக்கி, “உங்களிடம் இன்னும் என்ன சொல்வேன். நீங்கள் அனைவரும் ஆன்மிக விழிப் புணர்வு பெறுங்கள், உங்களை ஆசீர்வதிக்கிறேன்” என்று கூறியபடியே பாவ சமாதியில் மூழ்கினார். பக்தர்கள் ஒவ் வொருவரின் இதயத்திலும் இறை பேரானந்தத்தை உணரச் செய்தார். (தற்போது அந்த இடத்தில் புதிய மாமரம் நடப்பட்டுள்ளது)



ஆனூர் : கமார்புகூருக்கு இரண்டு மைல் தொலைவில் உள்ளது ஆனூர் விசாலாட்சி திருக்கோயில். கமார்புகூரிலிருந்து வயல் வரப்புகள் வழியாக நடைப் பயணமாகத்தான் செல்ல வேண்டும். ஒரு நாள் சில பெண் பக்தர்களுடன் சிறுவன் கதாதரன் அக்கோயிலுக்குச் சென்று கொண்டிருக்கும்போது வானம் முழுவதும் மழை மேகம் கருமை பூண்டிருந்தது. வெண்ணிறக் கொக்குகள் பறந்தன. அத்தகைய காட்சியைக் கண்டதுமே கதாதரானுக்குத் தேவியின் மீது மனம் பதிந்தது. அவளை நினைத்து அவளது திருவடித் தாமரைகளில் ஒன்றியதால் புற உணர்வையும் இழக்க நேர்ந்தது. இது கதாதரனுக்கு இரண்டாவது பாவ சமாதி அனுபவம்.

பெயர்) என்றும், பெண் குழந்தை பிறந்தால் குருதேவருக்கு இறைகாட்சி அளித்த அன்னை காளி பவதாரிணியின் பெயரையும் இடுவதாக வேண்டிக் கொண்டு, கல்கத்தாவில் இருந்து சென்னை திரும்பினோம். என் மனைவிக்குப் பெண் குழந்தைதான் இஷ்டம். ஆனாலும் நரேன் தான் பிறந்தான்.

சுமார் பத்து வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு பேலூர் பயணம். எனது




ஆனூர் கிராமத்து சிறுவர் – சிறுமியர்

மனைவிக்குக் குளிர் ஒத்துக்கொள்ளும் அளவிற்கு வெயில் ஒத்துக் கொள்ளாது. கடும் தலைவலி ஏற்படும். ஆதலால், பெரும்பாலான கோடை விடுமுறையில் இந்தியாவிற்குள் சுற்றிப் பார்ப்பது என்றால், நானும் எனது மகனும் மட்டுமே போய் வருவோம். எனது மனைவி எங்களுடன் வருவதைத் தவிர்த்து விடுவார்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு இந்தமுறை எனது மகனுடன் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தேன். 10 வருட இடைவெளியில் மீண்டும் அதே இடங்களுக்குப் பயணித்தபோது, ஒரே ஒரு மாற்றத்தைத்தான் நான் காண முடிந்தது. அது சென்ற முறை சென்றிருந்தபோது சுவாமி விவேகானந்தரின் பிறந்த இல்லத்தைப் புதுப்பிக்கும் வேலையை ஆரம்பித்திருந்தார்கள். இந்த முறை அவரது இல்லத்தை முழுமையாகப் பார்ப்பவர்கள் பிரமிக்கும் வண்ணம் புதுப்பித்து இருந்தார்கள்.

செடி ஒன்று சின்னதாக இருக்கும் பொழுது ஆடு, மாடுகள் அதைத் தின்று அழித்துவிடாத வண்ணம் வேலி போட்டுக் காக்க வேண்டும். ஆனால், அதுவே பெரும் மரம் ஆகிவிட்டால், அதற்கு யாராலும் எந்த ஆபத்தும் வராது. எனவே சிறு வயதிலேயே குழந்தைகளை வேலிபோட்டுக் காப்பது போல் ஆன்மிகச் சிந்தனைகளை விதைத்து, தவறான சிந்தனைகள் அவர்களைச் சிதைத்துவிடாத வண்ணம் காப்பது பெற்றோர்கள் கடமை. இதைச் செய்தால் குழந்தைகள் வளர்ந்த பிறகு அவர்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை எனக் குருதேவர் கூறுவார். அதற்கான முயற்சிகளில் ஒன்றுதான் மகன் உடனான எனது இந்தப் பயணம்.

இது எனக்கு இன்னொரு வித்தியாசமான அனுபவத்தைக் கொடுத்தது. கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டே வருவான். பயணத்தின்போது மட்டுமல்ல, வீட்டில் இருக்கும் போதும் அவ்வப்போது அவன் கேட்கும் கேள்விகளுக்கு ஆன்மீகம் சம்பந்தப்பட்டதாக இருந்தால் நான் அறிந்ததை அவனுக்குச் சொல்லிவிட்டு, "இதோ பார், நான் தந்த பதில்கள் எல்லாம் நான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் இடமிருந்தும் சுவாமி விவேகானந்தரிடம் இருந்தும் பெற்றவை. ஸ்ரீ ராமகிருஷ்ணரைப் பொருத்தவரை அவர் ஒரு ஞானக்கடல். எனது அறி



பவதாரிணி காளி : 'ஒருநாள் அன்னையின் திருமுன்னர் பாடிக் கொண்டிருந்தேன். அவளது அருட்காட்சிக்காக என்னையும் மீறி அழுதவாறே, "அம்மா, எவ்வளவு தூரம் அழைக்கிறேன். எதுவும் உன் செவிகளில் விழவில்லையா? ராமபிரசாதருக்குக் காட்சி அளித்தாய். ஏன் என் முன் மட்டும் வாராதிருக்கிறாய்?" என்று பிரார்த்தனை செய்தேன்.

அன்னையின் திருக்கோலத்தைக் காண முடியவில்லை என்ற துயரம் என் இதயத்தை வாட்டியது. ஈரத் துணியை முறுக்கிப் பிழிவது போல் என் இதயத்தை யாரோ கசக்கிப் பிழிவது போன்ற வேதனையையே நான் அனுபவித்தேன்.


ஒருவேளை அன்னையின் காட்சி கிடைக்காமலே போய் விடுமோ என்ற தவிப்பு என்னுள் அளவு கடந்த துயரத்தை உண் டாக்கியது. இப்படி வாழ்வதால் எவ்விதப் பயனும் இல்லை என்ற முடிவுக்கு வந்தேன். அப்போது கோயிலில் இருந்த வாளின் மீது தற்செயலாக என் பார்வை விழுந்தது. அந்தக் கணமே வாளால் என் உயிரை மாய்த்துக்கொள்ள எண்ணினேன். பைத்தியக் காரனைப் போல் ஓடிச் சென்று அந்த வாளை எடுத்தேன்.

மறுகணம் அகிலாண்டேசுவரியான அன்னை என் முன் தோன்றினாள். நான் நினைவிழந்து கீழே விழுந் தேன். வெளி உலகில் என்ன நடந்தது என்பதோ அந்த நாளும் மறுநாளும் எப்படிக் கழிந்தன என்பதோ எனக்குத் தெரியாது. ஆனால் என் இதயத்தின் ஆழத்தில் இதுவரை அனுபவித்திராத ஆனந்தம் பொங்கிப் பெருகுவதை உணர்ந்தேன். ஒளிமயமான அன்னையின் தரிசனம் பெற்றேன். வீடு, கதவு, கோயில் அனைத்தும் அடியோடு மறைந்து போனது போலிருந்தது! எங்கும் எதுவும் இல்லாதது போல் தோன்றிற்று! நான் கண்டதெல்லாம் கங்குகரையற்ற ஞானப் பேரொளிக் கடல் ஒன்றையே! எவ்வளவு தூரம் எந்தத் திசையில் நோக்கினாலும் ஒளிமயமான அலைகள் கொந்தளித்துக் குமுறியபடி என் முன்னோக்கிப் பெரும் வேகத்துடன் வந்து கொண்டிருந்த அந்தக் கடல்தான் தெரிந்தது. அந்த அலைகள் அப்படியே விரைந்து வந்து என்னைக் கௌவிக் கொண்டு ஆழங்காண முடியாத .பேரின்ப சாகரத்தில் மூழ்கடித்துவிட்டன.' – ஸ்ரீராமகிருஷ்ணர்

வால் எவ்வளவு புரிந்துகொள்ள முடியுமோ, அவ்வளவுதான் புரிந்து கொண்டிருப்பேன். அதைத்தான் நான் உனக்கும் சொல்லி இருப்பேன்.



திருமணமான புதிதில் தனது மனைவியுடன் கார்ட்டூனிஸ்ட் மதி



அதே இடத்தில் சுமார் 10 வருடங்களுக்குப் பிறகு தனது மகனுடன். பின்னணியில் தெரிவது பேலூர் மடத்தில் சுவாமி விவேகானந்தருக்காக எழுப்பப்பட்டுள்ள கோவில்.

ஒருவேளை நான் அரைகுறையாகப் புரிந்து கொண்டும் இருக்கலாம். ஆதலால் எனது பதில்களை அப்படியே வாங்கி கொள்ளாதே. நீயே அவர்களைப் படி.... மற்றபிற தத்துவ ஞானிகளையும் படி. எது சரி என்று உனது அறிவு ஏற்றுக் கொள்ளுகிறதோ, அதைப் பின்பற்று" அதன் பிறகு எல்லாம்வல்ல இறைவன் இருக்கிறார். உனது ஆர்வம் உண்மையானதாக இருந்தால், அவரே தன்னை உனக்கு உணர்த்துவார் என்று சொல்வேன்.

ஆன்மீகத்தில் இத்தகைய சுதந்திரம் வேண்டும். சுவாமி விவேகானந்தரின் போதனைகளுள் இதுவும் முக்கியமான ஒன்று. இத்தகைய ஆன்மீகமும் சுதந்திரச் சிந்தனையும்தான் சுவாமி விவேகானந்தர் உலகிற்குப் போதித்தது.

இறையருள் அனுமதித்தால் மீண்டும் ஒரு நல்ல தருணத்தில் சந்திப்போம். ●

LED, கலர் டி.வி, ரெஃப்ரிஜிரேட்டர், ஏர்கண்டிஷ்னர், வாஷிங் மெஷின், மற்றும் அனைத்து தரமான வீட்டு உபயோக பொருட்களை குறைந்த விலையில் வாங்க சிறந்த இடம்.

Easy Finance Options
BAJAJ Finance

Exchange offer

Gift Coupons Available

*Free gift with every purchase

*Free delivery with in city Limits

Open on Sundays

வந்து பாருங்கள்! வாங்கி மகிழுங்கள்!!

NM



*For purchase above RS.8000/- condition apply

LG	SAMSUNG	SONY	PHILIPS		ONIDA
Godrej	Whirlpool	SIEMENS	IFB	VIDEOCON	Prestige
ELGI ULTRA	Preethi	V-GUARD	BOSCH	micromax nothing like anything	
VOLTAS LIMITED	Butterfly®	TATA Sky	CG Crompton Greaves	USHA	HAVELLS
BPL EMERGENCY LIGHT	Preethi INDUCTION COOK TOP	EUREKA FORBES Your friend for life		CASCADE	VENUS WATER HEATER

D by sr printes 9843110277

நா. மகாலிங்கம் & கம்பெனி

68, Dr, Nanjappa Road, Near Central Bus Stand
Coimbatore - 641 018.
Ph: 2239834 / 2239841 / 2239803 / 2239811

Registered with Registrar of Newspapers for India No. 42582/83
Licensed to post without Pre-payment under Regn. No. TN/WR/CBE/016/WPP/2021-23

Date of Publication
28.1. 2021

Regd.No.CB/016/2021-23

OM SAKTHI - FEBRUARY - 2021